இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 228 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 28 புதன்கிழமை 12.07.2017

## ஒற்றையாட்சியை மையப்படுத்தியே புதிய அரசமைப்பு

### ராணுவத்தை அரசு காட்டிக்கொடுக்காது என்கிறார் அயலுறவு அமைச்சர் ரவி



கொழும்பு, ஜூலை 12
பௌத்த மதத்தைப் பாதுகாத்து அதற்குரிய கௌரவத்தை வழங்கி ஒற்றையாட்சி முறைமையின் கீழேயே அரசமைப்பு உருவாக்கப்படும் என்று அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
அத்துடன், முப்படைகளை அரசு ஒருபோதும் காட்டிக்கொடுக்காது என்றும் அவர் கூறினார்.
முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வி.ஏ. சுகததாஸவின் 44 ஆவது நினைவுதின >> 25

## சத்திரச் சந்திக்கு அருகில் நவீன அங்காடித் தொகுதி

### ரூ.1000 மில்லியன் ஒதுக்கீட்டில் அமைப்பதற்கு நேற்று அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 12
கொழும்பு அரசின் பாதீட்டில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில், யாழ்ப்பாணம் சத்திரச் சந்திக்கு அண்மையில் நவீன அடுக்குமாடி அங்காடித் தொகுதி அமைக்கப்படவுள்ளது. செம்மணியில் அமைப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தபோதும், தற்போதுசந்திரச்சந்திக்குத் திட்டம் மாற்றப்பட்டுள்ளது. மாவட்டச் >> 25

## அரசிலிருந்து விலகவுள்ள சு.கவின் அதிருப்திக் குழு

### மைத்திரியிடம் விரைவில் நிபந்தனை முன்வைப்பு

கொழும்பு, ஜூலை 12
கூட்டு அரசிலிருந்து விலகிச் சுயாதீனமாக இயங்கப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர், முக்கிய நிபந்தனைகள் அடங்கிய சிறப்பு அறிக்கையொன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் விரைவில் கையளிக்கவுள்ளனர். >> 24

## ஐ.நா. சிறப்பு நிபுணர் இன்று வவுனியாவுக்கு

### நீதிபதிகளைச் சந்தித்து முக்கிய பேச்சு



கொழும்பு, ஜூலை 12
மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்புத் தொடர்பான >> 25

## மைத்திரி – ரணில் அரசை அடிபணிய வைப்போம்

### தேசிய தொழிற்சங்கச் சம்மேளனம் சூளுரை

கொழும்பு, ஜூலை 12
சைட்டம் பிரச்சினை தொடர்பில் தாங்கள் முன்னெடுக்கவுள்ள மாபெரும் போராட்டத்தால் மைத் >> 25

## துன்னாலை இளைஞரின் இறுதி நிகழ்வுகள் நேற்று

### பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடந்தது



யாழ்ப்பாணம், ஜூலை 12
வடமராட்சி கிழக்கில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. அந்தப் பகுதியில் அசம்பாவிதங்கள் >> 25

## ஹைஏஸ்ஸில் வந்தோரால் பாடசாலை மாணவி கடத்தல்!

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்: கடத்தியவர்கள் சிக்கவில்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 12
வலிகாமம் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவி ஒருவர் நேற்று ஹைஏஸ் வாகனத்தில் வந்தோரால் கடத்தப்பட்டார். கடத்தியவர் >> 25

## பௌத்தத்துக்கே முதலிடம் ஒற்றை ஆட்சியே தொடரும்

### தேரர்களிடம் மைத்திரி மீண்டும் வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 12
புதிய அரசமைப்பில் ஒற்றை ஆட்சி முறையும் பௌத்த மதத்துக்கு உள்ள முதன்மை இடமும் ஒருபோதும் இல்லாதொழிக்கப்படமாட் >> 25

## தகவல் அதிகாரிகளுக்கு முழுமையான சுதந்திரம்

### மேலதிகாரிகளைக் கேட்டுத் தகவல் வழங்கவேண்டியதில்லை என்கிறது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 12
தகவலுக்கான உரிமைக் கோரிக்கைப் படிவத்தின் ஊடாகத் தகவல்கள் கோரப்படும்போது திணைக்களத் தலைவர்களிடம் கேட்டுப் பதில் வழங்க >> 25

## கட்டுப்பாடில்லாத அதிவேகம் பறித்தது இளைஞனின் உயிரை

### வீதியைவிட்டு விலகி மோ.சைக்கிள் சமிக்ஞைக் கம்பத்துடன் மோதியது



யாழ்ப்பாணம், ஜூலை 12
பளை, தர்மகேணியில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து நேற்றுக் காலை 10 மணியளவில் நடந்துள்ளது. >> 25

## இலங்கை இராணுவ அதிகாரி அமெரிக்காவில் தலைமறைவு

### பன்னாட்டுப் பொலிஸ் மூலம் கைது செய்ய நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 12
வாசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்க தலைமறைவாகியுள்ளார் 'என்று செய்திகள் வெளியாகியுள்ளன.
அவரைக் கைது செய்வ >> 25

## இலங்கைக்குக் கடத்தவிருந்த 700 கிலோ கடலட்டைகள் இராமேஸ்வரத்தில் சிக்கின



இராமேஸ்வரம், ஜூலை 12
"தமிழகம், இராமேஸ்வரம் அருகே தி.மு.க. உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான தோட்டத்திலிருந்து 30 லட்சம் ரூபா (இலங்கை மதிப்பில் >> 25

## மைத்திரி நாளை பங்களாதேஷுக்கு

கொழும்பு, ஜூலை 12
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாளை வியாழக்கிழமை பங் >> 23

### சிறுப்பிட்டி மயான விவகாரம்

## மதிலுடைத்ததாகத் தேடப்பட்ட 40 பேர் நேற்று நீதிமன்றில் சரண்

### 12 பேருக்கு மட்டுமே பிணை கிடைத்தது

மல்லாகம், ஜூலை 12
புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி, கிந்துப்பிட்டி மயானத்தின் சுற்று மதிலை இடித்தனர் என்ற குற்றச்சாட்டில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் 40 பேர் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்றுச் சரணடைந்தனர். அவர்க >> 24







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டிருப்பதே தமிழருக்குப் பலம்

## மாற்றுத் தலைமைக்கு இடமில்லை என்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி



யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழர்களுக்கான மாற்றுத் தலைமைக்கு ஒரு போதும் இடமில்லை. தற்போதைய தலைமையின் கீழ் ஒற்றுமையாகச் செயற்படுவதே தமிழர்களுக்குப் பலம் தரும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கனடாவின் இலங்கைக்கான தூதுவர் ஷெல்லி வைற்றிங் வடக்கு முதலமைச்சரை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தமிழர்களுக்கான மாற்றுத் தலைமை தொடர்பில் ஆராயப்பட்டது. அதில் வடக்கு முதலமைச்சர் மாற்றுத் தலைமையாக உருவெடுக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் வினவினர்.

"மாற்றுத் தலைமை தொடர்பில் முடிவு எடுப்பதற்கு ஒன்றுமில்லை. முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். எமது அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இந்த இடத்தில் எமது தனிப்பட்ட குரோதங்கள், முரண்பாடுகளை முன்வைத்து பிரிவுகளை ஏற்படுத்துவது எமக்கு நல்லதல்ல. இங்கு எந்தவித பிரிவினைக்கும் இடமில்லை." என்று முதலமைச்சர் பதிலளித்தார்.

கனடா தூதுவருடனான சந்திப்புத் தொடர்பாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

"இன்று (நேற்று) கனடா தூதுவரைச் சந்தித்தேன். அவர் தனது பதவியில் இருந்து விடை பெற்றுச் செல்வதால் மரியாதையின் நிமித்தம் சந்திப்பை மேற்கொண்டார். 4 வருடங்களின் முன்பு வட பகுதிக்கு வரும்போது, அரசபுலனாய்வாளர்கள் பின்தொடர்ந்து வருவார்கள். அந்த நிலை தற்போது மாறியுள்ளது. நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு செல்கின்றீர்கள் என்று அவர் குறிப்பிட்டார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் திறக்காமை மனவருத்தத்தைத் தருகின்றது. அந்த அலுவலகம் செயற்பட்டால், மக்கள் தமது பிரச்சினைகளை உரிய முறையில் தீர்த்துக்கொள்ள ஏதுவாக இருக்கும். கனடாவாழ் மக்கள் தமது உதவிகளைச் செய்வதற்குக் காத்திருக்கின்றார்கள். அவற்றை எதிர்காலத்தில் சரியான முறையில் வடமாகாண மக்களுக்கு நடைமுறைப்படுத்துவோம் என்று உறுதியளித்தார்." என்று அவர் கூறினார். (ற-ஐ-106)

## உதவித் திட்டம் பெறுவோருக்கு வவுனியாவில் கலந்துரையாடல்



வவுனியா, ஜூலை 12

மறுவாழ்வு வழங்கப்பட்ட போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடல் வவுனியா, சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் பி.ப. 3 மணியளவில் நடைபெற்றது.

2017ஆம் ஆண்டுக்கான வாழ்வாதாரத் திட்டங்களுக்காக வடக்கின் 5 மாவட்டங்களில் இருந்து தலா 60 பயனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யட்டுள்ளனர். தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித் திட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதாரத் திட்டச் செயற்பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டு சரியான திட்டத்தைத் தெரிவுசெய்வது தொடர்பான நேர்முகமும் நடைபெற்றது. திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இதனை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடக்கு மாகாண உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், திணைக்களப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

## ஒளிப்படக் கண்காட்சி ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 12

"எனது கனவுகள், எனது திறன்கள், எனது பயணம்" எனும் தொனிப்பொருளிலான ஒளிப்படக் கண்காட்சி நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தால் பொருளாதார நிலை மாற்றத்துக்கான சிறப்புத் திறன்களை மேம்படுத்தல் எனும் கருத்திட்டத்தின் கீழ் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

கண்காட்சிக் கூடத்தைக் கனேடியத் தூதுவர் ஷெல்லி வைற்றிங் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்தக் கண்காட்சி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்து வந்த விடயங்கள், தொழிலுக்கான திறன்கள் தொடர்பானதாக அமைந்துள்ளது. மு.ப. 10 மணி முதல் மாலை 6 மணிவரை எதிர்வரும் 3 தினங்கள் கண்காட்சி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் யூ.டி. தீபன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன் உட்படகனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தில் கற்கும் மாணவர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-10,106)

## டெங்குக் கட்டுப்பாடு: ராஜிதவிடம் அறிக்கை

கொழும்பு, ஜூலை 12

டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் நேற்றுக்காலை கையளிக்கப்பட்டது. நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள குருதி மையத்தில் வைத்து அறிக்கை அமைச்சரிடம் சமர்ப்பி க்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 4 வாரத்துக்குள் டெங்குநுளம்புகளை 50 சதவீதமாக குறைப்பது தொடர்பாகவும் அதில் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியா, நேபாளம், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் 4 மருத்துவர்கள் அடங்கிய குழுவே அறிக்கையைத் தயாரித்துள்ளது.

## முதியோர் தின கொடி மைத்திரிக்கு அணிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

பன்னாட்டு முதியோர் தின கொடி மாதத்தின் முதலாவது கொடி அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுக்கு அரச தலைவர் செயலகத்தில் வைத்து நேற்று அணிவிக்கப்பட்டது என்று அரச தலைவர் செயலக ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நிகழ்வில் தேசிய முதியோர் சபையால் முதியோர்களுக்காக வெளியிடப்பட்ட முதலாவது பத்திரிகையான முதியோர் பத்திரிகையின் முதற் பிரதி தேசிய முதியோர் சபையின் உறுப்பினர் கலாநிதி நீலா குணசேகரவால் அரச தலைவருக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான எஸ்.பி. திசாநாயக்க, சாகல ரத்னாயக்க, மலிக் சமரவிக்கிரம, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் மகிந்த செனவிரத்ன, தேசிய முதியோர் செயலகப் பணிப்பாளர் சுவிந்த, எஸ். சிங்கப்புலி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-10)

## தமது அதிகார வரம்பை மீறிவிட்டனர் பொலிஸார்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

அதிகாரத்தை மீறிய பொலிஸாரின் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் இளைஞர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொலிஸாரின் ஆணைக்குக் கட்டுப்படாமல் செயற்படுகின்றார்கள் என்றால் அதை வேறு வகையில் கையாள வேண்டும். இளைஞர் மீதான சூட்டுச் சம்பவம் தவறானது.

அடுத்த காவலரணில் இருந்த பொலிஸாருக்குத் தகவல் வழங்கிக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். பொலிஸாருக்கு உள்ள அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். ஒருவரைச் சுட்டுக்கொலை செய்வதென்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. - என்றார். (ஐ-106)



புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுக்கொண்ட லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்தார். அரச தலைவரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இராணுவத் தளபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அரச தலைவரைச் சந்திக்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு இது வழமை. இராணுவத் தளபதி நினைவுச் சின்னமொன்றை அரசதலைவருக்கு வழங்கினார் என்று அரச தலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு போக்குவரத்தை தீர்மானிக்கும் சிறப்புக் கலந்துரையாடல் 18ஆம் திகதி

## போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 12
எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள கலந்துரையாடல் வடக்கு மாகாண போக்குவரத்துத் துறையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் கலந்துரையாடலாக அமையும்.
இவ்வாறு வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இ.போ.ச. சாரதிகள், நடத்துநர்களுடனான சந்திப்பு நடைபெற்றது. மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு அமைச்சர் இவ்வாறு கூறினார்.
வவுனியாவில் 195மில்லியன் ரூபாசெலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் திறந்துவைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. இன்று (நேற்று) இது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி கலந்துரையாடல் நடத்தப்படும்.
வட மாகாணத்தின் போக்குவரத்து தொடர்பான அதிகாரசபை உருவாக்குவாக்குவதற்கான நிதியச்சட்டமும், தனியார் துறையும், இ.போ.ச. பேருந்துகளும் இணைந்த நேர அட்டவணையில், சேவை வழங்குதல், பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து எவ்வாறு சேவை வழங்கவேண்டும் போன்ற பல்வேறு ஒழுங்குவிதிகள் கடந்த மாதம் 19 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதை மீறுவோருக்கு ரூபா 10ஆயிரம் தண்டப் பணமும் அல்லது 2வருடச் சிறைத் தண்டனையும் அல்லது இரண்டும் சேர்த்து அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது.
பொது மக்களுக்குப் பாதுகாப்பான சேவை வழங்கவேண்டும் என்பதே எங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்கின்றது. அதற்காக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இ.போ.சபையினரால் இணைந்த நேர அட்டவணை மாவட்டங்களுக்கிடையில் மட்டுமல்ல, உள்ளூர் சேவைகளுக்கும் தயாரிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. அதை நாங்கள் கருத்தில் எடுத்து நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம்.
இணைந்த நேர அட்டவணையில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றைச் சீர் செய்வதற்காக 18ஆம் திகதிக்கு முன்னர் என்னுடைய அதிகார சபையின் தலைவருக்கு வழங்க வேண்டும் என்று இரண்டு தரப்பினரையும் கேட்டிருக்கின்றோம். எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள கலந்துரையாடல் முக்கியமானதாக அமையவுள்ளது. - என்றார். (ற)

## வதந்தி பரப்புகின்றனர் என வவுனியாவில் ஊவர்வலம்

வவுனியா, ஜூலை 12
வவுனியாவில் இயங்கும் சிறுவர் இல்லம் தொடர்பில் சில இணையத்தளங்கள் வதந்திகளைப் பரப்புகின்றன என்று தெரிவித்து நேற்று வவுனியாவில் கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது.
வேப்பங்குளம் அன்பகத்திலிருந்து ஆரம்பமான ஊர்வலம் மன்னார் சாலை வழியாகச் சென்று மாவட்டச்செயலகத்தை அடைந்தது. மாவட்ட செயலரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. அங்கிருந்து கண்டி சாலை வழியாகச் சென்று வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் ஆகியவற்றிலும் மனுக்கள் கையளிக்கப்பட்டன.
சிறுவர் இல்லத்தின் நிர்வாகத்தினர், நலன்விரும்பிகள் எனப் பலர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். திட்ட மிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட பொய்யான பரப்புரைக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர். (ற-ஜ-10)




## விதிமுறை மீறுவோருக்கு தண்டம்: இறுதி அறிக்கை அரச தலைவரிடம்

கொழும்பு, ஜூலை 12
சாலைப் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோரிடம் அறவிடும் தண்டம் தொடர்பாக ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அரச தலைவரிடம் நேற்றுக் கையளித்தது.
போக்குவரத்து, சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சின் செயலாளர் நிஹால் சோமரத்ன அந்த அறிக்கையைக் கையளித்தார்.
போக்குவரத்துச் சட்டங்களை மீறுவதைக் குறைக்கும் வகையிலும் , சாலை விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடனும் சாலைப் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமைக்காகக் குறைந்தபட்ச தண்டப்பணமாக 25 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற யோசனை 2017 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவு களில் முன்மொழியப்பட்டிருந்தது.
இந்த முன்மொழிவுகளுக்கு பல்வேறு தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் வந்தன. இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அரச தலைவரால் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையே அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான நிமல் சிறிபால டிசில்வா, மகிந்த சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (றஜ-10)

## நீதியரசர்கள் மூவர் நேற்றுப் பதவியேற்பு

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று உறுதியுரை எடுத்தனர்.
மேல் நீதிமன்ற நீதிபதிகளான ஏ.ஏ.ஜீ.ஆர்.அமரசேகர, ஏ.எல். கிரான் குணரத்ன மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த மன்றாடியார் அதிபதி ஜனக் டி சில்வா ஆகியோரே மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக அரசமைப்புச் சபையின் பரிந்துரையில் அரச தலைவரால் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அரச தலைவர் செயலகத்தில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை வழங்கிவைத்தார். (வ)

## கொரிய இளைஞர் மாநாட்டுக்கு இலங்கையர் நால்வர் பயணம்

மட்டக்களப்பு, ஜூலை 12
கொரியாவில் இடம்பெறும் "ஆசியாவின் எதிர்காலம் இளைஞர் முகாம்" எனும் தொனிப்பொருளிலான இளைஞர் மாநாட்டுக் இலங்கையிலிருந்து நான்கு பேர் சென்றுள்ளனர் என்று கொரிய இளைஞர் நிறுவனங்களின் தேசிய சபை தெரிவித்துள்ளது.
மட்டக்களப்பு, காலி, அம்பாறை மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே கொரியா பயணித்துள்ளனர். இந்த மாநாடு எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
பன்னாட்டுப் பரிமாற்று நிகழ்ச்சி வேலைத் திட்டத்தின் கீழ் ஆசியாவின் 24 நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். ஆசியாவின் உறுதியான கலாசார இணைவுக்கான அத்திபாரத்தை இடவும், பன்முக கலாச்சாரத்தை வளப்படுத்தவும், பல்வேறு கலாசாரப்பின்னணிகளைக் கொண்ட இளைஞர்கள் தங்களது கலாசாரப் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்க ளைப் பகிர்ந்து கொள்ள இந்த மாநாடு கைகொடுக்கும் என்று கொரிய இளைஞர் நிறுவனங்களின் தேசிய சபை தெரிவித்துள்ளது. கொரியாவின் பால்நிலை மற்றும் குடும்ப ஒப்புரவு அமைச்சும் கொரிய இளைஞர் நிறுவனங்க ளின் தேசிய சபையும் இணை ந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. (ஜ-10, 46)

## "அபேற்" பாவனைக்கு எதிராக மன்னாரில் கண்டன ஆர்ப்பாட்டம்

மன்னார், ஜூலை 12
நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் போடப்படும் 'அபேற்' எனும் இரசாயனக் கலவையை நீர் நிலைகளுக்குள் போட வேண்டாம் என்று வலியுறுத்தி , மன்னாரில் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மாதர் சங்கங்களின் பிரதி நிதிகள் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
டெங்கு மற்றும் மலேரியா நோயைக் கட்டுபடுத்துவதற்காக தென்பகுதியில் இருந்து வருகை தந்துள்ள சிறப்பு சுகாதார ஊழியர்களைக் கொண்ட குழுவினர் மன்னாருக்கு வந்துள்ளனர். அவர்கள் மன்னாரில் உள்ள வீட்டுக் கிணறுகள் மற்றும் ஏனைய நீர் நிலைகளுக்குள் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் அபேற் எனும் இராசாயனக் கலவையைப் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். குடி தண்ணீர் கிணறுகளில் குறித்த 'அபேற்' எனும் இரசாயனக் கலவையை போடுவதால், அந்தத் தண்ணீரைக் குடிக்கும் மக்களுக்குச் சிறு நீரக பிரச்சினை ஏற்படும் என்று கூறப்படுகின்றது. நிலத்தடி நீர் மாசடையும் தன்மை உள்ளது" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக போராட்ட இடத்துக்கு வருகை தந்த மருத்துவர்கள் தெரிவித்ததாவது,
"இந்த இரசாயன கலவை உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. சுமார் 50 வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படுகிறது. சிறு நீரக பாதிப்பு மற்றும் தொற்று நோய்கள் ஏற்படாது எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனினும் மக்களின் வேண்டுகோளுக்கினங்க இரசாயனக் கலவை கிணறுகளில் போடுவது நிறுத்தப்படும்." என்று சம்பவ இடத்துக்கு வந்த மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஜ-10,56)

## கட்டுக்கரை குளத்தை அபிவிருத்தி செய்ய கோரிக்கை

மன்னார், ஜூலை 12
கட்டுக்கரைக் குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். அது தொடர்பான வேலைத்திட்டங்களை உரிய அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்.
இவ்வாறு முருங்கன் கட்டுக்கரைக் குள திட்ட விவசாய அமைப்புக்களின் சமாசம் கோரிக்கை விடுத்தது. நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, மன்னார் மாவட்ட விவசாயிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதிலேயே இவ்வாறு கோரப்பட்டது.
"கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 32 ஆயிரம் ஏக்கர் வரையில் பயிர் செய்யப்படுகின்றது. குளம், வாய்க்கால்கள் கட்டுமானம் திருப்தியாக இல்லை. குளத்தின் வான் 2 அடி உயர்த்தப்பட வேண்டும். வாய்க்கால் அனைத்துக்கும் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். குளத்தின் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் கட்டுக்கரைக் குளத்தினுள் இருந்து மண் அகற்றப்பட வேண்டும்" என்று கோரப்பட்டது. (ஜ-10, 56)

## சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுக்க பொலிஸ் அரண்கள் அமைக்க வேண்டும்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜூலை 12
சட்டவிரோத மண் அகழ்வுகளில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்குத் தற்காலிகப் பொலிஸ் அரண்களை அமைக்க வேண்டும் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.
மண்முனை தென்மேற்குப் பிரதேசத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் இரவு நேரங்களில் சட்ட விரோத மணல் அகழ்வில் பலர் ஈடுபடுகின்றனர். அவ்வாறு அகழப்படும் மணல் ஒரு சில பிரதான சாலைகளில் ஊடாகக் கொண்டு செல்லப்படுகின்றன. அவ்வாறான சாலைகளில் தற்காலிக பொலிஸ் அரண்களை அமைப்பதன் மூலமாக மணல் அகழ்வில் ஈடுபடுவோரைக் கைது செய்ய முடியும். சட்ட விரோத மணல் அகழ்வின் ஊடாகப் பிரதேசத்தில் உள்ள மண் வளம் சூறையாடப்ப டுகின்றது. பிரதேசத்தில் உள்ளவர்கள் மண்ணைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் உள்ளது. - என்றார்.
அதேவேளை பிரதேசத்தில் தற்காலிக காவலரண்களை அமைப்பதற்குக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஜ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவி நீக்கும் தகவல் எனக்குத் தெரியாது!

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 12
"அமைச்சுப் பதவியில் இருந்து என்னை நீக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று ஊடகச்செய்தி ஊடாகவே அறிந்தேன். இது தொடர்பில் கட்சித் தலைமையோ, வேறு எவருமோ என்னுடன் இதுவரை பேசவில்லை"

இவ்வாறுவடக்குமாகாணபோக்குவரத்துஅமைச்சர்பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண போக்குவரத்து தொடர்பில்வவுனியாமாவட்டசெயலகத்தில்நேற்றுக்கலந்துரையாடல் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலின்பின்னர்செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"என்னைப் பொறுத்தவரை எனது கட்சியுடன்தான் இருக்கின்றேன். கட்சித்தலைவரோடும்பேசுவதற்கு இருக்கினறேன். ஊடகமொன்றில் வெளியான செய்தியின் உண்மைத்தன்மைஎனக்குத்தெரியாது. என்னைப்பொறுத்தவரையில் எனக்கு அமைச்சுப் பொறுப்பு தேவை என்று அடம் பிடித்துக் கொண்டுஇருக்கவேண்டியஅவசியமில்லை. எவ்வாறுசேவைவழங்கியிருக்கின்றேன் என்று மக்களுக்குத் தெரியும். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்" என்று மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேலும்தெரிவித்தார்.

(வ)



# வடிகாலுக்குள் பாய்ந்தது ஓட்டோ

## இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வேகமாகப் பயணித்த முச்சக்கர வண்டி சாலையோரம் வடிகாலுக்குள்பாய்ந்துவிபத்துக்குள்ளானதில் அதன்சாரதிபடுகாயமடைந்தநிலையில்யாழ்ப்பாணம்போதனாமருத்துவனையில்சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம்நேற்றுஇரவு10மணியளவில் யாழ்ப்பாணம், கே.கே. எஸ் சாலை முட்டாசுக் கடைச் சந்தியில்இடம்பெற்றது. யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைச்சேர்ந்தவிஜிதன் (வயது 24) என்றஇளைஞனே படுகாயமடைந்து மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்கே.கே.எஸ்சாலை வழியாக காங்கேசன்துறைநோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி திடீர் என முட்டாசுக்கடைச் சந்தியில் உள்ள வடிகாலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. அதன் சாரதி படுகாயமடைந்தார். அவரை அந்தப்பகுதியில்நின்றவர்கள்உடனடியாகவேயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்சேர்த்தனர்.

முச்சக்கரவண்டிமுன்சில்லுகழன்றும், கண்ணாடிகள்நொறுங்கியும் சேதமடைந்தது. சம்பவ இடத்துக்கு சிறப்புஅதிரடிப்படையினர்வருகைதந்திருந்தனர். யாழ்ப்பாணம்போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். முச்சக்கர வண்டி குறித்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு பொலிஸ் நிலையம்கொண்டுசெல்லப்பட்டது.

இதேவேளை, மற்றுமொருவிபத்து கே.கே.எஸ் வீதியில் நேற்று இரவு இடம்பெற்றத்தாக தெரிவிக்கப்பட்டது. அந்த விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்சேர்க்கப்பட்டுள்ளார். துவிச்சக்கரவண்டியில்பயனித்தஅவரை வாகனம் ஒன்று மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-21)

# கிழக்குமாகாணத்தின்அபிவிருத்திக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## புதிய ஆளுநர் வேண்டுகோள்



திருமலை, ஜூலை 12
நல்லிணக்கம், வளமானநாட்டைக் கட்டியெழுப்புதல்உள்ளிட்டவிடயங்கள் அரச தலைவரின் நோக்கங்களாக உள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டுகிழக்குமாகாணத்தை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு அனைவரும்ஒத்துழைப்புவழங்கவேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகெல்லாகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட ரோஹித போகொல்லாகம திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார். கடமைகளைப்பொறுப்பேற்ற பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கிழக்கு மாகாண ஆளுநராக என்னைத்தெரிவு செய்தமைக்கு அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்குநன்றிதெரிவித்துக் கொள்கின்றேன். கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன். கல்வித்துறையில்பின்தங்கியநிலமை, வேலையில்லாப் பிரச்சினை போன்ற பல காரணங்களால் இந்த மாகாணத்தின் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. நட்புணர்வு ரீதியிலான அடிப்படையில்செயற்பட்டுகிழக்குமாகாணத்தையும் நாட்டையும் அபிவிருத்தி பாதைக்கு இட்டுச்செல்வது இன்றியமையாது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது..- என்றார். நிகழ்வில் பொருளாதார அபிவிருத்திபிரதியமைச்சர்அமீர் அலி, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்அப்துல்லாஹ் மஹ்ரூப், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர், கிழக்கு சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவத்தி கலப்பத்தி மற்றும் அமைச்சுக்களின் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஜ-10, 45)

# கால்நடைவளர்ப்போர் நலன்கருதி பளையில் கால்நடை மருத்துவர்கள்

யாழ்ப்பாணம் ஜூலை 12
பளைப் பிரதேசத்தில் கடமையாற்றி வந்த கால்நடை மருத்துவர் விடுமுறையில் சென்றுள்ளார்.

எனினும் கால்நடை வளர்ப்பாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அங்கு இரண்டு கால்நடைமருத்துவர்கள்கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர்எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

பளைப்பிரதேசத்தில்கடமையாற்றும் கால்நடை மருத்துவமனையில்கடமையாற்றிவந்தமருத்துவர் வெளிநாடு செல்வதற்காக விடுப்பில் சென்றுள்ளார்.

எனினும் அப்பகுதியில் கால்நடை மருத்துவம் பாதிப்படையாத வகையில் இருக்கும் பொருட்டு இரண்டு கால்நடை மருத்துவர்கள் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் ஊடாக பளைப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர்கள்பாதிப்புறாதவகையில்அங்கு கால்நடைகளுக்கான வைத்தியம் இடம்பெற்றுவருவதாக அவர்மேலும்தெரிவித்தார்.

(4,8)

# மகிந்தவின் சாரதியின் பிணைக் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 12
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சாரதி திஸ்ஸ விமலசேன மற்றும் புத்தளம் நகரசபையின் முன்னாள் உறுப்பினர் லால் பிரியந்த பீரிஸ் ஆகியோரின் பிணைக் கோரிக்கையை கொழும்பு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

கடுவலைப் பிரதேசத்தில் உள்ள காணிமறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச்சொந்தமான, காணியில் சட்ட விரோதமான முறையில் கல்குவாரியை நடத்தினர் . என்று இவர்கள்மீதுகுற்றம்சாட்டப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டஇருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதவான், சந்தேகநபர்களின்பிணைமனுவை நிராகரித்தார். எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில்வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இரண்டாவது சந்தேக நபரான புத்தளம் நகரசபையின் முன்னாள் உறுப்பினர் லால் பிரியந்த பீரிஸ், தான் நீதிமன்றில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தார். இதன்போது அச்சுறுத்தல் எதுவும் காணப்பட்டால் அது குறித்து நீதிமன்றுக்கு அறிவிக்குமாறும் நீதவான் கூறினார். ஒப்புதல்வாக்குமூலம்அளிக்கஅனுமதி வழங்குவதுகுறித்துஎதிர்வரும்18 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

(ஜ)

# பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக மட்டு. அரச உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு



மட்டக்களப்பு, ஜூலை 12
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும்அரசஉத்தியோகத்தர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமையை கண்டித்து மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் காந்தி பூங்கா வரை இடம்பெற்றது.

"மட்டக்களப்பு மாவட்ட அரச ஊழியர்களின் சுயாதீனசேவை மீதான வெளியாரின் அநாவசிய தலையீட்டைஒழிப்போம்"எனும்தலைப்பில் இந்தக் கவனவீர்ப்பு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது. "மட்டக்களப்புமாவட்டஅரசஉத்தியோகத்தர்கள் மீது சில குழுக்கள் பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றன. இந்தக் குழுக்கள் அரச உத்தியோகத்தர்களைக் கடமைகளைச் செய்யவிடாது. உளவியல் ரீதியானதாக்கத்தைஏற்படுத்துகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்தஇடத்திலும்அரசஉத்தியோகத்தர்கள்ஊழல்களில்ஈடுபடவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். ஊர்வலத்தில் மட்டக்களப்பு மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும், பிரதேச செயலகங்கள், பிரதேசசபைகளின் உத்தியோகத்தர்கள்கலந்துகொண்டனர்.

(ஜ-10)

# இனவாதத்தைத்தூண்டசிலஊடகங்கள்முயற்சி

## மத்திய மாகாண முதலமைச்சர் சாடல்

கண்டி, ஜூலை 12
சில ஊடக நிறுவனங்கள் நாட்டில் சகவாழ்வைஏற்படுத்தமுயற்சிசெய்கின்றன. ஒரு சில ஊடகங்கள் இனவாதத்தைத் தூண்டு வதற்கு முயற்சிசெய்கின்றன.

இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கதெரிவித்தார். ஹற்றன்கல்விவலயத்துக்குட்பட்ட ஹற்றன் புனித கெப்ரியல் மகளிர்வித்தியாலயத்தில்புதியகட்டடத்திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிலஊடகங்கள்புதியஅரசமைப்பை வைத்துக்கொண்டு பௌத்த மதத்தின் இடத்தை இல்லாதொழிப்பதாகவும், நாட்டைப் பிரிப்பதாகவும் செய்திகளை வெளியிடுகின்றன. இந்தநாட்டில்இரண்டு சீர் திருத்தங்கள் நடைபெற்றன. இதனால் பௌத்தமதத்துக்குஎந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை. இன்று நடைபெறும்சீர்திருத்தத்திலும்பௌத்தமதத்தில் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. அரச தலைவரின் ஒரே நோக்கம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் இருந்து கொண்டு சகவாழ்வை முன்னெடுப்பதாகும் - என்றார்.

(ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் சந்தையின் புதிய கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இன்று

மானிப்பாய், ஜூலை 12

மானிப்பாய் பொதுச் சந்தைத் தொகுதியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் கட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

"முதன்மை அதிதியாக கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்துகொண்டு அடிக்கல் நட்டுவைப்பார். நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முயற்சியால் மானிப்பாய் பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதி ஆகியவற்றுக்கு புதிய கட்டடங்களை அமைக்க கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சால் 45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் இந்த ஆண்டு 30 மில்லியன் ரூபா நிதியும் அடுத்த ஆண்டு 15 மில்லியன் ரூபா நிதியும் விடுவிக்கப்படும்" என்று வலி. தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் கு.சற்குணராசா தெரிவித்தார்.

(வ)

# "யாழ்.பாடி" கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவுள்ள யாழ். பாடி கலாசார மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. இந்த மலருக்கான ஆக்கங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், மாணவர்கள், நிறுவனங்களைச் சார்ந்த படைப்பாளிகளிடமிருந்து பிரதேசத்தின் கலை, கலாசாரம், சமூக வாழ்வியல், கிராம வரலாறு, தொன்மைகள், நாட்டுப்புறவியல், ஆன்மிகம், மரபுரிமைகள், நிறுவனங்களின் விவரங்கள் போன்ற விடயங்களை பிரதிபலிக்கும் வகையிலான கட்டுரைகள் கவிதைகள், சிறுகதைகள், ஆவணத்தரவுகள், விமர்சனங்கள் போன்ற எழுத்தாக்கங்களை வெளிக் கொணரக்கூடிய வகையில் இந்தநூல் வெளியிடப்படவுள்ளது. மேலும் ஏலவே வெளியிடப்பட்ட மலரில் குறிப்பிடப்படாத கலைஞர்களின் விவரங்களும் இணைக்கப்படவுள்ளன. இவை சார்ந்த ஆக்கங்களையும் விவரங்களையும் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப்பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறும் அவற்றில் தரமானவற்றை மலர்க்குழுவின் பரிந்துரையுடன் மலரில் பிரசுரிக்கப்படுமென யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவை அறிவித்துள்ளது.

(4)

# பல்கலை மாணவர் கொலை; பொலிஸாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களான 5 பொலிஸாரின் விளக்கமறியல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாண நீதிவான் மன்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் சீ. சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது.

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியை அண்மித்து கடந்த வருடம் ஒக்டோபர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். கொலைச் சந்தேகத்தில் ஐவரும் கைதாகி மறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(4,ரி1)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. ஜூலை 25ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெற்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை திருவூஞ்சல் விழா இடம்பெற்று திருவிழா நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டது.

(21)

## நாடு முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சபைகளில்

# யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை தங்க விருதைத் தட்டிச் சென்றது



யாழ்ப்பாணம், ஜூலை 12

நாடு முழுவதிலிருந்தும் முதலாவது மாவட்டக் கூட்டுறவுச் சபையாக யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபை தெரிவு செய்யப்பட்டுத் தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

குருநாகலில் இடம்பெற்ற 95 ஆவது பன்னாட்டு கூட்டுறவாளர் தினத்தில் இந்தத் தங்க விருது வழங்கப்பட்டது.

குருநாகல் மாளிகாப்பிட்டி மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டுறவு சபைக்கான தங்க விருதை வழங்கி வைத்தார்.

இந்த விழாவில் இலங்கையிலுள்ள இருபத்தேழு மாவட்டக் கூட்டுறவுச் சபைகளில் முதன்மையான "நிலையான மாவட்டக் கூட்டுறவுச்சபைக்கான" தங்க விருதை யாழ்ப்பாணம் மாவட்டக்கூட்டுறவுச் சபை பெற்றுக் கொண்டது.

95ஆவது பன்னாட்டு தினவிழாவை முன்னிட்டு தேசிய மட்டத்தில் கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையும் இணைந்து பலபோட்டிகளை நடத்தி பரிசில் வழங்கின.

இந்தப் போட்டிகளில் ஒன்றாக நிலையான மாவட்டக் கூட்டுறவுச் சபை தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுறவு அமைப்பின் கோட்பாட்டு நிறுவனமாக கூட்டுறவுச் சபைகள் செயல்படுகிறது. கூட்டுறவு முயற்சிகளை பயனுள்ளதாகவும், கூட்டுறவுக் கொள்கைகள் கோட்பாடுகளின்பால் செயற்பட செய்வதும், மாவட்ட கூட்டுறவாளர்களின் குரலாக செயற்படுவதும் கூட்டுறவாளர்க ளின் முக்கிய நோக்கமாகும். அத்துடன் தேசிய மட்ட கோட்பாட்டு நிறுவனமான இலங்கைதேசிய கூட்டுறவுச்சபை யின் அதாவது தேசிய உயர்நிலை அமைப்பின் ஓர் அங்கத்தவர் என்ற முறையில் செயற்படுவதும் மாவட்டக் கூட்டுறவுச் சபைகளின் பணியாகும்.

இத்தகையகூட்டுறவுச்சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் மதிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் பௌதீக வள அபிவிருத்தி பாதுகாப்பு பராமரிப்பு. கூட்டுறவு நற்பண்புகளைப் பிரபல்யப்படுத்தல், கூட்டுறவுச் சபைகளின் தூரநோக்கு, செயல்பணி மற்றம் நோக்கங்களை அடைவதற்கு கூட்றவுத் தலைமைத்தவம் வழங்கும் பங்களிப்பு, கூட்டுறவு தொடர்பான வெளியீடுகள் மேற்கொள்ளல், கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பொதுச்சபை பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்துதல், தீர்மானங்களை வினைத்திறனாக செயற்படுத்தும் முறைகள், அங்கத்தவர், பணியாளர், இளைஞர், மகளிர் சார்ந்த கூட்டுறவுக் கல்வி நடவடிக்கைகள். மனிதவள செயற்பாடுகளுடன் தொடர்பான ஆட்சேர்த்தல், நிர்வகித்தல், சட்டரீதியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளல், ஊக்குவித்தல், வினைத்திறன் மதிப்பீடுகள் மேற்கொள்ளல், சமூக நல விடயங்கள், அங்கத்துவ சங்கங்களின் பொருட்டு வழங்கப்படும் சேவைகள், சேவை வழங்குனர் சேவை பெறுப்பவர்கள் தொடர்பான திருப்திப்பாடுகள், அலுவலக முகாமை செயல்திறன்கள், தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையுடன் ஒருங்கிணைந்து மாவட்டக் கூட்டுறவுச் சபை மூலம் சங்கங்களின் பொருட்டு வழங்கப்படும் சேவைகள் நிதிமுகாமத்துவம் வினைத்திறனான நிதி செயலாற்றுகை போன்ற பல விடயங்கள் மதிப்பீட்டின் போது கவனத்தில் கொண்டு புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று இலங்கையில் முதலாவது நிலையான மாவட்டக் கூட்டுறவுச் சபையாக யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை தெரிவு செய்யப்பட்டு மேற்படி விழாவில் தங்கவிருதைப் பெற்றுக் கொண்டது.சென்ற ஆண்டும் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்று வெள்ளி விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

(4,17)

# பெண் நோயியலும் மகப்பேற்று மருத்துவமும் கருத்தமர்வு இன்று

யாழ்ப்பாணம் ஜூலை 12

நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் "பெண்நோயியலும் மகப்பேற்று மருத்துவமும்" எனும் தொனிப்பொருளிலான சிறப்புக் கருத்துரை இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வளவாளராக தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ந.சரவணபவா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(4,ரி)



*வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய கப்பல் திருவிழா நேற்று முன்தினம் இரவு சிறப்பாக இடம்பெற்றது. இரவு 8 மணிக்கு இடம் பெற்ற வசந்தமண்டப வழிபாட்டைத் தொடர்ந்து 9:30 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணிவரை கப்பல் உற்சவத்தில் அம்பாள் எழுந்தருளினார். நேற்று மாலை வைரவர் பொங்க லும் இடம்பெற்றது. (21)*

# முன்னாள்போராளிகள், மாவீரர்குடும்பங்களின்வாழ்வாதாரத்தைக்கட்டியெழுப்புவதேகுறிக்கோள்

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

மறுவாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 60 பயனாளிக்குடும்பங்களுடன் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

வடக்கு மாகணத்தில் மறுவாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வாழ்வாதார உதவி வழங்கும் இவ்வேலைத்திட்டத்துக்கு அமைவாக இந்த வருடம் 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வடக்கு மாகாணம் முழுவதும் 300 குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் முல்லைத் தீவு மாவட்டத்தை சேர்ந்த 60 பயனாளிக் குடும்பங்க ளையே நேற்றுமுன்தினம் மதியம் 2 மணியளவில் கிராம அபி விருத்தித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் சந்தித்துக் கலந்துரையாடினார். பயனாளிகள் தற்பொழுது என்ன தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களோ அதனை வழங்கப்படவுள்ள உதவித்திட்டத்தைக் கொண்டு மேலும் முன்னேற்றி கணிசமான வருவாயைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அல்லது தங்களால் மேற்கொள்ளக்கூடிய தொழில் ஒன்றைத் தெரிவுசெய்து அதன்மூலம் வாழ்வாதரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார். மேலும் அங்கு உரையாற்றிய அமைச்சர் "அண்மையில் சமூக வலைத்தளங்களின் மூலம் அறியப்பட்ட விடயம் நயினாதீவு கோவிலில் சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முன்னைநாள் போராளி ஒருவர் ஒருவேளை உணவுக்குக் கூட கஷ்டப்படும் நிலையில் காணப்படுவதாகவும், அவ்வாறே வடமாகாணம் முழுவதும் எமது இனத்துக்காக பல தியாகங்களைச் செய்த எத்தனையோ போராளிகள் குறிப்பாக கணவன்மாரை இழந்த பெண்போராளிகள், தமது அவயவங்களை இழந்த போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்கள் போன்றவர்கள் கஷ்டப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். இவ்வாறு ஒருநேர உணவுக்குக் கஷ்டப்படுகின்ற போராளிகளையும், மாவீரர் குடும்பங்களையும் நிலையான அபிவிருத்தியை நோக்கிப் பொருளாதரத்தில் கட்டியெழுப்புவதையும், அவர்களின் பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கைத்தரம் என்பவற்றை சரியான முறையில் கட்டியெழுப்புவதைவிட வேறு என்ன வேலை முக்கியமானதாக இருக்க முடியுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் கந்தையா சிவநேசன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், திணைக்கள உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன் அவர்களின் புதல்வர் பீட்டர் இளஞ்செழியன் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டனர்.

(21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் ஸ்ரீ பருவதவர்த்தினி அம்பாள் இராமலிங்கசுவாமி வருடாந்தத் திருவிழா இன்று 12ஆம் திகதி 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.
எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெற்று மறுநாள் 23ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு தீர்த்தோர்சவம் நடைபெறும். (4)

## "செம்புலம்" மலருக்கு ஆக்கங்கள் கோரல்

அச்சுவேலி, ஜூலை 12
வலி.கிழக்கு பிரதேசசெயலக பண்பாட்டுப் பேரவையால் வெளியீடு செய்யப்படவிருக்கும் செம்புலம் 2 மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
ஆக்கங்கள் வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவு அபிவிருத்தி, கலை, பண்பாட்டு வடிவங்கள் சார்ந்தவையாகவும் செம்புலம் மலரில் சேர்த்துக் கொள்ளத்தக்கவையாகவும் அமைய வேண்டும்.
ஆக்கங்களை இந்த மாத இறுதிக்குள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அல்லது செம்புலம் மலர் குழுவிடம சேர்ப்பிக்குமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் அறிவித்துள்ளார். (4,11)

# வலி.மேற்கில் வறட்சி பாதித்த இடங்களுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வறட்சியால் பாதிக்கப்பட்ட வலி.மேற்குப் பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வலி. மேற்கு பிரதேச செயாளர் செல்வி எஸ். பிறேமினி இதனை முன்னெடுத்துள்ளார்.
இடர்முகாமைத்து செயற்திட்டத்துக்கு இணங்க வலி.மேற்கில் பொன்னாலை, பாண்டவெட்டை, அராலிகிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கே முதற்கட்டமாக குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.
வலி.மேற்கு பிரதேச சபையுடன் இணைந்த வகையில இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதேவேளை வேள்ட் விசன் சங்கானைப் பிரதேச அபிவிருத்தி நிறுவனமும் வலி. மேற்கில் பாதிக்கப்பட்ட அராலி உப அலுவலக பிரிவுக்கு குடிதண்ணீர் வழங்க முன் வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,50)




நாட்டில் அதிகரித்துவரும் மதுசாரப்பாவனையைக் கவனத்தில் கொண்டு மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணியும் யாழ். றோட்டறக்ட் கழகமும் இணைந்து மதுசாரப்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கையை யாழ்ப்பாணம் நகர் மையப்பகுதியில் மேற்கொண்டனர். நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மதுசாரப் பாவனையை தடைசெய்யும் முகமாகவும் இது தொடர்பில் ஏற்படும் பாதிப்புக்களால் ஏற்படும் விளைவுகள் தொடார்பான துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. இதில் மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி அங்கத்தவர்களும், யாழ்.றோட்டறக்ட் கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (21)

# கைதடியில் அமையவுள்ள பனைசார் பயிற்சிப் பாடசாலைக்கு அமைச்சர் சுவாமிநாதன் அடிக்கல்

யாழ்ப்புாணம், ஜூலை 12
பனை அபிவிருத்தி சபையின் நிர்வாக அலகு கட்டடம் மற்றும் பனைசார் பயிற்சிப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் விழாவும் மாநாட்டு மண்டபத் திறப்பு விழாவும் கைதடியில் இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கைதடியில் வடக்கு மாகாண சபைப்பேரவைச்செயலகத்தை அண்மித்துள்ளபனைஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் இடம் பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராகக் கட்டடத் திணைக்கள தலைமைப் பொறியியலாளர் எஸ். விநோதினியும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச உதவிச் செயலர் நா. ரஞ்சனாவும் கட்டட திணைக்கள முதன்மை பொறியிலளார் எஸ். திருக்குமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (4,10,17)

# வயல் பதிவுகள் நாளை ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 12
தென்மராட்சிதெற்குதனங்களப்புகமக்கார அமைப்புக்குட்பட்ட காலபோக நெற்செய்கை வயல்கள் அடையாளப் படுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது.
பணிகள் காலை 7 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை நடத்தப்பட்டு வருவதால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும் நெல்வயல்கள் அடையாளப்படுத்தும் இடங்களுக்கு வயல் உரிமையாளர்கள் அல்லது குத்தகையாளர்களை உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பின் தலைவர் வி.சதானந்தன் கேட்டுள்ளார்.
இதன் பிரகாரம் நாளை வியாழக்கிழமை நரியோடு வயல் பகுதிகளும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை புளியம்பிட்டி வயல் பகுதிகளும் அடையாளமிடப்பட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
வயல்களின் உரிமையாளர்கள் காணிக்குரிய உறுதிகள் அல்லது குத்தகைப் பத்திரம் ஆகியவற்றின் புகைப்படப் பிரதியுடன் வருகை தருமாறும் அவர் தெரிவித்தார். (4,9)

# வலி.கிழக்கில் 2016 இல் வந்த நூல்கள் சேகரிக்கப்படுகின்றன

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்கள் பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றன. நூல் ஆக்கம் மற்றும் வெளியீட்டு முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் கடந்த வருடம் செயலக பிரிவில் வெளியிடப்பட்ட நூல்கள் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வழிப்படுத்தலுக்கு அமைய கொள்வனவு செய்யப்படுகின்றன.
நூல்களை ஆக்கியவர்கள் மற்றும் வெளியிட்டவர்கள் பிரதேச செயலர் கலாசார அலுவலகர் தொடர்பு கொளளுமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜி மதியழகன் அறிவித்தார். (4,11)

# சமூக, விஞ்ஞானப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கு சான்றிதழ்



பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமூக விஞ்ஞான போட்டிகளில் தேசிய, மாகாண மற்றும் வலய நிலைகளில் வெற்றி பெற்ற தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நீ.கந்ததாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டார்.
நிகழ்வில் தேசிய நிலையில் ஒரு மாணவியும் அகில இலங்கைப் போட்டியில் பத்து மாணவர்களும் வலய நிலையில் 84 மாணவர்களும் சான்றிதழ் பெற்றனர். (21,9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 60 |
| கத்தரி | 120 | 80 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 70 | 160 | 120 | 140 |
| பாகல் | 180 | 120 | 240 | 160 | 180 |
| க.கிழங்கு | 120 | 120 | 160 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 250 | 260 | 220 | 260 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 80 |
| தக்காளி | 120 | 160 | 140 | 110 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 | 60 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்கானி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 250 | 240 | 320 | 250 | 200 |
| புடோல் | 80 | 60 | 100 | 80 | 80 |
| கோவா | 120 | 160 | 160 | 120 | 120 |
| வெண்டி | 80 | 60 | 120 | 100 | 100 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 180 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 180 | 280 | 180 | 240 |
| இராசவள்ளி | | | 300 | 300 | 260 |
| முருங்கைகாய் | 200 | 150 | 240 | 150 | 200 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1200 | 1000 |
| நண்டு | 350 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 500 | 600 | 600 |
| விளை | 500 | – | 450 | 600 |
| முரல் | 400 | 400 | 600 | – |
| கும்பிளா | 400 | 400 | 450 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஒரா | 400 | 400 | 450 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 300 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 350 |
| திருக்கை | 350 | 300 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 300 | – |
| கொய் | 200 | 60 | 80 | 100 |
| பாலை | 250 | 250 | 400 | 400 |
| | 200 | [illegible] | 300 | [illegible] |




பெண்களுக்கான சாறி புறோச் வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரம் ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குமுழமுனை மகா வித்தி. மாணவிகள் இருவர் மாகாணத் தமிழ்த்தின போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மாகாண மட்ட தமிழ்த்தின கட்டுரை வரைதல் போட்டியில் முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலய மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.
பிரிவு 2 இல் பகீரதன் லாசன்ஜா, பிரிவு5 இல் சிவலோகநாதன் சதுசியா ஆகிய இருவருமே முதலாமிடத்தைப் பெற்றனர்.
இந்த மாணவர்களின் சாதனை குமுழமுனை மகா வித்தியாலயத்துக்கும் முல்லை வலயத்துக்கும் பெருமை தேடிக்கொடுத்திருப்பதாகப் பாடசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (4)

## அலைபேசியை பொறுப்பேற்கக் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 12
விபத்தில்காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டவரது அலைபேசி சாவகச்சேரி மருத்துவமனையில்வைக்கப்பட்டுள்ளது. அதனைத்தவறவிட்டவர் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டுபெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.
கேரதீவுப் பகுதியில் ஏ 32 சாலையில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றஇருமோட்டார்சைக்கிள்கள் விபத்தில் காயமடைந்த நால்வர் சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
அதன்போதுகாயமடைந்தஒருவரால்தவறவிடப்பட்டதாகக் கருதப்படும் அலைபேசி மருத்துவர்களால் எடுக்கப்பட்டுநிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. இதுவரை அலைபேசி தொடர்பாக எவரும் உரிமை கோரவில்லை என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4-9)

# நுண்கலைப் பாடங்களுக்கான ஆசிரிய வெற்றிடங்கள் குறித்து வர்த்தமானியை வெளியிட வேண்டும்

## வேலைதேடும் பட்டதாரிகள் வடக்கு அமைச்சருக்கு மனு

யாழ்ப்பாணம், ஜூலை 12
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியவெற்றிடங்களில்கலைமற்றும்நுண்கலைத் துறைப் பாடங்கள் உள்ளடக்கப்படவில்லை. அவற்றையும் வெற்றிடங்களில் உள்ளடக்குவதோடு அது பற்றி வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிடவேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளதாக வேலைதேடும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.
வேலைதேடும் பட்டதாரிகள், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனை அவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்தினர். இது தொடர்பாக வேலைதேடும் பட்டதாரிகள் தெரிவித்ததாவது:
நாங்கள் 135 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம். எமக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. வடக்கு மாகாணகல்விஅமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிஎமதுகோரிக்கைதொடர்பில்மனு ஒன்றை அவரிடம் கையளித்துள்ளோம்.
தற்போது வடக்கு மாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம்உட்பட341ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள்இன்னும்நிரப்பப்படவில்லை. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அவற்றில் கலைத்துறை மற்றும் நுண்கலைப்பீடபாடங்கள்உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறு உள்ளடக்கப்படாத பாடங்களைக் கற்பிக்கஆசிரியர்கள்இல்லை. அதனால்பாடசாலைகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றன.
ஆகவே வடக்கு மாகாணத்தில் வெற்றிடங்கள்கோரப்படாதநிலையில்எத்தனைபாடங்கள்உள்ளன? அவை தொடர்பில் ஆராய்ந்து அந்த வெற்றிடங்களுக்கும் விண்ணப்பங்களைக் கோரவேண்டும்.
அது தொடர்பில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மனுவில்கோரியுள்ளோம்- என்றனர். (4-ரி)

## போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்

### விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மீனவர்களுக்குஇழப்பீடுவழங்கப்படவுள்ளது. விண்ணப்பங்கள் தற்போது வழங்கப்பட்டு வருவதால் பாதிக்கப்பட்டவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு நீரியல்வளத் திணைக்களம் அறிவித்தது.
மீன்பிடி உபகரணங்களை இழந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக கொழும்பு கடற்றொழில் அமைச்சு 40 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நீரியல்துறை திணைக்களங்களுக்கும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
போர்க்காலத்தில் படகுகளை இழந்தோர், இடப்பெயர்வின் போது கடற்றொழில் உபகாரணங்களை விட்டுச் சென்றோர் போன்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். பதிவுகளை கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களில் மேற்கொள்ள முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரையில் 22 மீனவர்கள் இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த இழப்பீட்டைப் பெறவேண்டுமானால் கடற்றொழிலாளர்கள் போர்க் காலத்தில் தமது கடற்றொழில் உபகரணங்கள் காணாமற் போய் உள்ளமை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்திருக்க வேண்டும். அல்லது தம்மிடம் எவ்வளவு கடற்றொழில் உபகரணங்கள் இருந்தன என்பது பற்றிய உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-ரி)

## 'மாவா' போதைப் பொருளுடன் இரணைமடுவில் ஒருவர் கைது

கிளிநொச்சி, யூலை 12
கிளிநொச்சி இரணைமடுவில் இளைஞர்களுக்கு 'மாவா' போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச் சாட்டில் நேற்றுமுன்தினமிரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



மாவா போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாகக் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரணைமடுப் பகுதியில் வைத்து 'மாவா' போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6-35)

## பொதுமக்களின் காணிகள் கொக்குவிலில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
கொக்குவில்தலையாளிப்பகுதியில்இராணுவத்தினர்வசமிருந்த பொதுமக்களின் வீடுகளும் காணிகளும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன. அவை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம்கொக்குவில் பகுதியில்1996ஆம் ஆண்டுதொடக்கம்இயங்கிவந்தபெரும்இராணுவமுகாம்பின்னர்சுருக்கப்பட்டு சில வீடுகளுடன் இயங்கிவந்தது. 2006ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டுவரையான போர்க் காலப்பகுதியில் படைப் புலனாய்வுப் பிரிவினரின் முகாமாக அது விளங்கியது.
இராணுவ முகாம் பின்னர் குறித்த பிரதேசத்துக்கான புலனாய்வாளர்களின் அலுவலகமாகச் செயற்பட்டது. குறித்த முகாம் அமைந்திருந்த வீடுகள் அனைத்தும் கடந்த சனிக்கிழமை முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு உரிமைகோரும் பொதுமக்கள் அவற்றைப் பொறுப்பேற்றனர். (4-101)

# மேய்ச்சல் தரைகளை அமைக்கும் காணி தீவகத்தில் இன்னும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 12
தீவகத்தில் உள்ள கட்டாக்காலி மாடுகளைப் பாதுகாக்கும் வகை யில் அங்குள்ள அரச காணியில் மேய்ச்சல் தரைகளை அமைப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்ட போதும்அரசகாணிவிடுவிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.



"வேலணைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கட்டாக்காலி மாடுகளை பாதுகாக்கும் வகையில் அங்கு மேய்ச்சல் தரைகளை அமைத்து மழை காலங்களிலும்பயிர்ச்செய்கைக் காலங்களிலும் மாடுகளை அடைத்து வைத்துப் பராமரிப்பதற்கென நிலப்பரப்புத் தேவையாக உள்ளது. ஆனால் தகுதியான காணி கிடைக்காததனால் அங்குள்ள கட்டாக்காலி மாடுகளை பாதுகாப்பது சவாலாகவுள்ளது.
தனியார் ஒருவருக்குச் சொந்தமான ஒரு நிலப்பரப்பில் மேய்ச்சல் தரை அமைப்பதற்குக் காணி உரிமையாளர் சம்மதம் தெரிவித்த போதும் பின்னர் அவர் மறுத்துள்ளார் என்று கூறப்பட்டது.
மேய்ச்சல் தரை அமைப்பதற்கான நிலம் எமது திணைக்களத்துக்கு உரிய முறையில் கையளிக்கப்படவேண்டும். ஏராளமான நிதியை அங்கு செலவழித்த பின்னர் அந்த நிலத்தை மீளப் [illegible] எமது செயற்றி[illegible] அடைய முடியாது. நிதியும் வீண்விரயமாகும்.
எனவே எமது திணைக்களத்துக்கு கையளிக்க விரும்பும் காணியை பிரதேச செயலகத்தினர் உரிய முறையில் தர வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றோம்.
வேலணையில் பிரதேச செயலகத்தினர் கூறிய அரச காணிகளை நாம் ஏற்கனவே பார்வையிட்டிருந்தோம். அந்தக் காணிகளில் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும். முதலில் அந்தக் காணி எமது திணைக்களத்துக்கு உரிய முறையில் கையளிக்கப்பட வேண்டும். அதன்பின்னர் நாம் மாகாண நிதியிலிருந்து அங்கு கம்பி வேலிகளை அமைத்து மேய்ச்சல் தரைகளையும் அமைத்துக் கட்டாக்காலி மாடுகளைப் பராமரிக்க முடியும். அந்த இடம் பாதுகாப்பானதா? என்பதை உறுதி செய்ய வேண்டும். எனவே குறித்த காணியை எமது திணைக்களத்துக்கு ஒப்படைப்பது தொடர்பில் உரிய பதில் கிடைத்தால் அங்கு மேய்ச்சல் தரை அமைப்பது தொடர்பில் ஆராயலாம்" என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர். எஸ். வசிகரன் தெரிவித்தார்.
"வேலணை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்துக்கு தனியாருக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் காணி அடையாளப்படுத்தப் பட்டிருந்தது.
ஆனால் குறித்த காணி உரிமையாளர் அனுமதி தராததன் காரணமாக அந்தக் காணியில் மேய்ச்சல் தரை அமைப்பது இயலாமல் போய்விட்டது. எனினும் வேலணையில் அரச காணி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினர் கோரிக்கை விடுத்தால் காணியை வழங்கலாம்" என்று வேலணைப் பிரதேச செயலாளர் ஏ.சோதி நாதன் தெரிவித்தார். (4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொக்கிளாய் மீனவர் விவகாரம்:

# படகுகளைக் கடலுக்குள் இறக்கி ஆராய்ந்து வாடி அமைவிடத்தைத் தெரிவு செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 12

கொக்கிளாயில் உள்ளூர் மீனவர்களுக்கு வாடி அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பிரதேசத்தின் ஊடாகப் படகுகளைக் கடலுக்குள் இறக்கித் தொழில் புரியக்கூடியதாக நில அமைவுஉள்ளதா?எனஆராயப்படவுள்ளது. அதன்பின்னரே வாடி தொடர்பில் இறுதிமுடிவுஎடுக்கப்படும்என்றுசட்டமா அதிபர் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு கொக்கிளாய் உள்ளூர் மீனவர்களின் வாடிவிடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் மற்றும் மாவட்ட நீரியல் திணைக்களமும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் முரண்பட்ட கருத்தையே முன்வைத்துள்ளன. இந்தவிவகாரம்தொடர்பானவழக்குமுல்லைத்தீவுநீதிமன்றில் விசாரணைக்காக நாளை வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கொக்கிளாயில்உள்ளூர்மீனவர்களால் அமைக்கப்பட்ட வாடியை வடக்கு நோக்கி275 மீற்றர் தூரத்துக்கு நகர்த்தி இரு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாட்டைத்தீர்க்கச்சட்டமாஅதிபர் திணைக்களம் கடந்த 29ஆம் திகதி சந்திப்பை நடத்தியது.

சட்டமா அதிபரால் பரிந்துரைக்கப்பட்ட பிரதேசம் அதிக கற்பாறைகளாகக் காணப்படுவதால்வாடிஅமைப்பதற்குப் பொருத்தமில்லை என்று உள்ளூர் மீனவர்களால் குற்றம்சாட்டப்பட்டது. அதுதொடர்பில்சட்டமாஅதிபர்திணைக்களத்திடம் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் மாவட்டச் செயலக அதிகாரிகள் , பிரதேச செயலக , நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் அனைவரும் கடந்த வாரம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குஅழைக்கப்பட்டுகலந்துரையாடப்பட்டது.

"தற்போதுள்ளவாடிஅமைந்துள்ளஇடத்திலிருந்து 275 மீற்றர் வடக்காக கற்பாறைகள் கானப்படுகின்றன. அங்கு வாடி அமைத்தால் படகுகளைக் கடலுக்குள் நகர்த்துவது மீளஎடுப்பதுமிகக்கடினம். படகுகள்சேதமாவதோடுசாத்தியமாகாத விடயம்" என்று பிரதேச செயலகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

"அங்கே சில கற்கள் காணப்பட்டாலும் அந்தப் பிரதேசத்தின் ஊடாக தொழில் புரிய முடியும்" என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத்திணைக்களஅதிகாரிகள்தெரிவித்தனர். இருதரப்பினருக்கும் இடையே முரண்பட்ட கருத்துக்காணப்படுவதால் "குறித்த பிரதேசத்தின் ஊடாகப் படகுகளை இறக்கித் தொழில் புரியக்கூடியதாக சூழமைவு உள்ளதா? என்பதை ஆராய்ந்து இறுதி முடிவை எட்டலாம்" என்று சட்டமா அதிபரால் கூறப்பட்டது.

அதன்பிரகாரம் குறித்த பகுதியின் ஊடாகப்படகுகளைக் கடலுக்குள் இறக்குவது தொழில் மேற்கொள்வது நடைமுறைக்குச் சாத்தியமாக உள்ளதா? என்பதை ஆராய்ந்து அதன் அடிப்படையிலேயே தீர்வைஎட்டுவற்குஆலோசிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்தபகுதியின் ஊடாக உள்ளூர் மீனவர்களைக் கொண்டு படகைக் கடலில் இறக்கிப் பரிசோதனை மேற்கொள்ளஏற்பாடுகள்இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (4-101)

## வடக்குக் கல்வித்துறைக்கு ஐந்து பிக்கப் வாகனங்கள்



கரணவாய், ஜீலை 12

வடக்கு மாகாண மற்றும் வலய கல்வித் திணைக்களங்களுக்கு பிக்கப் ரக வாகனங்கள்வழங்கப்பட்டுள்ளன. உலகவங்கியின் நிதியுதவியுடன் இவை கொள்வனவு செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற 10ஆவது தடகள விளையாட்டுநிகழ்வின் இறுதிப்போட்டிகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. அந்த நிகழ்வில் வைத்துக் குறித்த வாகனங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கல்வி அதிகாரிகளிடம் கையளித்தார்.

வாகனங்களை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் உட்பட வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் பெற்றுக் கொண்டனர்.

மாகாணக் கல்வி அமைச்சர் எஸ்.சர்வேஸ்வரன் வலிகாமம் வலயத்துக்கான வாகனத்தை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராசாவிடம் வழங்கினார். மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் வடமராட்சி வலயத்துக்கான வாகனத்தை வலயத்தின் பதில் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ் மாறனிடம் வழங்கினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம்தீவகவலயத்துக்கான வாகனத்தை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவத்திடம் வழங்கினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்கான வாகனத்தை வலயப் பணிப்பாளர் எஸ்.குயின்ரஸிடம் வழங்கினார். (4-108-422)

### பல்லவராயன் கட்டுக் குளத்தின் தண்ணீர் மட்டம் குறைந்ததால்

# 321 ஏக்கர் சிறுபோகச் செய்கை அழியும் நிலையில்

## இழப்பீடு கோருகின்றனர் விவசாயிகள்



கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நல்லூர் பல்லவராயன்கட்டுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 321 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:

"மாவட்டத்தின் மூன்றாவது நீர்ப்பாசனக் குளமாகக் கருதப்படும் பல்லவராயன்கட்டுக் குளத்தின் கீழான தண்ணீர் விநியோகத்தை அடிப்படையாகக் கொண்டு 400 ஏக்கர் வரை நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவது வழமை. இந்த வருட சிறுபோகம் 321 ஏக்கர்வரை மேற்கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது. தற்போது குளத்தில் நீர்மட்டம் மிகவும் குறைவான நிலையில் உள்ளதால் சிறுபோகச் செய்கையைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குளத்தில் தண்ணீர் முற்றாக வற்றியுள்ளது.

பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட சுமார் 300 ஏக்கர் வரையான நெற்செய்கை அழிவுறும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. வங்கியில் கடன் பெற்றும், நகைகளை அடகு வைத்தும் பயிர்ச் செய்கை மேற்கொண்டோம். கடும் வறட்சி, திட்ட மிடப்படாத பயிர்ச் செய்கைக்கான அனுமதி ஆகியவற்றால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

சிலர் நீர்ப்பம்பி மூலமாகத் தண்ணீர் இறைத்துக் குறிப்பிட்ட அளவு ஏக்கர் பரப்பிலுள்ள பயிரைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். குளத்தில் தண்ணீர்மட்டம் குறைந்ததால் கிணறுகளிலும்தண்ணீர்மட்டம்விரைவாகக்குறைவடைந்து வருகின்றது. அதனால் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொண்ட 300 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

காலபோகம் நிறைவடைந்ததும் சிறுபோகப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள எமக்கு அனுமதி தந்திருந்தால் காலபோகம் செய்யப்பட்ட ஈரலிப்பான நிலையில் சிறு போகத்தை நாங்கள் செய்திருக்கலாம். காலம் பிந்தியதனாலேயே இவ்வாறான பாதிப்புக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளோம்.

பல்லவராயன்கட்டுக் குளத்தின் கீழான சிறுபோகத்தைப் பாதுகாப்பதற்காக அக்கராயன் குளத்திலிருந்து தண்ணீர் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. எனினும் இவ்வருடம் அக்கராயன் குளத்திலும் தண்ணீர் மட்டம் குறைந்துள்ளதால் தண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது.

இந்தப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு மழை வீழ்ச்சி கிடைக்கவேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு. அதுவும் கைகொடுப்பதாகத் தெரியவில்லை. எனவே எமக்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பிரதேச விவசாயிகள் கோருகின்றனர். (4-6)

# ஆயுதப் பயிற்சி பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் யாழ்.மேல்நீதிமன்றால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சட்டவிரோதமான முறையில் ஆயுதப் பயிற்சி பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 2 அரசியல் கைதிகளை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் விடுவித்தது.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வைத்து தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தினரிடம் 10 நாட்கள் உடல் ரீதியான பயிற்சிகள், ரி56 றிவோல்வர் சுடும் பயிற்சி, கைக்குண்டு வீசும் பயிற்சி என்ற பயிற்சிகளை பெற்றனர் என்ற குற்றச்சாட்டில் ஸ்ரான்லி கிருஸ்ண ஆம்ரோன் , அநிக பிரசந்த ஜெயலத் என்ற இருவர் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத காலப்பகுதியில் பயங்காரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரத்தின் வழக்கு கடந்த 2016ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

இதில் 21 சாட்சிகள் வழக்கு தொடுநரால் அழைக்கப்பட்டனர். வழக்குத் தொடுநர் சார்பில் நாகரட்ணம் நிசாந் மன்றில் முன்னிலையானார். வழக்கின் முக்கிய ஆதாரமாக சந்தேகநபர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே எடுத்துக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் உண்மை விளம்பல் விசாரணை கடந்த மே மாதம் 16ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை எதிரிகள் தாமாகவே முன்வந்து தம்மிடம் சமர்ப்பித்ததாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்தார்.

எனினும் குறித்த உதவி பொலிஸ் அத்தியட்சகரைத் தாம் கண்டதே இல்லை என எதிரிகள் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டனர்.

"இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்புக்களின் அடிப்படையில், வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புக்களின் அடிப்படையில் , ஐ.நா. மனித உரிமைகள் சட்டதிட்டங்களின் அடிப்படையில் எதிரியின் கைது, தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தன்மை, தாமாக முன்வந்து எதிரிகள் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை கையளித்தனர் என உதவி பொலிஸ் அத்தியட்சகரால் வழங்கப்பட்ட சாட்சி, உதவி பொலிஸ் அத்தியட்சகரை சந்திக்கவே இல்லை என எதிரிகளால் வழங்கப்பட்ட சாட்சி என்பன அடிப்படையில் எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயாதீனமான முறையிலும், சுதந்திரமான முறையிலும் பதிவு செய்யப்படவில்லை. குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

இந்த வழக்கு விசாரணை யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரச தரப்பு சாட்சியங்கள் மேலதிகமாக முன்வைக்கப்படாதவிடத்து குறித்த எதிரிகளை குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளித்து இருவரையும் வழக்கிலிருந்து யாழ்ப்பாண மேல் நீதிமன்று விடுதலை செய்தது. (ரி-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினருக்கு துணை அரச தலைவர் பதவி

## நான்கு சிறுபான்மைக் கட்சிகள் அரசமைப்புக் குழுவிடம் யோசனை

கொழும்பு.ஜூலை 12
உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் துணை அரசதலைவர் பதவி ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட நான்கு சிறுபான்மைக் கட்சிகள் அரசமைப்பு நடவடிக்கைக் குழுவிடம் யோசனை முன் வைத்துள்ளன.
தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் இணைந்து இந்த யோசனையை முன்வைத்துள்ளன எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யோசனை புதிய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கிய பின்னர் சிறுபான்மை மக்களின் பிரச்சினையை நேரடியாகக் கூறமுடியும்.
இதன்மூலம் சிறுபான்மை மக்களின் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது.
நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண துணை அரசதலைவர் பதவியை ஏற்படுத்த வேண்டியது முக்கியமானது.
நாடாளுமன்றப் பதவிக் காலத்தைக் கவனத்தில் கொண்டு இந்த துணை அரச தலைவர் பதவியைச் சிறுபான்மை மக்கள் காலத்துக்குக் காலம் பகிர்ந்து கொள்ளும் வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (த-ய)

# சகல இனங்களுக்கும் சமமான உரிமைகள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12
நாட்டில் வாழும் சகல இனங்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
பேருவளை அபேபிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிய வயதில் சிங்கள, முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் இருந்தனர். நண்பர்களாக இருந்தனர். எனினும் தற்போது மதங்களுக்கு இடையில் சிலர் பேதங்களை ஏற்படுத்துகின்றனர். பௌத்தர்கள் பௌத்தத் தன்மை பற்றிப் பேசுகின்றனர்.
சிங்களவர்கள் பெரும்பான்மை இனம் என்று கூறுகின்றனர். சனத் தொகையில் முஸ்லிம்கள் சிறுபான்மை இனம். எனினும் நாங்கள் அனைத்து இனங்களுக்கும் சம உரிமை வழங்கவேண்டும். இனங்களைப் பாதுகாக்கவேண்டும். எந்த இனமாவது மற்றைய இனத்தின் மீது தாக்குதல் நடத்தினால் அது வெட்கக்கேடு.
முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் வேறு இனத்தவர்கள் இல்லை எனச் சிலர் கூறுகின்றனர். உலகில் எந்த நாடு அப்படியான நாடாக இருக்கின்றது. நானும் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கின்றேன். ஈராக், பாலஸ்தீனம் உட்பட பல முஸ்லிம் நாடுகளில் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர்.
பலஸ்தீன அமைச்சரவையில் கிறிஸ்தவ அமைச்சர்கள் உள்ளனர். இலங்கையைப் பௌத்த நாடு என்று காட்டுவதற்காகத் தவறான அர்த்தப்படுத்தலையும் புள்ளிவிவரங்களையும் முன்வைக்கின்றனர்.
முஸ்லிம் மக்கள் மத்தியில் அடிப்படைவாதிகளும் இருக்கின்றனர். எனினும் பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அப்பாவிகள்.
நாட்டில் உள்ள அரசியல்வாதிகளும், ஊடகங்களும் இனங்களுக்கு இடையில் தீ மூட்ட முயற்சிக்கின்றனர். அவர்கள் அனைவரையும் ஒரே குற்றவாளிக் கூண்டில் ஏற்றவேண்டும் - என்றார். (த-ய)

# மகிந்தானந்தவின் ஆடம்பர வீடு; வழக்கு நவம்பரில் விசாரணைக்கு

அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் ஆடம்பர வீடொன்றைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.
அளுத்கமகே அமைச்சராகப் பதவிவகித்த காலத்தில் கொழும்பு பொரளை கிங்சி வீதியில் இரண்டு கோடி ரூபாவுக்கு ஆடம்பர வீடொன்றைக் கொள்வனவு செய்தார்.
இந்தப் பணத்தை அவர் தவறான முறையில் சம்பாதித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு, அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.
இந்த வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-ய)

# அரசுக்கு விவசாயிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 12
விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈட்டு நிலுவைத் தொகை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படாவிட்டால் அரச தலைவர் மாளிகையைச் சுற்றி வளைக்கப் போவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரட்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
ஹிங்குராங்கொடைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பயிர்ச்செய்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏப்ரல் மாத நட்டஈட்டுத் தொகையான 10 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றுமாத காலத்திற்கான நட்டஈட்டு நிலுவைத் தொகை வழங்கப்படவேண்டியுள்ளது.
எனினும் நிலுவைத் தொகை இதுவரை செலுத்தப்படவில்லை.
எங்களைக் கொழும்புக்கு வர வைக்கவேண்டாம் என அரசதலைவரிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (த-ய)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
19 . 10 . 1937

உதிர்வு
05 . 07 . 2015

புன்னகை தவழும் மல்லிகை மன்னன்
## சுப்பர் பொன்னையா நடராசா

திதி: ஆனிச்சங்கடஹர சதுர்த்தி (12.07.2017)

ஆல மரமெனவே
அகிலமெலாம் வேரூன்றி
சீலமுடன் வாழ்ந்த சீராளா
ஞாலமெலாம் போற்று
அண்ணா நிறுவனத்தை
அயராது வளர்த்திட்டீர் - உமை
எண்ணி நிதம் வாழ்கின்றோம்
என்றும் வணங்குகின்றோம்

**பெரியப்பா**

ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கப்பால்
கிளைகள் பரப்பி இருந்தாலும் - எங்கள்
ஆணிவேர் இருப்பதென்னவோ
அம்மம்மா வீட்டில் தான்!

ஒரு நாளைக்கு...
ஒரு தரமேனும்
அம்மம்மா வீட்டையும்
அம்மாளாட்சியடியையும்
எங்கள் மனப்பறவை
சுற்றி வர மறந்ததில்லை...

இந்த அன்பு மணங்களால்
கட்டப்பட்ட அழகு சாம்ராஜ்யத்தின்
ராஜராஜ சோழன் - எங்கள்
பெரியமாமா!

அவர் கட்டிய தஞ்சைப்
பெருங்கோவில்
அம்மம்மாவீடும் அதைச் சூழ்ந்த
"அண்ணா" தொழிலகமும்!

கிரேக்க இதிகாசங்களில் வரும்
கற்பனைப்பறவை "பீனிக்ஸ்"
இது சாம்பலில் இருந்து மீண்டும்
உயிர்த்தெழக்கூடியது
எனச் சொல்லப்படுகிறது!

ஆனால் யாரும் பார்த்தில்லை...
மாமாவைத் தெரிந்தவர்களுக்கு
மட்டுமே தெரியும்...
அதன் யதார்த்த வடிவம்
எங்கள் பெரியமாமா!

தோல்வியின் தந்த
அடிகளையெல்லாம்

**வெற்றிப் படிகளாக மாற்றியவர்...**

ரஜனியின் "அண்ணாமலை" படத்தை
எல்லோரும் விருந்து பார்த்து
ரசித்த பொழுது...

நாங்கள் மட்டும் மனதுக்குள்
சிரித்து,

"நிழலான ரஜனியை வியப்பவர்களே!
நிஜத்தோடு....
நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்"

என கொலரைத் தூக்கிவிட்டுக்
கொண்டோம்

கருமை நிறம்
கனிவும் கண்டிப்பும் சமனே
கலந்த ஒளி வீசும் கண்கள்..

அவர் மனம் போல
வெள்ளை நிற வேட்டி,
அரைக் கைச் சட்டை
வாழ்க்கையின் தத்துவம்
சொல்லும் திருநீறு இட்ட நெற்றி
பொன்னகையை தோற்கடிக்கும்
அழகிய புன்னகை...

பார்த்தவுடன்
மதியாதார் மனதில் கூட
மதிக்கும் தன்மை வந்து
உட்கார்ந்து கொள்ளும்...

இது ஒரு சிங்கத்தின்
கம்பீரம் போல
இயற்கையாய் வந்தது

"வாசிப்பதால் மனிதன்
பூரணம் அடைகிறான்"
இது மாமாவின் அசைக்க
முடியாத நம்பிக்கை
அதன் வழியே அமைந்தது
அவர் வாழ்க்கை

வீட்டின் தனது அறையோரம்
அவர் அமைத்திருந்த வாசிகசாலை
இதற்கு எடுத்துக்காட்டு

வீட்டில் இருக்கும் பொழுதுகளில்..
கைகளில் புத்தகமோ
பத்திரிகையோ இல்லாமல்
அவரைப் பார்க்கமுடியாது...

வாசிக்கும் பழக்கம் அவரிடம்
இருந்து நாம் கற்றுக்கொண்டது..
மாமாவின் கைகள் பட்ட அதிகமான
புத்தகங்களை நாமும் தொட்டு
இருக்கிறோம்
என்பதில் எப்பொழுதும்..
எம் மனதுக்குள் ஒரு பெருமை!

பெரிய மாமாவைப் பற்றி
முழுவதாய்ச் சொல்வதற்கு வயதோ...
அறிவோ.. அனுபவமோ
எமக்கு கிடையாது...

ஆனாலும்...
நாம் கண்ட பெரிய மாமா
நான்கு வரிகளில்...

"ஆசை விதையானால்...
வியர்வை நீரானால்...
தோல்வி உரமாகும்...
வெற்றி மரமாகும்!"

குடும்பத்தினரும்,
அண்ணா தொழிலக ஊழியர்களும்.
துரை வீதி, இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# போர் உளவியலிலிருந்து வெளியேறட்டும் பொலிஸ்

பொலிஸார்சுட்டதில்மற்றொருஉயிர்வடக்கில்பறிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கில் நடந்த சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது24)என்றஇளைஞர்கொல்லப்பட்டுள்ளார்.ஒருவருடகாலத்திற்குள்பொலிஸாரின்துப்பாக்கிச்சூட்டில்நபர்ஒருவர் கொல்லப்பட்ட இரண்டாவதுசம்பவம்இது.இதற்குமுன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் துன்னாலை இளைஞர் கொல்லப்பட்ட சம்பவத்திலும், தப்பிச் செல்வதற்கு அவர்கள் முயன்றபோது அவர்களை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றே பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், எழுந்தமானத்தில் உடனடியாக முடிவெடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தும் அதிகாரம் பொலிஸாருக்குக் கிடையாது. ஆகக்குறைந்தது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் உத்தரவைப் பெற்ற பின்னரே சந்தேகநபர்களை நோக்கிச் சூடு நடத்த முடியும்.

இரண்டு கொலைச் சம்பவங்களும் நடத்திருக்கும் வேகத்தைப் பார்க்கும்போது, சம்பவ இடத்திலிருந்த பொலிஸார் உயரதிகாரிகளின்உத்தரவைப்பெற்றுச்செயற்பட்டிருப்பார்கள் என்று தோன்றவில்லை. அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அவர்கள் செயற்பட்டிருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இது *30* ஆண்டு காலமாகப் போர்ச் சூழலுக்குள் இருந்த பொலிஸார், அவசரகாலச்சட்டத்தின்கீழ் செயற்பட்ட தமது உளவியலில் இருந்து வெளியே வரவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. போர்ச் சூழலுக்கும் அமைதிச் சூழலுக்குமான காலத்தின் வேறுபாட்டைப் புரிந்துகொள்ள அவர்கள் தவறியதன் வெளிப்பாடே தொடர்ந்தும் இத்தகைய கொலைகள் இடம்பெறுவதற்கான வழியை ஏற்படுத்துகின்றன.

*30* வருட காலப் போரின்போது, தீவிர சண்டை மனோநிலைக்குத்தயார்ப்படுத்தப்பட்டிருந்தவர்கள்பொலிஸார். தரைப் படை மற்றும் சிறப்பு அதிரடிப் படை என்பவற்றுக்குப்புறம்பாகபொலிஸாரும்முழுமையாகஆயுததாரிகளாக்கப்பட்டுஎந்தநேரத்திலும்ஒருதாக்குதலுக்குத்தயார்நிலையில் இருக்கும் வகையில் தயார்ப்படுத்தப்பட்டவர்கள் அவர்கள்.

சட்டம்ஒழுங்கைப்பேணுவதன்பெயரால்அவர்கள்தங்கள் ஆயுதங்களை உடனடியாகப் பயன்படுத்துவதற்கான அனுமதியை அவர்களுக்கு அவசரகாலச் சட்டம் வழங்கி வந்தது. அப்போது சந்தேகநபர்களை இப்படிச் சுட்டுவிட்டு, விடுதலைப் புலிகள் இயக்க நபர் என்று பட்டம் சூட்டிவிடுவது இலகுவாக இருந்த காரணத்தால், அன்று பொலிஸாரின் இந்தநடைமுறைபிரச்சினைக்குஉரியதாகஇருக்கவில்லை.

ஆனால், போர் முடிந்த பின்னரும் பொலிஸார் அதே உளவியலுடன் தொடர்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

குற்றங்கள்தடுக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. குற்றங்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் இறுக்கமான, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்பதிலும்தவறில்லை.அதற்காக,தாம்நினைத்தபடி உயிர்களைப் பொலிஸார் பறித்தெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

துன்னாலைச் சம்பவத்தில் தொடர்புபட்டிருக்கும் பொலிஸாரில் ஒருவர் போருக்குப் பின்னரான காலத்தில் சேவையில் இணைந்தவர். அவரே சுடுமாறு உத்தரவிட்டார் என்று கூறப்படுகிறது. இது, போர்உளவியல்எப்படி அடுத்தடுத்த தலைமுறைகளிடமும் கடத்தப்படுகிறது என்பதற்கான சான்று.

இந்தநிலையைமாற்றியமைக்க, போர்உளவியலில்இருந்து பொலிஸாரைவெளியேகொண்டுவருவதற்கானசெயற்றிட்டங்கள்திட்டமிட்டுமேற்கொள்ளப்படுவதுடன்,ஒட்டுமொத்த பொலிஸ் அமைப்பும் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படவேண்டும். அப்போதேமக்களுக்குநெருக்கமான,அவர்கள் நலன்சார்ந்தபொலிஸ்துறையைக்கட்டியெழுப்பமுடியும்.

# குருதிக் கொடை
## உயிர் காக்கும் நோக்கத்துக்காக மட்டும் அமையட்டும்



வந்தியத்தேவர்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். அதனால்தான் இனவாதத்தின் ஊடாக மக்களை இரண்டுபடவைத்துக் கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள், இன,மதவாதிகளான அரசியல்வாதிகளும் சில பௌத்த போலித்துறவிகளும். இந்த நாட்டு மக்களிடையே நிரந்தர பகைமையை ஏற்படுத்தி வைத்திடவே இவர்கள் விரும்புகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தென்பகுதியில் இருந்து யாழ்நகருக்கு வந்த 16 பௌத்த பிக்குமார் யாழ். போதனா வைத்தியசாலையில் குருதிக்கொடை வழங்கியுள்ளனர். இதனைப் பௌத்த பிக்குமார் தாங்களாகவே முன்வந்து செய்திருந்தால் அது வரவேற்கப்பட வேண்டியதே. இதற்கான ஒழுங்குகளை இராணுவத் தரப்பே மேற்கொண்டிருந்தது என்பது தெரியவந்தபோதுதான் கொஞ்சம் மனதுக்குள் உதைக்கிறது.

### படையினர் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான போக்கு கொண்டோரே?

இந்த நாட்டு இராணுவத் தரப்பு இடர்கள் ஏற்படும்போது சிறுபான்மையின மக்களைப்பாதுகாக்கும் என்று கருத முடியாது. தமிழ் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் ஒன்றாகவே இலங்கை இராணுவத் தரப்பு இருந்து வருகிறது. போரின்பின்னர் பாதுகாப்புக்கருதி அவர்களிடம் சரணடைந்த, அவர்களிடம் கையளிக்கப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் இன்னமும் காணாமல் போனவர்கள் பட்டியலிலேயே உள்ளனர். தமது உறவுகளை நேரடியாகவே தாம் இராணுவத்திடம் கையளித்ததாகக் கூறும் அவர்களது உறவினர்கள், அவர்களின் கதி என்ன என்று அறிவதற்காக சகலவித போராட்டங்களையும் முன்னெடுத்தும், உரிய பதில் கிடைக்காத நிலையில், கடலில் இறங்கிப் போராடுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது. காணாமல் போனவர்கள் இறந்திருக்கலாம் என முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்காவும், தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவும் கூட கூறும்போதும், இராணுவத் தரப்பு அதுபற்றிய உண்மைகளைத் தெளிவுபடுத்த முன்வரவில்லை. அத்துடன் தமிழ் நிலங்களைச் சூறையாடி விவசாயிகளை வறுமைக்குள்ளாக்கி விட்டு அந்த நிலங்களின் பயன்களைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். தமிழ் மக்களை விரோதிகளாகக் கருதும் இராணுவம், தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள ஒரு போதனா வைத்தியசாலைக்கு குருதிக்கொடை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது என்றால், அதன் பின்னணி குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

### பிக்குமாரின் குருதிக்கொடை உள்நோக்கம் கொண்டதா?

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு. இந்த நாட்டில் வாழும் ஏனைய இனத்தவர்கள் சிங்களவர்களுடன் கலப்புத் திருமணம் செய்து ஒன்றாக வாழ வேண்டும் என்ற கருத்து மட்டும்தான் இங்கு இன்னமும் பகிரங்கமாக முன்வைக்கப்படவில்லை. மற்றப்படி தமிழ்பிரதேசங்களைச் சிங்கள நிலங்களாக்கிக் குடியிருப்புக்களை ஆங்காங்கே ஏற்படுத்துவதன் மூலம், தமிழ் இனத்தையே படிப்படியாக இல்லாதொழிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கில் இது போன்ற குருதிக்கொடைகளை தென்பகுதியில் உள்ளவர்களிடமிருந்து பெற்று வழங்குவதன்மூலம், தமிழர்கள் உடம்பில் இப்போது ஓடுவதெல்லாம் சிங்களவர்களின் குருதி என்ற நிலையைத் தோற்றுவிக்கும் நோக்கிலேயே இராணுவம் இது போன்ற ஏற்பாடுகளைக் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளதா என்பதுதான் தமிழ் மக்களைச் சந்தேகத்துக்கு உள்ளாக்குகின்றது. எல்லா உயிர்களும் ஒன்றே என்பதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டாலும், உயிர் என்பது தமிழ் சிங்கள மக்களுக்கு வெவ்வேறானவையே என்ற நிலைப்பாட்டுடன் செயற்படும் ஒரு இராணுவம், இங்கே குருதிக் கொடை வழங்க முனவந்தாலும், ஏற்பாடுகளை முன்னெடுத்தாலும், அது ஒரு உள் நோக்கம் கொண்டதாகவே இருக்க முடியும்.

சுனேத்திரா தேவி பிரிவேன ரஜமகா விகாரையைச் சேர்ந்த 16 பௌத்த துறவிகளின் குருதிக் கொடையை ஒரு நல்லெண்ண முயற்சியாகவே எடுத்துக் கொண்டாலும், அவர்கள் தாமாகவே இதற்கான ஒழுங்குகளை முன்னெடுத்திருந்தால், அது பெருமைப்படக்கூடிய ஒன்றாக தமிழ் மக்களால் கணிக்கப்பட்டிருக்கும். பௌத்த தர்மத்தின் பாதையில் நடக்கும் இந்தப் பிரிவைச் சேர்ந்த துறவிகள், தென்பகுதி மக்கள் மத்தியில் இனவாத, மதவாதத்தை தூண்டிவிடும் தீய சக்திகளுக்கு எதிராகச் செயற்படவும்வேண்டும். மதவாத, இனவாதக் கூச்சல்களால், இனங்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்தும் அரசியல் தலைமைகளையும், பௌத்த துறவிகள் வேடத்தில் உலவும் போலிகளையும் இனங்கண்டு தென்பகுதியில் மக்கள் மத்தியில் அவர்களுக்கு இருக்கும் ஆதரவை முறியடிக்க இந்தப் பிரிவைச் சார்ந்த துறவிகள் கடும் பிரயத்தனங்களைக் கையாளவேண்டும். புதிய அரசமைப்பு இலங்கையின் அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக அமையவேண்டும் என்பதைச் சகல தரப்பினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் இவர்கள் மூலம் தேவை. பல்லின மக்கள் வாழும் நாடுகளில், வெவ்வேறு இன மக்களை ஒரே இனமாக மாற்றுவதற்கான சூழ்ச்சிகளில் எந்தவொரு நாட்டு அரசும் இறங்கியதில்லை. மாறாக, எல்லா இனமக்களுக்குமான உரிமைகள் பேணப்படும் வகையிலேயே அவர்களது அரசியல் யாப்பு வரையப்படுகிறது என்ற உண்மையை இங்குள்ள அரசியல்வாதிகளிடம் வலியுறுத்துவதுடன், இனவாத, மதவாதத் தலைமைகளை ஒதுக்கிவைக்கவும் இந்தப் பிரிவேன தரப்பினர் அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும்.

### வடக்கு ஆளுநரது குதர்க்கமான கருத்து வெளிப்பாடு

பிக்குமார் குருதிக்கொடை வழங்கியுள்ளனர். சுகவீனமடைந்துள்ள நீங்கள்நலம்பெற்று வீடுதிரும்பும்போது அவர்களின் குருதியே உங்கள் உடல்களில் இருக்கும் என வடக்கு மாகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரே கூறியிருப்பதும், அவரது இனக்குரோத நிலைப்பாட்டின் எதிரொலியாகவே தெரிகின்றது.

இனரீதியிலும், அரசமைப்பு ரீதியிலும், நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினையைத் தோற்றுவிக்க முற்படின் அது பெரும் குருதிக் களரியை ஏற்படுத்தும் என்ற உண்மையை தென்பகுதி மக்களுக்கு எடுத்து உணர வைத்து, எதிர்காலத்தில் அதனைத் தடுத்து நிறுத்தும் சக்தியாக தென்பகுதிமக்களை ஆக்கிட இந்தப் பிரிவேன தரப்பினர் முயல வேண்டும். குடியேற்றியோ, குருதியை வழங்கியோ ஒரு இனத்தை இன்னொரு இனமாக மாற்ற முயற்சிப்பது இலகுவான ஒன்றல்ல என்பதையும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்கும், ஒருபகுதி மக்களைக் குரோ தப்பார்வையுடன் நோக்கும் இராணுவத்துக்கும் உணர்த்தும் வகையில் இந்த பௌத்ததுறவிமாரது குருதிக்கொடை உயிர்காக்க என்ற பதத்துள் மட்டும் அமைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் வறட்சி காரணமாகவடபகுதிபெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர் கொள்கின்றது. குடாநாட்டின் நிலத்தடி நீர், பயன்பாட்டுக்கு உதவாத நிலைக்கு மாறியுள்ளதால், மக்கள் குடிதண்ணீருக்காக அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வடபகுதியின் அவலநிலை தொடர்பாகவும், தேவைகள் தொடர்பாகவும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

■ சேரலாதன்

# மக்களின் எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கிய வடமாகாண சபை

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நெருங்கி வருகின்றது. இதன் முதலாவது தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றிருந்தது. மாகாணசபை தொடர்பான எதிர்பார்ப்பு மிக அதிகமாக மக்களிடம் காணப்பட்டதால், அவர்கள்வாக்களிப்பில் பெரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வாக்களிப்பைக் குழப்புவதற்கு சிலர் முயற்சிசெய்தனர். வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். ஒருவரின் வீட்டின் மீது தாக்குதல் முயற்சி இடம்பெற்றது. வாக்காளர் அட்டைகளைப் பறிக்கும்முயற்சியில்சிலர் ஈடுபட்டனர், வாக்குச் சாவடிகளுக்கு முன்பாக நடமாடிய இனம்தெரியாத சிலர் வாக்காளர்களை அச்சுறுத்துகின் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி மக்கள் தமது வாக்களிக்கும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். அனைவரும் எதிர்பார்த்தது போன்று தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றது. முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றார். இவருக்குஅடுத்தஇடத்தைதிருமதிஅனந்தி சசிதரன் கைப்பற்றியிருந்தார். முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற மதிப்பார்ந்தஎண்ணம்மக்களிடையே காணப்பட்டதால் சி.வி.விக்னேஸ்வரனால் அதிக விருப்பு வாக்குகளைப் பெறமுடிந்தது. காணாமற்போன முன்னாள் முக்கிய போராளி ஒருவரின் துணைவியார் என்ற அனுதாபம் அனந்திக்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைக்கக்காரணமாகியது.

### வடக்கு மாகாணசபைத் தேர்தலால் பெருமைப்பட்டுக் கொண்டனர் தமிழ் மக்கள்


வடபகுதித் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்ற செய்தியை வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் உலகுக்கு எடுத்துக் கூறின. உலகெங்கும்வாழ்கின்றதமிழர்கள் வடக்கின் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். குதூகலித்து மகிழ்ந்தனர். தமிழர்களுக்கு ஒரு விடிவு பிறந்துவிட்டது. போன்றதொரு தோற்றப்பாடும் உருவாகியது. சி.வி. விக்னேஸ்வரன்வடக்கின் முதலாவது முதலமைச்சரானார். அவரே நான்கு அமைச்சர்களையும் நிய மித்தார். கூட்டமைப்பின் கொள்கைக்கு ஏற்ப, நான்கு பங்காளிக் கட்சிகளிலிருந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

கொடிய போரினால் உயிரிழந்த தமிழர்களின் ஆன்மாக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் மாகாணசபையின்செயற்பாடுகள்அமையப்போகின்றன என்ற எதிர்பார்ப்பு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் நிறையவே இருந்தது. முதலமைச்சர் ஒரு நீதியரசராக இருந்தவர் என்ற வகையில் அவர் மீதும் நிறையவே எதிர்பார்ப்புக் காணப்பட்டது. மாகாணசபை உறுப்பினர்கள் கூட தமது சொந்த விருப்புக்களைத்தியாகம்செய்துதமதுஇன்னல்களைக் களைவதற்கு முழுமூச்சுடன் உழைப்பார்களெனவும் மக்கள் நம்பியிருந்தனர். போரினால் அழிந்த ஒரு பிரதேசம் என்ற வகையில் வடபகுதி மக்களின் தேவைகள் அளப்பரியனவாகக் காணப்பட்டன. பல்வேறுபட்ட பிரச்சினைகளை மக்கள் எதிர்கொண்ட நிலை நிலவியது.

### தமிழ் மக்களது தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளம், ஏராளம்

வடக்குத் தமிழ் மக்களது பிரச்சினைகளில், இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு இதில் பிரதான இடத்தை வகிக்கின்றது. வலிகாமம் வடக்கு உட்பட வடக்கின் பல பகுதிகளில் மக்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கபபட்ட நிலையில் காணப்படுகின்றன.


அவற்றை மக்களிடையே திரும்ப ஒப்படைக்கின்ற நோக்கம் படைத்தரப்பிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. இந்த நிலையில் அந்த மக்கள் அனாதைகள் போன்று அங்குமிங்கும் அலைந்துதிரிகின்றனர். இதைவிட, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் படுகின்ற வேதனைகள் சொல்லி மாளாதவை. தமது கண்ணெதிரே படையினரால் கூட்டிச் செல்லப்பட்ட உறவுகள் தொடர்பாக எதுவுமே தெரியாமல் பல ஆண்டுகளாக நரக வேதனையை அவர்கள் அனுபவிக்கின்றனர். போரின்போது வீடுகளை இழந்தவர்களுக்குப் புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பொருத்து வீடா? கல்வீடா? என்ற வாதப்பிரதிவாதங்கள் சூடுபறக்கிறதேயொழிய உருப்படியான வேலைத்திட்டங்களைக் காண முடியவில்லை. வடக்கில் பலர் வேலை கிடைக்காத நிலையில் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். வேலைகிடைக்காத பட்டதாரிகளும், ஆசிரியர்நியமனம்கிடைக்காததொண்டராசிரியர்களும் வேறு வழியின்றிப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். வடபகுதியில் இயங்கிவந்த தொழிற்சாலைகள் போரின்போது அழிக்கப்பட்டுவிட்டன. இவற்றுக்கு மாற்றீடாகப் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதால் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாக மாறி வருகின்றது. கடும் வறட்சி காரணமாக வடபகுதி பெரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர் கொள்கின்றது. குடாநாட்டின் நிலத்தடி நீர், பயன்பாட்டுக்கு உதவாத நிலைக்கு மாறியுள்ளதால், மக்கள் குடிதண்ணீருக்காக அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வடபகுதியின் அவலநிலை தொடர்பாகவும், தேவைகள் தொடர்பாகவும் அடுக்கிக்கொண்டே போகலாம்.



### வடக்கு மாகாண சபை மக்கள் நலன் தொடர்பாக இதுவரை சாதித்ததென்ன?

ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் வடக்கு மாகாணசபை இவற்றுக்கு வழங்கிய பரிகாரம் என்னவென்பது தான் மக்களுக்குப் புரியவில்லை. மாகாணசபை உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்துகொண்டு தமக்கு வழங்கப்படுகின்ற சிற்றுண்டி வகைகளை ருசி பார்ப்பதிலும், தேவையற்ற விவாதங்களில் ஈடுபட்டு நேரத்தை வீண்விரயம் செய்வதிலும், தீர்மானங்களை நிறைவேற்றி அடுக்கி வைப்பதிலுமே சாதனை புரிந்துள்ளனர். இந்த இலட்சணத்தில் மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணைகள் வேறு. இடம் பெற்று முடிந்துள்ளன. இதன் உச்சக் கட்டமாக, முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரும் புயலையே கிளப்பிவிட்டது. ஆளும் கட்சி உறுப்பினர்களே தமக்குள் மோதிக்கொண்ட அசிங்கத்தைக் கண்டு மக்கள் முகம் சுளிக்க வேண்டியதாய்ப்போய்விட்டது.

இந்த நிலையில் அடுத்த மாகாண சபைத்தேர்தல்தொடர்பாக, இப்போதே சிலர் கனவுகாண ஆரம்பித்துவிட்டனர். தீர்வையற்ற வரிச்சலுகையுடனான வாகனங்களைப் பெற்று குடும்பத்தினருடன் ஊர்கோலம் வருவதற்கு எவருக்குத்தான் கசக்கும்? ஆனால் மக்கள் இவர்கள் தொடர்பாகத் தெளிவுடன் இருக்கின்றனர். ஊழல் புரிந்த மாகாணசபை உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் மக்களிடம் உள்ளன. தேர்தல் வரும்போது இத்தகைய ஆசாமிகள் துண்டைக் காணோம்; துணியைக் காணோம் எனத் தலைதெறிக்க ஓடவேண்டிய நிலைதான் உருவாகப் போகின்றது. ஆகவே எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல், சென்ற தேர்தல் போன்று வேட்பாளர்களுக்கு இலகுவான தொன்றாக இருக்கப் போவதில்லை என்பதை இப்போதே கூறிக் கொள்ள முடியும். ■



## ஆசிரியருக்கான கடிதம்

### மடியில் கனமிருந்தால்தான் வழியில் பயமிருக்கும்

அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக ஆக்கும் புதிய சட்டம் முன்னாள் அரசதலைவர் மகிந்த மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய உள்ளிட்ட மற்றும் பல படை உயரதிகாரிகள் தண்டிக்கப்படத்தக்க நிலைமையை உருவாக்கிவிடும். எனவே குறித்த அந்த முயற்சி கைவிடப்படல் வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய பிரமுகர் தினேஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ள கருத்து அபத்தமானது; நியாயமற்றது.

அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்பணிந்து செயற்பட்ட படையினரை முன்னிலைப்படுத்தி, குறித்த சட்டமூலம் போர்க்குற்ற குற்றச்சாட்டின் கீழ் படையினர் தண்டிக்கப்பட வழி வகுக்குமென்பதால் பதில் குறித்த சட்டவரைவு கைவிடப்பட வேண்டுமென முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய வெளியிட்டுள்ள கருத்து முற்றுமுழுதா புறந்தள்ளப்பட வேண்டியதொன்று.

விடுதலைப் புலிகளுடனான போரின்போது வெள்ளைவான் கலாசாரத்தை முன்னெடுத்து அப்பாவித் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலபேரைக் காணாமல் போகச்செய்ததில் முக்கிய சூத்திரதாரியாகத் திகழ்ந்தவர் இந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவே என்பது உலகம் அறிந்த உண்மை.

ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும் என்ற முதுமொழியொன்று தமிழில் வழக்கில் உண்டு. அந்த வகையில் அதிகாரத்தை இழந்ததால் இன்று பல மற்றுப் போயுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர், எங்கே குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டால் அதன் விதிகளுக்கமையத் தாமும், முன்னாள் அரச தலைவரும் தண்டிக்கப்பட நேர்ந்துவிடுமோ என்ற பேரச்சம் காரணமாக இத்தகைய வங்குரோதத்தனமான கருத்தை வெளிப்படுத்துவதாகக் கருத முடிகிறது.

மடியில் கனமிருந்தால்தான் வழியில் பயம் ஏற்படும்; குற்றமுள்ள மனதே குறுகுறுக்கும் போன்ற எமது மூதாதையர்களது . முதுமொழிகள் இது விடயத்தில் எந்த அளவுக்குப் பொருந்துகின்றது பார்த்தீர்களா? எது எப்படியோ, போதிலும் கடந்த காலத்தில் ராஜபக்ச ஆட்சியாளர்களது நிர்வாகத்தில் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து என்றோ ஒருநாள் நீதி கிட்டும் என்ற எம்மவர்களது நம்பிக்கை பொய்யாகாது.

ப.தவலிங்கம்
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புடன் வரவேற்கின்றோம்

கொழும்பில்

**Smart India Expo 2017**

மாபெரும் மருத்துவ விழிப்புணர்வு

குழந்தைச் செல்வம் உங்கள் வீட்டில் இல்லையே என்ற ஏக்கமா?

இந்தியாவின் சிறப்பு வைத்தியர்கள் இந்த கண்காட்சியில் விழிப்புணர்வு வழங்க வருகிறார்கள்

# குழந்தையின்மைக்கான நிபுணர்கள்
# இடுப்பு, கால், கை மூட்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள்
# புற்று நோய் சிகிச்சை நிபுணர்கள்
# குடல், பயில்ஸ் சம்பந்தமான நோய்களுக்கான சிகிச்சை நிபுணர்கள்

வைத்தியத்திற்காக இந்தியா செல்வதற்கு இலவச விமானச் சீட்டு

கொழும்பு கோட்டை லேக் ஹவுஸ் பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக

கண்காட்சியும், விற்பனையும்

அத்தோடு ஏனைய விற்பனைக் கூடங்களும் இங்குண்டு.

14th 15th & 16th July 2017 10.00 am - 8.00 pm

Sri Lanka Exhibition & Convention Centre - Colombo - 1 Opp. Lake House

Contact : 0777 569 382

Event managed by: MP International

# பாகிஸ்தான் தூதரகத்திற்கு கொழும்பு நகரில் காணி

## அமைச்சர் றிசாத் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் பாகிஸ்தான் தூதரகத்துக்கு அலுவலகம் ஒன்றை அமைப்பதற்காக அமைச்சர் றிசாத் பதியுதீன் 1.5 ஏக்கர் காணியை விடுவித்துள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், அது குறித்து அரசு தெளிவுபடுத்தவேண்டும் என்றும் பொதுபல சேனா அமைப்பு கோரியுள்ளது.

இலக்கம் 17, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரியில் இருக்கும் காணியே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தூதரகத்திற்கு ஏற்கனவே இடம் உள்ளது.

சமூர்த்தி ஆணையாளர் திணைக்களத்துக்குச் சொந்தமாக இருந்த இந்தக் காணி உணவு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டது.

உணவுத் திணைக்களம் பெற்றுக்கொண்ட இந்தக் காணி அயலுறவு அமைச்சின் கோரிக்கைக்கு அமைய பாகிஸ்தான் தூதரகத்தை நிர்மாணிக்க வழங்கப்பட்டுள்ளது. இது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது எனப் பொதுபல சேனா அமைப்பின் சுதத்த தேரர் குறிப்பிட்டார். (த-ய)



# அமெ. தாளத்திற்கே ஆடுகின்றது அரசு

## வாசுதேவ நாணயக்கார சாடல்

கொழும்பு, ஜூலை12

அமெரிக்காவின் சொற்படியே அரசு செயற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

சைட்டம் மருத்துவக் கல்லூரி விடயத்திலும் அரசு அவ்வாறே செயற்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் விவகாரத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆதரவு தெரிவிக்கவில்லை. மாறாகத் தற்போதைய அமைச்சரவையின் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளவே தனது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள வீதிகளில் குப்பைகள் கிடையாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியிருந்த போதிலும் நகரைச் சுற்றியும் குப்பைகள் கிடக்கின்றன - என்றார். (த-ய)



SKT

**சிறி குமரன் ரெக்ஸ்**

அசத்தலான ஆடித்தள்ளுபடி

சிறிகுமரன் ரெக்ஸின் மாபெரும் ஆடித்தள்ளுபடி தட்டாதெருச் சந்தியில்...

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துரக ஆடைகளும் விசேட தள்ளுபடி விலையில்...

விசேடமாக Office ware சாறிகள் மிகக்குறைந்த விலைகளில்

ஆடித்தள்ளுபடியில் ஓர் ஜாலியான ஷொப்பிங்

சிறி குமரன் ரெக்ஸ்

770.K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 221 6845

**பனைஅபிவிருத்திச் சபை**

**PALMYRAH DEVELOPMENT BOARD**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

Ministry of Prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs

**BID FOR WEB PAGE DESIGNING & WEB HOSTING**

Bids are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following requirements for the Official Website Page Designing and Web Hosting of the Palmyrah Development Board.

1. Domain Name Registration (Ex: .lk)
2. Search Engine Visibility:
   Custom Search Engine Optimization Strategy, Competitor Analysis, Backlinks Development.
3. Web Design & Development (Drag and Drop Website Builder)
   a. Custom Web Application & Software Development, Content Management Solution (CMS), Management access to login division wise for daily updates, Access in Three National Languages (English & Sinhala, Tamil)
   b. Content Management System:
      i. Self-maintain
      ii. CMS Training
4. Unlimited E-Mail Address:
   Web Mail (Checking Mail Online), E-Mail Forwarding, Customizable Spam Filters & Virus Checking.
5. Unlimited Web Hosting:
   a. Unlimited Bandwidth, Unlimited Web Hosting Space, Core Exion Processor Servers 99.99% Uptime, Unlimited Email Accounts.
   b. Website Protection Site Scanner
   c. SSL Certificate for Secured Web Hosting.
6. 24x7 Customer Care Services.

Self-prepared Quotation marked the Relevant subject on the top left hand corner of the envelop should be sent by Registered Post addressed to the Chairman, Palmyrah Development Board, N.H.D.A. Building, 1st Floor, Kandy Road, Jaffna to be received on or before 25th of July 2017. Late Quotations will not be considered.

Chairman
Palmyrah Development Board
Telephone No.: 021-2222034 Fax: 021-2224154

**பெயர் மாற்றம்**

நல்லூர், பூநகரி, கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட **பெரியதம்பி பரமலிங்கம்** ஆகிய எனது பெயரை இன்று முதல் **பெரியதம்பி பரமநாதன்** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**பெரியதம்பி பரமநாதன்.**

(AKN 175) (14)

மஹா சக்தியுள்ள

**வசிய மாந்திரிகம்**

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா ?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா ?
- பெற்றோர் விருப்பமின்மையா ?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா ?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா ?
- காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா ?

வரமுடியாதவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் செய்து தரப்படும். உத்தரவு.

இரகசியம் பேணப்படும்.
நம்பிக்கை - உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
உங்களின் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து உதவிகள் செய்வேன்.

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்த

**சீதா குணவதீ குரு மேனியோ**

மெனிக்ஹின்ன - திகன 0766 282 874, 077 392 9989

என்னைத் தொடர்பு கொண்டவர்களுக்கு ஒரு நாளும் தோல்வியில்லை.

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு : 0094 766 282 874

**காணி தேவை**

K.K.S மாவிட்டபுரம் வீமன்காமம். வறுத்தலை விளான் தையிட்டி மயிலிட்டி போன்ற இடங்களில் 40 - 100 பரப்பு காணி தேவை.

**077 480 1734**

**தவறிவிட்டது**

இராசேந்திரம் சுபாசினி என்பவருடைய திருமணச் சான்றிதழ் உட்பட மேலும் சில ஆவணங்கள் அடங்கிய பையொன்று யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் பேருந்தொன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 456 4026**

**வீடு வாடகைக்கு**

சுண்டுக்குளி ஈச்சமோட்டை வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

(CS 5648) (14)

**077 711 1041**

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.
Bill Clerk மற்றும் உதவியாளர் தேவை.

**077 386 6250**




**வீடு காணி விற்பனைக்கு**

உரும்பிராய் கிழக்கு ஆனந்தகானம் என்னும் முகவரியில் அமைந்துள்ள (பண்ணையான் கலட்டி) என்னும் பெயருடைய 1½ பரப்புக் காணியும் அதனுள் 3அறைகள் சமையலறை, விறாந்தை, வெட்டுக்கிணறும் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 930 6982/077 841 6920**

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் தேசியத்தை உருவாக்கி

# இணைந்த வடக்கு–கிழக்கில் உரிமைகள் பெறவேண்டும்

## முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் கருத்து



அம்பாறை, ஜூலை 12

வடக்கு-கிழக்கு இணைப்பு சாத்தியமாகியுள்ள நிலையில், முஸ்லிம்களை ஒன்றிணைத்து ஒருதனித்துவமான தமிழ்மொழி முஸ்லிம் தேசியம் என்பதை நிலைநிறுத்தும் பட்சத்திலேயே முஸ்லிம் தேசியத்திற்கான சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி எம்.எச்.சேகு இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கடற்கரையில் இடம்பெற்ற தமது கவிதைநூல் வெளியீட்டு விழாவின்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது: கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்று ரிசாத் பதியுதீனின் மக்கள் காங்கிரசும், அதாவுல்லாவின் தேசிய காங்கிரசும் தமது நிலைப்பாடுகளைத்தனித்தனியாய் வெளிப்படுத்தியுள்ளன.

அந்த வழிகள் ஆகச் சிறந்தவை என்று எடுத்துக் கொள்ளமுடியாவிட்டாலும் முஸ்லிம் தேசியத்தின் உணர்வுகளை ஒருவாறு பிரதிபலிக்கின்றன என்பதில் எந்தசந்தேகமுமில்லை. ஆனால் முஸ்லிம் தேசியம் தமிழர்கள் கையில் பட்ட துன்பத்தை அனுபவித்திராத ஹக்கீம் வடக்கும் - கிழக்கும் இணைக்கப்படுவதற்கு எதிர்ப்பும் இல்லை என்று பத்திரிகைகளில் பகிரங்கமாகக் கூறியுள்ளார். அப்படி அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ள ஹக்கீம் வடக்கு-கிழக்கு முஸ்லிம் தேசியத்தின் அதிகாரப் பரவலாக்கம் பற்றியோ, அதிகார அலகு பற்றியோ ஒருவார்த்தைதானும் கூறவில்லை.

இதிலிருந்து ஹக்கீம் வடக்கு -கிழக்கு முஸ்லிம்களை தமிழர்களின் கூட்டாட்சிக்கு அப்படியே தாரைவார்ப்பதற்குத் தயாராக இருப்பதையே காட்டுகிறது. இனி முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம் தேசியம் நம்பத் தேவையில்லை.

இணைந்த வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கு ஒரு கூட்டாட்சியோ அல்லது அதிகரித்த அதிகாரங்களுடனான ஒரு மாகாணசபையோ வழங்கப்படும் பட்சத்தில், அதேபோன்ற ஒருஅதிகார அலகை முஸ்லிம் தேசியமும் பெற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு முஸ்லிம் காங்கிரஸ் துணிந்து கொள்கைகளை முன்வைக்குமாக இருந்தால் எம்மாலான பங்களிப்பைச் செய்வோம் -என்றார். (து)

# சாட்சியமளிப்பவரை நிர்ப்பந்தித்து விசாரணையைத் திசை திருப்பாதீர்

## அலோசியஸின் சட்டத்தரணிக்கு ஆணைக்குழு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 12

ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் ஒருவரிடம் குறுக்குக் கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறக்கூடிய உரிமை மட்டுமே சட்டத்தரணியொருவருக்கு உள்ளது. சாட்சியை எவ்விதத்திலும் நிர்ப்பந்தித்துத் தனக்குத் தேவையான வகையில் சாட்சியத்தைப் பெறமுடியாது எனப் பிணைமுறிமோசடி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் கே.டி.சித்திரசிறி, பர்பெச்சுவல் ட்ரஸ்ரிஸ் நிறுவனத்தின் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி நிஹால் பெர்னாண்டோவுக்குக் கடுமையான எச்சரிக்கையை விடுத்தார்.

இந்த வழக்கில் தனக்குச் சாதகமாக சாட்சியமளிக்குமாறு பான் ஏசியா வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் அருண பெனடிக்றை அர்ஜுன் அலோசியஸ் நிர்ப்பந்தம் செய்தார் என்ற விடயம் ஆணைக்குழுவின் முன்னிலையில் அம்பலமானதைத் தொடர்ந்து அலோசியஸின் சட்டத்தரணிக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (து)

**தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்**
**A9 வீதி ஆனந்தபுரம் கிளிநொச்சி**

**தொழில் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்**

தேசியகொள்கைகள் மற்றும் பொருளாதரா விவகாரங்கள் அமைச்சு மற்றும் உலக உணவுத்திட்டம் ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் கிளி / தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் **03 மாதகால** சான்றிதழ் பயிற்சி நெறிகளிற்கு பொருத்தமான 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்**

**1. கைத்தொலைபேசி திருத்துதல்**
**2. அனுமினியம் பொருத்துதல்**

மேற்படி பயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 18.07.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல்வேண்டும். ஒழுங்காக பயிற்சியில் கலந்து கொள்பவர்கள் பின்வரும் சலுகைகளைப் பெற தகுதி உடையவர்களாவர்.

1. பயிற்சியில் ஈடுபடுபவர்களிற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக நாளொன்றிற்கு ரூபா. 360.00 வீதம் மாதமொன்றிற்கு 7200.00
2. பயிற்சி நிறைவில் தொழிலை ஆரம்பிப்பதற்கான உபகரணப்பொதி வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர், தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்**
**A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.**
தொலைபேசி: **021 228 5011**

# மாகாண சபைகளின் நிர்வாகத்தை அரசு ஆணையாளர்களிடம் ஒப்படைக்க முயற்சி

## ஜனக பண்டார தென்னகோன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

தேர்தலை நடத்தாமல் மாகாண சபைகளின் நிர்வாகத்தை ஆணையாளர்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு முயற்சி வருவதாக முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைகளின் நிர்வாகத்தையே ஆணையாளர்களிடம் ஒப்படைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு வருவதைப்போலவே இந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களும் இறுதிநேரத்தில் ஒத்திவைக்கப்பட்டு அவற்றின் நிர்வாகங்கள் ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என்றார். (து-ய)

**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**
12.07.2017




கைதடி கிழக்கைச் சேர்ந்த
மயூரன் கிருஷாந்தினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**அக்ஷரி**
இன்று (12.07.2017) புதன்கிழமை
தனது முதலாவது பிறந்தநாளை
லண்டனில் வெகு விமர்சையாக
கொண்டாடுகிறார்
இவரை அப்பா – மயூரன்
அம்மா – கிருஷாந்தினி
ஆகியோருடன் இணைந்து
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார்,
மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார்,
மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் கைதடி விரகத்திப் பிள்ளையாரின் அருள்பெற்று
பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு, கைதடி.
தகவல்: அப்பப்பா - பொ.கந்தசாமி
அப்பம்மா - க. புஸ்பலீலாவதி

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**மீனாட்சிபிள்ளை தம்பிப்பிள்ளை**
தோற்றம் 02.06.1926
மறைவு 05.07.2015
திதி: சாங்கடஹர சதுர்த்தி

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தாயாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
இரண்டாண்டுகள் பறந்தோடிச் சென்றாலும்
என்றென்றும் அவர் பாதம் போற்றியே பணிந்திடுவோம்.

தகவல் : த. புஸ்பராசா (மகன்)
ராஜிகா ஸ்ரோஸ்
மாவடிக் கந்தன் ஆலயம் முன்
கைதடி மத்தி, கைதடி.

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
"இராஜேஸ்வரி பவனம்"
கைதடிதெற்கு, கைதடி.

075 040 2302 / 075 673 6874

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கினால் குழந்தை சாவு

சிலாபம் தெதுருஓயா உதாகல கிராமத்தைச் சேர்ந்த ஒன்றரை மாதக் குழந்தை ஒன்று டெங்கினால் உயிரிழந்துள்ளது.
சிலாபம் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளதுடன், அதன் தாயும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
தாயின் உடல் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் குழந்தை இறந்த தகவலும் அவருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.
நாட்டில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப் பகுதிக்குள் டெங்கு நோயினால் 225 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (த)

# ஊழல்களுக்கு எதிராகவே கூட்டமைப்பு செயற்படும்

## கூறுகிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு, ஜூலை 12
ஊழல்களுக்கு எதிராகப் பலமான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் இடம்பெற்ற கவன வீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
மாவட்டச் செயலாளரை இடமாற்றக் கோரியும், மாற்றம் செய்யப்பட்டுள்ள இரு பிரதேச செயலாளர்களின் இடமாற்றங்களை நிறுத்தக் கோரியும் நேற்று முன்தினம் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பைப் பொறுத்தவரை வறுமையிலும் போதைப் பொருள் பாவனையிலும் முன்னணியில் உள்ளது. இந்த நிலையில் ஊழல் நிறைந்த மாவட்டமாகவும் மாறி வருகின்றது.
அந்த ஊழல்களுக்கு எதிராகப் பலமான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. யாராக இருந்தாலும் அதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கின்றோம்.
ஊழல்களில் ஈடுபடும் அதிகாரிகள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் மாவட்டச் செயலகத்தில் சில ஊழல்கள் நடைபெற்றுள்ளன.
அது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்ததுடன், அவற்றுக்கான விசாரணையை நடத்துமாறும் கோரியிருந்தேன். ஆனால் விசாரணை இதுவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை.
உள்நாட்டலுவல்கள் அமைச்சரை அழைத்து மாவட்டச் செயலரை இடமாற்றுமாறு கோரியிருக்கின்றோம். அவரும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார். நாங்கள் இதில் பிரதேச வாதம் காட்டவில்லை. மாவட்டச் செயலராக வருவதற்கான தகுதி பலருக்குள்ளது. அவ்வாறான தகுதியுள்ளவர்கள் இங்கு சாதாரண உத்தியோகத்தில் உள்ளனர். அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் - என்றார். (த-ய-47)



# தளபதிகளுக்கு எதிராக கோத்தபாய சாட்சியம்

## காங்கேசன்துறை சிமெந்து ஆலை இரும்பு மோசடி தொடர்பில்

கொழும்பு, ஜூலை 12
முன்னாள் இராணுவத் தளபதி மற்றும் இரண்டு முன்னாள் இராணுவ உயர் அதிகாரிகள், முன்னாள் உயர் அரச அதிகாரி ஆகியோருக்கு எதிராகச் சாட்சியம் அளிப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச சத்தியக் கடதாசி ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார்.
முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பெரும் மோசடிகள் மற்றும் ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் அரச தலைவர் ஆணைக்குழு முன்பாகக் கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் முன்னிலையாகியிருந்தார்.
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் இயந்திரங்களை பழைய இரும்புக்காக வெட்டி அகற்றிய பல மில்லியன் ரூபா மோசடி தொடர்பாகவே அவரிடம் சாட்சியங்கள் பெறப்பட்டன.
இதன்போது, முன்னாள் இராணுவ மற்றும், அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராகச் சாட்சியம் அளிப்பதாக, கோத்தபாய ராஜபக்ச சத்தியக்கடதாசி ஒன்றில் ஆணைக்குழு அதிகாரிகள் முன்பாகக் கையெழுத்திட்டு வழங்கியுள்ளார்.
முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க, யாழ். படைகளின் தளபதிகளாக இருந்த மேஜர் ஜெனரல் உதய பெரேரா, மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலராக இருந்த சிறிபால ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு எதிராகவே சாட்சியமளிப்பதாகவே கோத்தபாய ராஜபக்ச சத்தியக்கடதாசியில் கையெழுத்திட்டுள்ளார்.
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை இரும்பு மோசடி தொடர்பாக, மேற்படி இராணுவ மற்றும் அரச அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.
அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலரான சிறிபால ஹெட்டியாராச்சி அளித்த சாட்சியத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்சவின் உத்தரவின் பேரிலேயே, சிமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்களை வெட்டி அகற்றுவதற்கு தாம் எழுத்துமூல அனுமதி கொடுத்ததாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 27 . 09 . 1937

மண்ணின் மடியில் 24 . 06 . 2016



## அமரர் குமாரு துரைச்சாமி

திதி: சங்கடஹர சதுர்த்தி

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே
எம் குடும்ப விளக்கே
நீங்கள் எம்மை விட்டுச் சென்று ஆண்டு ஒன்று
உருண்டோடி விட்டதே நம்பமுடியவில்லை
உங்கள் அன்பான கதைகள் எம் காதுகளில்
ஒலிக்கின்றது உங்கள் சிரித்த முகம்
அன்பான பார்வை கொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது
என்றும் எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள்

அன்னாரின் இல்லத்தில் இன்று (12.07.2017) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் முதலாம் வீதி,
கொடிகாமம்.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பொன்னையா கிருஷ்ணகுமாரன்

(தபாலகம் - நெடுந்தீவு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கிருஷ்ணகுமாரன் 10.07.2017 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுஷியாதேவியின் (ஆசிரியை -உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், ஹேமானந் (Y.M.C.A - Jaffna) . சோபானந், பிரசாந் (மாணவன் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுமாரன் (வவுனியா), இந்திரகுமாரன் (C.T.B - மன்னார்), பரா, கீதா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணாதேவி, வண.T.H.வசந்தகுமார் (தென்னிந்தியத் திருச்சபை), தயாளகுமார், சுரேந்திரகுமார், வண T.O.திருக்குமார் (அங்கிலிக்கன் திருச்சபை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.07.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக பரி.யாக்கோபு ஆலயம் நல்லூருக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

51/29, சேர்ச் லேன்,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 224 2849

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்
பரிபாலனசபையில் பரம்பரை உறுப்பினராக
இருந்து வந்த

**இராமலிங்கம் கந்தையா**

அவர்கள் 03.07.2017 அன்று லண்டன் மாநகரில் இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

நம்பிக்கை பொறுப்பாளர்,
பரிபாலன சபையினர், கைதடி வீரகத்திப்
பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 07 . 05 . 1966

உதிர்வு 13 . 06 . 2017



## அமரர் இளையதம்பி சாந்தசொரூபன்

(கட்டடப் பொறியியலாளர், முன்னாள் உப தவிசாளர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்)

கடந்த 13.06.2017 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடனே வருகை தந்து சகல விதத்திலும் உதவிகள் புரிந்த உற்றார். உறவினர்கள். அதிபர்கள். ஆசிரியர்கள். பெற்றோர்கள். நண்பர்கள். மாணவர்கள் அனைவருக்கும் தொலைபேசி. தொலைநகல் மூலம் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (12.07.2017) புதன்கிழமை காலை 5.00 மணியளவிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (13.07.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மணலாவத்தை,
[illegible]

குடும்பத்தினர்.

076 780 1529 / 077 734 9592 / 021 226 1156

# பிரதியமைச்சரின் வாகனத்துக்குள் பிஸ்டல், குண்டு

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12
பிரதி அமைச்சரினால் மீளக் கையளிக்கப்பட்ட சொகுசு வாகனத்தினுள் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும், கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டமை குறித்து, இரண்டு வெவ்வேறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அஞ்சல் மற்றும் முஸ்லிம் மத விவகாரப் பிரதி அமைச்சர் துலிப் விஜேசேகர, புதிய வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொண்டதை அடுத்து, தனது பாவனையில் இருந்த வாகனத்தை அமைச்சிடம் ஒப்படைத்திருந்தார்.
அந்த வாகனத்தை நிதி அமைச்சின் அதிகாரிகள் சோதனையிட்டபோது, அதில் கைத்துப்பாக்கி ஒன்றும், கைக்குண்டு ஒன்றும் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.
இவையிரண்டும் இத்தாலியில் தயாரிக்கப்பட்டவையாகும். இதையடுத்து, இரண்டு வெவ்வேறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பரிஸில் கனமழை

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் மட்டும் வரலாறு காணாத அளவுக்கு மழை கொட்டித் தீர்த்துள்ளது. இதனால், 20 ரயில் நிலையங்கள் மூடப்பட்டன.

சுமார் இரண்டு மணி நேரம் வெளுத்த மழை 54 மில்லி மீற்றர் அளவுக்குப் பதிவாகியுள்ளது. இது ஒரு மாதத்தில் பெய்யும் சராசரி மழையின் அளவாகும். இதன் காரணமாக அந்த நகரில் உள்ள 20 மெட்ரோ ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. நகரின் முக்கிய சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த 1995ஆம் ஆண்டு 47.4 மில்லி மீற்றர் அளவுக்கு மழை பெய்ததே அதிகபட்சமாக இருந்தது. பரிஸின் புறநகர் பகுதிகளிலும் மழையின் தாக்கம் அதிகமாக இருந்தது என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

### மோசூல் மீட்புப் போரில்

# மனைவிகள், குழந்தைகளை கேடயமாக்கிய ஆயுததாரிகள்



பக்தாத், ஜூலை 12

மோசூல் நகர மீட்புப் போரில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகள் தமது மனைவி மற்றும் குழந்தைகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி கடும் சண்டையில் ஈடுபட்டமை ஈராக் படைகளால் தற்போது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஈராக்கின் முக்கிய வர்த்தக நகரான மோசூல் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டது. ஈராக் படையின் இந்த வெற்றி நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இறுதிக் கட்டப் போர் தொடர்பிலான தகவல்கள் தற்போது ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்து கொண்டுள்ளன. இதன்படி மோசூல் மீட்புப் போரில் ஆரம்பத்தில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவைச் சமாளிப்பதற்காக பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்திவந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் இறுதிக் கட்டத்தில் தமது மனைவி மற்றும் பிள்ளைகளையே மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியிருந்தனர் என்று சொல்லப்படுகிறது.

(ம)

# மோசூல் நகர மீட்பு முக்கிய மைல்கல்



வொஷிங்டன், ஜூலை 12

ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து மோசூல் நகர் மீட்கப்பட்டமை தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

ஈராக் நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான மோசூல், தைகிரிஸ் நதிக்கரையில் அமைந்துள்ளது. 15 லட்சத்துக்கும் அதிகமானோர் வசித்து வந்த இந்த நகரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடந்த மூன்று வருடத்துக்கு முன்பு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மோசூல் நகர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து முழுவதுமாக விடுபட்டது. ஈராக் தலைமை அமைச்சர் அல் அபாதி மோசூல் மீட்கப்பட்டமையை உறுதிப்படுத்தியமை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியா குத்தேரஸ், "இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தங்களது பகுதிகளுக்கு மறுகுடியமர்வு செய்வது, மீண்டும் வன்முறை நடைபெறாமல் தடுப்பது உள்ளிட்டவற்றில் ஈராக் அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை துணை நிற்கும்" - என்றார். (ம)

# நியூசியில் நில அதிர்வு



வெலிங்டன், ஜூலை 12

நியூசிலாந்தில் நேற்று சக்தி வாய்ந்த நில அதிர்வு ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தென்மேற்கு பசிபிக் பெருங்கடல் அருகே அமைந்துள்ள பனிமலைகளும், எரிமலைகளும் நிறைந்த நியூசிலாந்தில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 6.8 அலகுகளாகப் பதிவானது. நாட்டின் தென்பகுதியில் உள்ள ஆக்லாந்து தீவில் இருந்து சுமார் 195 கிலோ மீற்றர் தூரத்தில் பூமிக்கு அடியில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# 100 நாள்களை எட்டியது வெனிசூலாப் போராட்டம்




கரஸ்கஸ், ஜூலை 12

வெனிசூலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அங்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தற்போது 100 நாள்களைக் கடந்தும் நடைபெற்று வருகிறது. ஆரம்பத்தில் ஆர்ப்பாட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இது தற்போது கலவரமாக மாறியுள்ளது.

நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சியில் வெனிசூலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டது. இதனால் அவர் பதவி வலக வேண்டும் என்று தலைநகர் கரஸ்கஸ் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நூற்றுக் கணக்காண இளைஞர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெனிசுலாவில் போராட்டம் ஆரம்பித்து நேற்று முன்தினத்துடன் 100 நாள்கள் நிறைவடைந்தது.

100ஆம் நாள் போராட்டம் மிகப்பெரும் எடுப்பில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டக் களத்தில் திரண்டிருந்தனர்.

அவர்கள் தமது போராட்டம் 100ஆவது நாளை எட்டியமையைக் குறிக்கும் விதமான பதாகைகளை ஏந்தியிருந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## நடுங்கியது பிலிப்பைன்ஸ்

மணிலா, ஜூலை 12

பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் நில அதிர்வு ஏற்பட்டது என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிலிப்பைன்ஸின் ஆர்மோக் நகரில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 5.4 அலகுகளாகப் பதிவானது. இது மிதமான நிலநடுக்கமாக அமைந்தது. எனினும் கடந்த 6ஆம் திகதி ரிச்டர் அளவுகோலில் 6.5 அலகுகளாகப் பதிவான நிலநடுக்கத்தால் நால்வர் உயிரிழந்தனர். அனல்மின் நிலையம் ஒன்று சேதமடைந்தது. இந்தப் பின்னணியில் நேற்று முன்தின நிலநடுக்கம் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது என்று அறிய வருகிறது. (ம)

# மிசிசிப்பி மாநிலத்தில் வானூர்தி விபத்து

### 12 பேர் உயிரிழப்பு



வொஷிங்டன், ஜூலை 12

அமெரிக்கவில் உள்ள மிசிசிப்பி மாநிலத்தில் கடற்படை வானூர்தி நேற்றுமுன்தினம் விபத்துள்ளானது. இந்த விபத்தில் 12 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வானூர்தி விபத்துக்குள்ளான போது ஏற்பட்ட சத்தத்தை கேட்டு அருகில் உள்ள மக்கள் அப்பகுதிக்கு வந்தனர். மக்களால் கொடுக்கப்பட்ட தகவலை அடுத்தே மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியில் 12 பேரின் சடலங்கள் கட்டெடுக்கப்பட்டன. வானூர்தியில் 16 பேர் பயணம் செய்தனர் என்றும் ஏனையவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# இந்தியாவுடன் பேச பாக். தயார்



தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த இந்தியாவுடன் மீண்டும் பேச்சு நடத்தத் தயாராக உள்ளோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஸ் செரீப்பின் ஆலோசகர் சர்தாஜ் ஆசிஷ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில், "காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இதனை மறைக்க எல்லையில் வேண்டுமென்றே இந்திய ராணுவம் பதற்றத்தை ஏற்படுத்துகிறது. தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த இந்தியாவுடன் மீண்டும் அமைதிப் பேச்சுக்குவர பாகிஸ்தான் தயாராகவே உள்ளது. இத்தாலி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் சுயநிர்ணய உரிமை தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. அதே போன்ற வாக்கெடுப்பு காஷ்மீரில் நடத்தப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 ஜூலை 2017 புதன்கிழமை
புதன் பொய்கை
பக்கங்கள் - 06

**பொன் மொழி**

சொல்வது போல செய்துகாட்டுங்கள். செய்து காட்டுவதை மட்டுமே சொல்லிக் காட்டுங்கள்.

- ஷேக்ஸ்பியர்



2075 இல் சனத் தொகை 1000 கோடி
பக். 19



சலீமுக்கு விருது
பக். 17



நாடகத் துறையில் முத்திரை பதித்த வி.வி.வைரமுத்து
பக். 18

நூல் வெளியீடு

# நீந்திக் கடந்த நெருப்பாறு

## ஈழப்போரின் வரலாறு!

■ எஸ்.மல்லிகா

திட்டமிட்ட தமிழின அழிப்புப் போரின்குருதிதோய்ந்தவரலாற்றைக் கூறும் நாவலான 'பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம் 02' நூலின் அறிமுக விழா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில், கடந்த 08ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எழுகலை இலக்கியப் பேரவையின் போசகரும் மூத்த எழுத்தாளருமான இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வின் பதிவுகள்...

**தலைமையுரை -**
இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

ஈழப்போராட்ட வரலாற்றின் முக்கிய ஆவணமாக இருக்கும் நா. யோகேந்திரநாதன் எழுதிய நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம்1 மற்றும் 2 நாவல்கள், வன்னி இறுதிப்போரில் மக்கள் பட்ட அவலங்களை எந்தவித புனைவுமற்று உண்மையை அப்படியே பேசுகின்றது. நாம் கடந்தகால வரலாற்றின் உண்மையின் பக்கங்களை அறிவேண்டும் என்றால், இதுபோன்ற நாவல்களைப் படிக்கவேண்டும். இதுபோன்ற படைப்புக்களுக்குக் கைகொடுக்க வேண்டும். மூத்த படைப்பாளியான நா.யோகேந்திரநாதன் சிறந்த நாவலாசிரியர், கவிஞர், சிறுகதைஆசிரியர் என்பதனை அவரது படைப்புக்கள் கூறுகின்றன. இவர் தனது மண்ணோடு, மக்களோடு சேர்ந்து வாழ்ந்து வருபவர். எழுத்துலகில் அவர் ஒருபோதும் மதில்மேல் பூனையாக இருந்ததில்லை" என்றார்.

**அறிமுகவுரை** - கை.சரவணன்

நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம்1 மற்றும் 2 நாவல்கள், எழுத்துக்களால் மிக நுட்பமாகச் செதுக்கியெடுக்கப்பட்டுள்ளன. இந்த நாவல்கள் வெறுமனே ஒரு வாசிப்பு அனுபவத்துக்கு அப்பால் பிரதேசம் சார்ந்த நம்பிக்கை, வாழ்நிலை குறித்துப் பேசுகின்றன. இவற்றில் வரும் ஒவ்வொரு பாத் திரமுமே மிகச் சிறப்பாக வார்க் கப்பட்டுள்ளது. அவற்றின் உணர்வுகள் ஒத்திசைந்து இருக்குமாறு ஆசிரியர் கவனமாகக் கதையை வளர்த்துச் செல்கிறார். கற்பனை கலக்காத வகையில் அந்தப் பாத்திரங்களை உயிரோட்டமாக உலவவிட்டிருப்பது சிறப்பம்சம். பாத்திரங்கள் தமது மொழியிலேயே உரையாடுவது, களமுனைச் சித்திரிப்பு என்பன நாவலுக்கு வலுச் சேர்க்கின்றன. நாவலில் உறவுமுறை பற்றிய கையாள்கை மிக நேர்த்தியாக உள்ளது. அதிலும், காதல் வாழ்க்கை மிக மென்மையாக ஆசிரியரால் சொல்லப்பட்டுள்ளது. இங்கே இரண்டுவகைக் காதலர்கள் வருகின்றனர். ஒன்று மக்களுக்குள் இருந்த காதலன் காதலி. மற்றது, களமுனைக்குள் இருந்த காதலன் காதலி. புனிதம் கெடாத இந்தக் காதல் பற்றி எமது மண்ணுக்கே உரித்தான வாசனையுடன் ஆசிரியர் கூறுவது சிறப்பம்சம்.

இந்த இரு நாவல்களிலும் வரும் பாத்திரங்கள் எங்களுடன் ஒட்டி உறவாடியவர்கள், எம்முடன் வாழ்ந்தவர்கள். பாகம் 01 நாவலின் நீட்சியாக பாகம்02 அமைந்துள்ளது.

சிலரின் பெயர்கள் மாறியிருக்கலாம். உதாரணத்துக்கு பாகம்01 இல் வரும் வேலாயி என்ற பாத்திரம், பாகம்02 இல் செல்லாயி என்று வருகிறது. இதனை வாசகர்கள் கவனத்தில் எடுத்தால் இடையூறு இருக்காது.

விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகள், ஆட்சேர்ப்பு நடவடிக்கை என எதனையும் விட்டுவைக்காது அத்தனை விடயங் களையும் ஆசிரியர் உள்ளது உள்ளபடி கூறியுள்ளார். ஈழப்போரின் குருதி தோய்ந்த வரலாற்றை யாருக்கும் அஞ்சாது ஆசிரியர் துணிந்து எழுதியுள்ளமை பாராட்டுக்குரியது"என்றார்.

**கருத்துரை** - கே.ரி.கணேசலிங்கம்
*(மூத்த விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

"பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம் 02 நாவல், வன்னிக்களத்தின் எல்லாமுனைகளையும் சமதளத்தில் திறக்கின்ற ஆற்றல் நூலாசிரியருக்கு உண்டு என்பதனைப் பறைசாற்றுகிறது. சாதியம், வர்க்கம், பண்பாட்டு முறை, ஆயுதப்போர் என்பனவற்றை பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை அவர் எடுத்துச் செல்கிறார். நாவலின் மொழிப்பிரயோகம், எனது அப்பாவுடன் நான் கதைப்பது போன்றுள்ளது. அந்தளவுக்கு எளிமையானது. ஒத்தாப்பு என்ற சொல்லை உதாரணமாகக் குறிப்பிட லாம். அந்தளவுக்கு சொற்களையும் ஆசிரியர் ஆவணப்படுத்தியுள்ளார்.

நாவலில் கையாளப்பட்டுள்ள சொற்களில் பலவற்றை நாம் இன்று இழந்துவிட்டோம். மாவோ, லெனின், ஸ்ராலின், நெப்போலியன் ஆகியோரைப் பற்றியும் நாவ லுக்கிடையில் பொருத்தமான இடங்களில் நூலாசிரியர் கையாண்டுள்ளார்.

இவர்கள் போருடனும் புரட்சியுடனும் தொடர்புபட்டவர்கள். இது நூலாசிரிய ருடைய உத்திகளில் ஒன்றாகும். போரில் விழுவது தோற்பதற்கல்ல, எம்மை நாம் தக்கவைப்பதற்கு என்பதனையும் கதாபாத்திரங்கள் மூலம் ஆசிரியர் கூறுகிறார்" என்றார்.

நீந்திக்கடந்த நெருப்பாறு பாகம் 01 மற்றும் 02 நாவல்கள், ஈழப்போரின் ஒரு காலகட்ட வரலாறு. அனைவராலும் படிக்கப்பட வேண்டிய ஒன்று.

போர் வாழ்க்கையில் எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்கள், இழப்புக்கள், துயரங்களை குருதியும் சதையுமாகப் பதிவாக்கியுள்ள இந்த நாவல்கள், அடுத்த தலைமுறைக்கு எண்ணற்ற செய்திகளைச் சொல்லும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ லயனல்

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் விழா கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு தினங்கள் கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வுகள் நாடக விழாவாகவும் இரண்டாம் நிகழ்வுகள் இயல் இசை விழாவாகவும் முன்னெடுக்கப்பட்டன.

**முதல்நாள் நாடக விழா**

நாடக விழா கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் முதுநிலை விரிவுரையாளர் எஃப்.ரி.அல்பிரட் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.திலகநாதன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஆசியுரையை கலாசாலை அதிபர் வீ.கருணலிங்க மும் தொடக்கவுரையை முத்தமிழ் மன்ற உபகாப்பாளர் மு.ஜெயக்குமா ரியும் வாழ்த்துரையை மூத்த விரிவுரையாளர் வி.எஸ் குணசீலனும் வழங்கினர்.

கலாசாலையில் இல்லங்கள் பிரிக்கப்பட்டு இல்லங்களுக்கு இடையே நாடகப் போட்டி நடைபெற்றது. தமிழ் மணம், விசப் பாம்புகள், எப்போது விடியல், சிந்தனை செய் மனமே என்ற தலைப்பில் போட்டி அடிப்படையில் நாடகங்கள் மேடை யேறின. இவற்றில் ராதா இல்லம் மேடையேற்றிய 'எப்போது விடியல்' என்ற நாடகம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. கலாசாலை ஆசிரிய பயிலுநர் வீ.ரவிமோகன் சிறந்த நாடக இயக்குநராகவும், அ.அம்ரூஸ் சிறந்த நடிகராகவும் தெரிவாகினர்.



நாடகப் போட்டியின் நடுவர்களாக யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையின் நாடகத்துறை ஆசிரியர் யோ. யோண்சன் ராஜ்குமார், மகாஜனக் கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் து.அயூரன். . பெரியபுலம் மகா வித்தியாலய நாடகத்துறை ஆசிரியர் அனோஜா எடியரசன், யாழ். மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. குமரன், மானிப்பாய் இந்துக் கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இரண்டாம் நாள் இயல் இசை விழா**

இரண்டாம் நாள் இயல் இசை விழா கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தயாபரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்றக் காப்பாளர் அ.பௌநந்தியும் வாழ்த்துரையை விரிவுரையாளர் கழகத் தலைவர் செ. செல்வமலரும் ஆற்றினர். தங்கப் பதக்கத்துக்கான பட்டிமன்றப் போட்டி மற்றும் விழாவையொட்டி நடத்தப்பட்ட கலைப் போட்டிகளில் முதலிடம் பெற்ற ஆற்றுகைகள் என்பன மேடையேற்றப்படவுள்ளன. அத்துடன் கலா சாலை அதிபர் வீ.கருணலிங்கத்தின் அண்ணாவியத்தில் ஏழுபிள்ளை நல்லதங்காள் இசைநாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. நடன ஆற்றுகைகளுக்கான நட்டுவாங்கத்தை ரஜிதா சின்னத்துரை மேற்கொண்டார். குரலிசை மதுசிகன், வயலின் குகபரன், மிருதங்கம் நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

கல்விக்கான சமவாய்ப்புக்கள் இலங்கையில் எட்டப்பட்டுள்ளனவா இல்லையா என்ற பொருளில் நடைபெற்ற பட்டிமன்றப் போட்டியில் நடுவர்களாக வே.சிவராசா, ந.ஜங்கரன், இ.சர்வேஸ்வரா ஆகியோர் பங்கேற்றனர். ■

# மூத்த ஊடகவியலாளர் சலீமுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது





இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரான நிந்தவூரைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எல்.எம். சலீம், ஊடகத்துறையில் ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளதைக் கௌரவித்து, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

நிந்தவூர் பிரதேசசபை மண்டபத்தில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டார்.





சிறப்பு அதிதியாக தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கலந்து கொண்டார். அதிதிகளாக முன்னாள் அமைச்சர்களான ஹசன் அலி, பஷீர் சேகு தாவூத் ஆகியோரும் அரசவர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஏ.எம். ஜெமீல், லக்சல நிறுவனத் தின் தலைவர் ஏ.எம்.எம்.இஸ்மாயில் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

விழாவில் ஊடகவியலாளர் சலீம் பற்றிய தகவல்களோடு ஊடகத்துறை மற்றும் அரசியற்துறை சார்ந்தவர்களின் வாழ்த்துச் செய்திகளுடன், 'பொன் விழா காணும் ஏ.எல்.எம்.சலீம்' என்ற பெய [illegible] மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

புதன்பொய்கை
புதன்கிழமை | 12 | ஜூலை 2017

கலாபூஷணம் பி.திருநாவுக்கரசு

ஈழத்து நாடக வரலாற்றைக் கருத்தினிற் கொள்வதாயின் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் அளப்பெரிய பங்கை மறுக்கவோ, மறைக்கவோ, முடியாதென்பது நிதர்சனம். அன்னாரது 28ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த எட்டாம் திகதி சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. அதையொட்டி இந்தக் கட்டுரை வெளியாகின்றது.



# நாடகத்துறையில் முத்திரை பதித்த

## கலாநிதி, நடிகமணி வி.வி.வைரமுத்து

ஆயகலைகள் அறுபத்துநான்கினில் நுண் கலைகளாக திகழ்வது ஐந்து கலைகளே ஆகும். அவை இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், என்பனவாகும். இவற்றுள் நாடகம் என்பது முத்தமிழும் அடங்கப்பெற்றது. எனவே நாடகத்தில் முத்தமிழையும் கற்றுத்தேர்ந்து சிறந்ததுடன், நடிப்பையும், கலையாகவும், வாழ்வாதாரமாகவும், கொண்ட பரம்பரையில் பிறந்து வளர்ந்த காரணத்தாலும், பேராசிரியர்களின் துணை கொண்டும் தமக்கென ஒரு நாடகப்பாணியை உருவாக்கி படித்தவர்கள், பாமரர்கள், அனைவருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கள்வராகத்திகழ்ந்தார் வி.வி. வைரமுத்து. இவ்வாறாகப் புடம் போட்ட தங்கமாக திகழ்ந்த நடிகமணியை பற்றி இன்று பல ஆராய்ச்சி கட்டுரைகள் அமரர் கவிஞர், கலாநிதி, காரை சுந்தரம்பிள்ளையினாலும் தற்காலத்தில் கனடாவில் வதிவிடமாகக் கொண்ட இலங்கை வானொலி புகழ் மதியழகனாலும், நூல்களாக வெளியிடப்பட்டன. மல்லாமல் வேறு நாடகத் துறையில் சர்வ கலாசாலை பட்டம் பெறுவதற்குரிய ஆராய்ச்சி கட்டுரைகளாக நடிகமணியின் நாடக வரலாற்றைப் பற்றி எழுதி பட்டம் பெறும் மாணவர்களும் உள்ளனர், என்பதை அறியும் போது அவரது பெருமையை வேறு கூறவேண்டுமா?

**நாடகப் பாரம்பரியம்**

இவரது நாடகப் பாரம்பரியத்தைக் கூறும்போது இவரது தாய் மாமன் அமரர் வி.பிள்ளைநாயகம் தனது முழு முதற் குருவாகக் கொண்டவர். பிள்ளைநாயகம் நாடக நடிகர்களுடனும் வாத்திய கருவிகளுடனும் நாடகம் நடிக்கச் செல்லும் போது சிறுவன் வைரமுத்து தானும் வர வேண்டும் என்று அடம்பிடித்து அழுவாராம். ஆனால் அவன் நன்றாக படித்து முன்னேற வேண்டும் ஆனால் நாடகத்தால் படிப்பு கெட்டுவிடும் என்பதால் அவரை கூட்டிச் செல்லாது அவரை தடுத்துவிட்டு தாங்கள் குழுவுடன் போய்விடுவார்கள். ஆனால் சிறுவன் வைரமுத்துவோ இடையில் ஏற்படும் குறுக்கு பாதைகளால் ஓடி, வண்டில் சிறிது தூரம் போனாலும் அவ்விடத்தில் மறித்துக் கொண்டு அழுதுக் கொண்டு அடம்பிடிப்பாராம். இதனைக் கண்ட மாமனார் மனம் இரங்கி தனது சால்வையை கொடுத்து உடுத்திவிட்டு தனது வண்டிலில் ஏற்றிச் செல்வாராம். இவ்வாறுதான் நாடகமணியின் நாடக வரலாறு ஆரம்பமாகியது.



**தமிழ் நாட்டுக்குப் பயணம்**

இவர் முத்தமிழிலும் சிறந்து விளங்கியதிற்கு காரணங்கள் பல உண்டு. இவர் இசைக் கலையை தனது மாமனாரிடம் கற்றார். பின்பு இசையை மேலும் கற்பதற்காக தமிழ் நாட்டுக்குச் சென்று சிறந்த கலைஞராக விளங்கிய மதுரை செல்லப்பாவிடம் கற்றார். அதுவும் அல்லாமல் வயலின் வித்துவான் அமரர் வி.கே.குமாரசாமியிடமும் வயலின் வாசிக்கக் கற்று அரங்கேற்றமும் செய்து கொண்டார். மற்றும் மிருதங்கம் வாசிப்பதிலும் சிறந்தவர். தமிழைப் பொறுத்தளவில் சென்னை பாலபண்டிதர் பரீட்சையிலும் தேர்வு பெற்றவர். ஒரு காலத்தில் இடதுசாரி இயக்கங்களோடு அரசியலில் ஈடுபட்டதுடன் சிறந்த மேடைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். இவருடைய பேச்சு பல்லோராலும் பாராட்டப்பட்டது. இவர் நாடக மேடையை பெண் பாத்திரங்களில் தான் முதன் முதலில் நடித்தார். இவரது அழகுத் தோற்றம் பெண் வேடத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருந்தது. இதனால் அக்காலக்கட்டத்தில் ஏனைய நாடகக் குழுவினர் பெண் பாத்திரத்தில் நடிப்பதற்கு இவரையே தேர்வு செய்து அழைத்துச் செல்வர். சன்மானமும் வழங்குவர். இதன் பின் இவர் நாடகங்களுக்கு ஹார்மோனியம் வாசிப்பதில் மிகவும் சிறந்தவராகக் காணப்பட்டதால் குடா நாட்டில் நடக்கும் நாடகங்களுக்கு இவரையே ஹார்மோனிய பக்க வாத்திய கலைஞராக அழைத்துச் செல்வர். இவரது அண்ணன் அமரர் வி.காசிநாதன் சிறந்த மிருதங்கக் கலைஞராகவும் திகழ்ந்தவர். இதனால் இவர்கள் இருவருமே சேர்ந்து பலவிதமான நிகழ்வுகளுக்கு பக்க வாத்தியக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

> “ இவரது நாடகப் பாரம்பரியத்தைக் கூறும்போது இவரது தாய் மாமன் அமரர் வி.பிள்ளைநாயகத்தை தனது முழுமுதற் குருவாகக் கொண்டவர். பிள்ளைநாயகம் நாடக நடிகர்களுடனும் வாத்திய கருவிகளுடனும் நாடகம் நடிக்கச் செல்லும் போது சிறுவன் வைரமுத்து தானும் வர வேண்டும் என்று அடம்பிடித்து அழுவாராம். ஆனால் அவன் நன்றாக படித்து முன்னேற வேண்டும், நாடகத்தால் படிப்புக் கெட்டுவிடும் என்பதால் அவரைக் கூட்டிச் செல்லாது தடுத்துவிட்டு நாடகக் குழுவினர் போய்விடுவார்கள்.

**ஆர்மோனியம் வாசிப்பதில் வித்தகர்**

இவர் சமூக நாடகங்களுக்கு பின்னணியிசையை ஹார்மோனியத்தில் வழங்கும்போது பலர் பாராட்டி கௌரவித்ததும் அல்லாமல் நாடக நடிகர்களுக்கு உற்சாகத்தையும் கொடுத்தது. இவர் சில நாடக மேடைகளில் பக்க வாத்திய ஹார்மோனிய கலைஞராக திகழும் போது இடையிடையே தனது கணீரென்ற குரலால் பக்கப்பாட்டுகள் பாடுவதிலும் மிகவும் சிறந்து விளங்கினார். இவ் வேளைகளில் ‘50க்கு 50 கேட்டுமென்ன சிங்களக் கொடி தான் பறக்குது’ என்ற கீதத்தை பாடுகின்ற போது பார்வையாளர்களின் கையொலி வானைப் பிழந்துவிடும்.

இவர் தனது நாடக குழுவுக்கு வசந்தகான சபை என்ற பெயரை இட்டிருந்தார். இவரின் நடிப்பில் சிகரமான இசை நாடகமான ‘மாயான காண்டம்’ என்பதை பார்த்த பேராசிரியர் அமரர் சு.வித்தியானந்தனும் அக்காலத்தில் அரச அதிபராக கடமையாற்றிய அமரர் இலங்கையர்கோனும் இந்த நாடகத்திற்கு மெருகூட்ட வேண்டும் என்று நினைத்தனர். நாடகத்திற்குரிய வசனங்களை சீரமைத்துக் கொடுத்தும் நடிக்க வைத்தனர். இவ்வாறாக மெருகூட்டபட்ட நாடகத்தை பெரதெனிய சர்வ கலாசாலையில் மேடையேற வைத்து சகோதர இன மக்களும் தமிழ் கலையின் பெருமையையும் நடிகமணியின் நடிப்பு திறமையையும் பராட்டதக்கதாக செய்த பெருமை பேராசிரியர் வித்தியா னந்தருக்கே சேரும்.

**இனக் கலவரத்தின் பின்னர்**

1983 இனக்கலவரத்தின் பின் வடமாகாணத்திற்கும், தென்மாகாணத்திற்கும், தொடர்பற்ற கால நிலை உருவாகிய கட்டத்தில் இலங்கை நடாளுமன்ற உறுப்பினர் அமரர் ரிச்சாட் பத்திரன நாடாளுமன்றத்தில் கலாச்சாரம் சம்பந்தமான உரையாடலின் போது தாங்கள் முன்னர் வடமாகாணம் செல்லும் போதெல்லாம் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் மயான காண்டம் நாடகம் பார்த்து பரவசமடைவதும் தற்போது தடைப்பட்டுள்ளது என்ற கவலையை தெரிவித்ததை பத்திரிகையில் பிரசுரமாகி இருந்ததும் கவனிக்க தக்கது.

இவருடைய நடிப்பை தமிழ் நாட்டில் இருந்து யாழ் வருகை தந்த பல கலைஞர்கள் குறிப்பாக குலதெய்வம் ராஜகோபால் என்ற நடிகர் இவரது நடிப்பை பார்த்து கண்ணீர் சிந்தியதுடன் உடனடியாக மேடையேறி கட்டியணைத்து பாராட்டியதும் பலரது கவனத்தை ஈர்த்தது. இவருடைய கலைத் தொண்டுகள் பலவாராகினும் அவற்றுள் சிலவற்றையே குறிப்பிட முடிந்தது. எனவே இவரது நாடக அறிவும் ஆற்றலும் எத்தனையோ விதமான பல நன்மைகளையும் வழங்கியது அன்னாரது அளப்பெரிய தொண்டினைக் கருதி நினைவு கூருவது இக்காலக்கட்டத்தில் சாலச் சிறந்ததாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடேயப்பா!

## 75இல் சனத்தொகை 1000 கோடியை எட்டும்

# நம்புவீர்களா?

கே.எஸ்.சிவஞானராஜா

உலக சனத்தொகை நாளுக்கு நாள் அபரிமிதமாக அதிகரித்த வண்ணமே உள்ளது. இதற்கு மூலகாரணம் உலகத்தின் ஆறுதல் பெண்ணாக பூமித்தாய் இருப்பதுவேயாம். போரென்றாலும், பிரிவொன்றாலும், துறவென்றாலும் ஊடலென்றாலும், வெற்றி என்றாலும் தோல்வி என்றாலும் இவை யாவற்றிற்கும் ஆறுதலும், அபயமும் இல்லறத்திலே அதிகமாய்க் கிடைப்பதனால் அன்னியோன்னியம் மேலிடுகிறது. அடேயப்பா ஒவ்வொரு நாளும் இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. இதை எண்ணும் போது நாமும் ஒரு குழந்தையாய் வண்ணம் பெறுகிறோம். சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேசியா, ஆபிரிக்கா, பிரேசில், பாகிஸ்தான், நைஜீரியா, பங்களாதேஷ், ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளே அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள நாடுகளாகும். உலக சனத்தொகையானது 83 மில்லியன் தொகையினால் அதிகரித்து வருகின்றது. இதன்படியே சனத்தொகை வளர்ச்சியானது 2075 ஆம் ஆண்டில் ஆயிரம் கோடி மக்கள் தொகையைக் கொண்டமைந்திருக்கும் என்பது மிகவும் சரியான கணிப்பாகும்.

பொதுவாக இறப்பு வீதத்தைக் காட்டிலும் பிறப்பு வீதம் அதிகரித்திருப்பதே சனத்தொகை அதிகரிப்புக்கான காரணமாகும். நவீனயுகம் மருத்துவத்துறையில் முன்னேறியிருப்பதனால் இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது என்றும் கூறலாம்.

**பதின்மம்**

பதின்ம வயது என்பது பருவவயதாகும். இந்த வயதானது உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் ஆணையும் சரி, பெண்ணையும் சரி தடுமாற வைத்து மனக் கிளர்ச்சியூட்டும் வயதாகும். சரி எது, பிழை எது, செய்தால் என்ன?, நான் செய்யப்போகிறேன் இவ்வாறு பருவ ஆளுமை கொடி கட்டிப் பறக்கும். நன்மையெது? தீமை எது? நீதி எது அநீதி எது? என்பவற்றை நிறுத்துப் பார்க்க இயலாத முடியாத பயணமது. அப்போ என்ன செய்யும்? தப்புகளையும் தவறுகளையும் வரவழைக்கும் இதன் பல னாகச் சினிமாவில் நடப்பது போன்று அவசரக் கல்யாணம், அடுத்தடுத்துப் பிள்ளைகள் தவிர்க்க முடியாததாக செயல் நிலையாகப் போய்விடுகிறது.

பதின்ம வயதிலே அதிகளவு குழந்தைகளைப் பெறும் நாடாக ஆபிரிக்கா முன்னணியில் நிற்கிறது. தென்கிழக்காசிய நாடுகள் போட்டா போட்டியாக நிற்கும் அளவுக்கு சனத்தொகையில் வெற்றிவாகை சூடி வருகிறது.

அநுராதபுர மாவட்டத்திலேயே இலங்கையில் கூடுதலான சனத்தொகை வீதம் காணப்படுகிறது. 2001 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வருடாந்த சனத்தொகைப் பெருக்க விகிதம் 1.2 ஆக இருந்தது. 2012 இல் சனத்தொகைப் பெருக்க வீதம் 0.7 ஆகக் குறைந்திருக்கிறது. இதில் அவதானிக்கக் கூடிய விடயம் என்னவெனில் குடும்பக் கட்டுப்பாட்டு முறையில் மக்கள் அவதானமாக இருக்கின்றார்கள்.

சனத்தொகை விகிதம் ஒரு நாட்டில் குறைவடைகிறதென்றால் மறுதலையாக அங்கு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதுதான் உண்மையாகும். எது எப்படியோ 2075 ஆம் ஆண்டு ஆயிரம் கோடியாகவும் 2100 ஆம் ஆண்டில் ஆயிரத்து 100 கோடியாகவும், 2200 ஆம் ஆண்டில் ஆயிரத்து 200 கோடியாகவும், உயரும் நிலையில் பூமியின் இயற்கை வளங்கள், இரகசியங்கள் ஆகியவற்றின் முடிச்சுகள் அவிழ்க்கப்படுமாக இருந்தால் இந்தப் பெருக்கமானது ஒருபெரிய பிரச்சினையல்ல. இல்லாதபட்சத்தில் உலகத்தில் கலக்கமும் தவிர்க்க முடியாமல் போய்விடும்.

> “ சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேசியா, ஆபிரிக்கா, பிறேசில், பாகிஸ்தான், நைஜீரியா, பங்களாதேஷ், ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளே அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள நாடுகளாகும். உலக சனத்தொகையானது 83 மில்லியன் தொகையினால் அதிகரித்து வருகின் றது. இதன்படியே சனத்தொகை வளர்ச்சியானது 2075 ஆம் ஆண்டில் ஆயிரம் கோடி மக்கள் தொகையைக் கொண்டமைந்திருக்கும் என்பது மிகவும் சரியான கணிப்பாகும்.

**அடுத்த கட்டம்**

உழைக்காமலே சொகுசாக வாழப் பழகிக்கொண்ட ஒரு சமூகம் எம்மிடையே வளர்ந்து விட்டது. இதைவிட வறுமை, பட்டினி போர், கொள்ளை நோய், இடப்பெயர்வு என உலகம் மாறிய வண்ணம் தன்னை இழந்து வருகிறது. பருவநிலைமாறுபாடு, சூழல்மாசடைதல், போதைதுஷ்பிரயோகம் என்று பொலிவிழந்து வருகின்ற நிலையில் அதிக சனத்தொகைப் பெருக்கம் அதீத துன்பத்தையே விளைவிக்கும். கருச்சிதைவு, சிசுக்கொலை, கருணைக்கொலை, தற்கொலை, தற்கொலைத்தாக்குதல், பயங்கரவாதத் தாக்குதல், அணுக்குண்டுத்தாக்குதல், போர்த்தாக்குதல், விசவாயுத்தாக்குதல், இடர்பேரழிவு மண்சரிவு, விபத்துக்கள், விமானத் தாக்குதல், அகதி முகாம் தாக்குதல், வெள்ள அழிவு என அத்தனை காரணங்களும் உலக சனத்தொகைக்கு அச்சுறுத்தலாக இருப்பது ஆற அமர இருந்து சிந்திக்கத் தக்கது. இயற்கை உயிரிழப்பு ஒரு புறம் இருக்க அகால உயிரிழப்புக்கள் பற்றி மதங்கள் அதிகம் கண்ணீர் வடித்ததாகத் தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும் உலகசனத்தொகையானது ஆயிரம் கோடியை எட்டும்போது அதனைச் சமாளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மூன்றாந்தப்பு நாடுகள் மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் ஆண்டவன் தான் எமைக் காப்பாற்ற வேண்டும்.

உலகில் 925 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடிய வண்ணம் உள்ளனர். ஒவ்வொரு வருடமும் 25 மில்லியன் குழந்தைகள் உலகில் பட்டினியால் இறக்கின்றனர். அதைவிட போசாக்கின்மையால் 170 மில்லியன் குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆக, ஆயிரம் கோடியென்பது நிம்மதியைத் தரக்கூடிய விடயமாக மக்கள் எண்ணுவதற்கும் அமைவதற்கு நாம் எந்த வித முயற்சியையும், முன்னேற்பாடுகளையும் எடுக்காத நிலையில் மனிதம் மனிதனாவது மிக மிகக் கடினமே மனிதன் மனிதமாவதும் கடினமே.

# வளர்மதியின் கலைமகள் மதுமதி....!

வளர்மதி முன்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி மதுமதி செல்வராசாவின் அர்ப்பணிப்பான சேவையில் கொக்குவில் பெருமிதமடைந்த வேளையில் இறைவனும் "மதுமதி" அம்மாவின் சேவைக்காக அவரைத் தானழைத்துக் கொண்டார். இந்தச் செய்தி மேலிட வளர்மதி சமூகம் சொல்லொணாத் துயரம் அடைந்து தம்நிலை தளர்ந்தது. கண்ணீர் சொரிந்தது. மலரும் மொட்டுக்கள் பூக்க மறந்து சோர்ந்து வாடின. வளர்மதி பாடசாலை முன்றலும், கட்டடங்களும், வாசல்களும் சோபையிழந்து முகாரி இராகத்தால் தோய்ந்தன. குழந்தைகள் வீரிட்டு அழுதனர். ஆசிரியர்களும் கண்ணீரால் தம்மை நனைத்தனர்.

25 வருடங்களுக்கு மேலாகக் கொக்குவில் வளர்மதி முன்பள்ளியில் ஆசிரியராக, அதிபராக, நிர்வாகியாக, ஆளுமைமிக்க வழிகாட்டியாக மிளிர்ந்த மதுமதி அன்னையவள்பிள்ளைகள் அனைவருக்கும் தாயாக, தந்தையாக, சகோதரியாக, தமிழ் அமுதாக, ஆங்கில விழுதாக, சங்கீதப் பல்லவியாக, நாடக, சித்திர, புத்தாக்க முதல்வியாக, சர்வமத சமரச சாகித்திய சொரூபிணியாக கொலுவிருந்து முன்பள்ளியின் வரங்களுக்கு அதிபதியாக இருந்தவர்.




எந்த விழாவாக இருந்தாலும் விழாவை இரம்மியமாக்கிக் களைகட்டச் செய்து பாராட்டுதல்களைச் சொந்தமாக்குபவர் மதுமதியேயாவார். கண்காட்சி, விளையாட்டு, கலைவிழா, நவராத்திரி , ஒளிவிழா, புத்தாக்கம், போட்டிகள், பெற்றோர் சந்திப்பு, சுற்றுலா, ஆங்கில தினம் எதுவாகினும் முன்னின்று வெல்லவைப்பவர் இவரே! நிமிர்ந்த நன்நடை, நேரிய பார்வை, தளராத நெஞ்சுரம், தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வாராத கொடை யாவுமே மது மதியாய் மிளிர்கின்றன. இவர் ஒரு பாஸ்ரர் அத்துடன் கொழும்பு இறையியல் கல்லூரி இயக்குநரும் கூட. பிள்ளைகளும் நல்ல பேறுடையவர்களாகத் திகழ்வதும் இவரின் பெருமைகளைப் பேறுடையதாக்குகிறது. எது எப்படியோ மதுமதி அம்மா கர்த்தருக்குள் நித்திரையான பாக்கியம் அவரை என்றும் வரமுள்ளவராக்கி வளர்மதிக்கு வாழ்த்துக் கூறவைக்குமே.

கருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்

## கும்பம்

அவிட்டம் 3,4ஆம் பாதம், சதயம்,
பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்



எதிலும் புதுமையைப் புகுத்துபவர்களே! உங்கள் ராசிக்கு 6இல் ராகுவும் 12இல் கேதுவும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 13.2.19 வரை அமர்ந்து பலன் தர உள்ளார்கள்.

**ராகுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு 6இல் அமரும் ராகுவால், ராஜதந்திரமாக முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தினருடன் பாசமாக நடந்துகொள்வீர்கள். பிரிந்திருந்த கணவன், மனைவி ஒன்று சேருவார்கள். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பாதியில் நிற்கும் வீடு கட்டும் பணியைத் தொடங்க, வங்கிக் கடனுதவி கிடைக்கும். வழக்கில் தீர்ப்புச் சாதகமாகும். மகனுக்கு வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பயணங்களால் உற்சாகம் அடைவீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். ஆனால், முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன்பு சட்ட வல்லுனர்களை அணுகித் தெளிவு பெறவும்.

உங்கள் ராசிக்குப் பூர்வ புண்ணியாதிபதியும் அஷ்டமாதிபதியுமான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் 27ஆம் திகதி முதல் 4.4.18 வரை ராகு பகவான் செல்வதால், குடும்பத்தில் இருந்துவந்த குழப்பங்கள் நீங்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். 5.4.18 முதல் 10.12.18 வரை உங்கள் ராசி நாதனும் விரயாதிபதியுமான சனி பகவானின் பூசம் நட்சத்திரத்தில் ராகு பகவான் செல்வதால், ஆளுமைத்திறன் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டாகும். வீட்டைப் புதுப்பிக்கும் முயற்சிகள் பலிதமாகும். உங்களின் தனாதிபதியும் லாபாதிபதியுமான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் 4ஆம் பாதம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 வரை ராகு பகவான் செல்வதால், எதையும் பேச்சால் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உயர்கல்வியில் விரும்பிய பாடப்பிரிவில் சேருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளைச் சரிசெய்வீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் இலாபம் ஈட்டுவீர்கள். தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். பழைய வேலையாட்கள் மீண்டும் வந்துசேருவார்கள்.

வியாபாரத்தில் நண்பர்கள் உதவுவார்கள். பங்குதாரர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். உத்தியோகத்தில் உங்களுக்கு இருந்துவந்த அவப்பெயர் நீங்கும். உயரதிகாரிகள் உங்களின் கடின உழைப்பைப் புரிந்துகொள்வார்கள். கலைத்துறையினரே! வேற்றுமொழி வாய்ப்புக்களால் புகழ் அடைவீர்கள். மூத்த கலைஞர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கேதுவின் பலன்கள்:** உங்கள் ராசிக்கு 12இல் கேது அமர்வதால், மனப்போராட்டங்கள் முடிவுக்கு வரும். வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். சுபச் செலவுகள் ஏற்படும். புதிய பதவிக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்கப்படும். செலவுகள் அதிகரிக்கும்.

உங்களின் திரிதியாதிபதியும் ஜீவனாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம் 1, 2ஆம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், இளைய சகோதர வகையில் செலவுகள் அதிகரிக்கும். சொத்துகள் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்காதீர்கள். அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்களின் அஷ்டமாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 30.11.17 முதல் 6.8.18 வரை கேது பகவான் செல்வதால், வாகனத்தைச் சீர் செய்வீர்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் சப்தமாதி பதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ஆம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், வாழ்க்கைத்துணையின் உடல் நலனில் அக்கறை காட்டவும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1562- கடமை நிறைவேற்று பாப்பரசர் டியாகோ டி லண்டாவால் மாயா புனித நூல்கள் எரியூட்டப்பட்டன.
1580-முற்காலத்தைய அச்சிடப்பட்ட பைபிள்களில் ஒன்றான ஒஸ்ரோக் பைபிள் ஸ்லவிக் மொழியில் வெளியிடப்பட்டது.
1776- கப்டன் ஜேம்ஸ், தனது மூன்றாவது நாடுதேடும் கடற்பயணத்தைத் தொடங்கினார்
1790-மதகுருக்களுக்கான சிவில் அரசியலமைப்பு, பிரான்ஸ் தேசிய சட்டவாக்க சபையால் அனுமதிக்கப்பட்டது.
1790 - ரஞ்சித் சிங் லாகூரை வெற்றி கொண்டு, பஞ்சாப்பின் மன்னர் ஆனார்.
1920-சோவியத், லித்து வேனிய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம், லித்துவேனியாவின் சுதந்திரம் ரஷ்யாவால் அங்கீகரிக்கப்பட்டது.
1948- லொட் மற்றும் ரம்ளா நகர்களிலிருந்து பலஸ்தீனியர்களை வெளியேற்றுமாறு இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் டேவிட் பென் கியூரின் கட்டளையிட்டார்.
1971- ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் கொடி முதன் முதலாகப் பறக்க விடப்பட்டது.
1975-போர்த்துக்கல்லிடமிருந்து சவோரம் மற்றும் பிறின்சிப் சுதந்திர அறிவிப்புச் செய்தன.
1979 - கிரிபாதி தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றன.
2006-லெபனான், இஸ்ரேல் இடையே போர் மூண்டது.

## நாளை

**ஆனி - 29**
வியாழக்கிழமை -13.07.2017
திதி:சதுர்த்தி பி.ப.01.08 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ.10.48 வரை
சுபநேரம்:07.29-08.59 வரை
ராகுகாலம்:01.29-02.59 வரை

## மணிவிழாக்காணும் இலட்சுமிக்கோர் ஆசிக்கவி

### திருமதி
### தனலட்சுமி கணபதிப்பிள்ளை



புள்ளி மான் போல் துள்ளி விளையாடும்
பள்ளி மாணவர்க்கு பாடம் சொல்ல வந்த
பள்ளி ஆசான் தரணி போற்றும்
தன்னிகர் இல்லாத்
தலைவி தனலட்சுமி அவர்கள்
தன்னையே தஞ்சமென்று வந்தோர்க்கு
தான தனம் தரும்
தனலட்சுமியும் இவரே
கலங்கிய விழிகளுடன்
கண்சிமிட்டும் சிறார்களிற்கு
கனிமொழி பேசும்
கல்வித்தாயும் இவரே
மதியை வதனத்தில் சூடி
மதிவதனி மதிவாணனை
வளர்த்தெடுத்த
மாபெரும் மாதாவும் இவரே.

**அகவை அறுபதில் இளைப்பாறும் ஆசானை**
**அன்னை அருள் பெற்று பல்லாண்டு காலம்**
**வாழ்கவென வாழ்த்துகின்றோம்.**

**" வாழ்க வளமுடன் "**

அமரர் மணியம் கணபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த தினத்தில் 20.07.2017 அன்று மணி விழாக்காணும் இவரை அமரர் மணியம் கணபதிப்பிள்ளை அவர்கள் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**நெருங்கிய உறவுகள்.**
நெல்லண்டை,
பருத்தித்துறை.

## ஈரவிழிகளுடன் பத்தாண்டு

தோற்றம்
27 . 08 . 1951



மறைவு
12 . 07 . 2007


### அமரர் மணியம் கணபதிப்பிள்ளை
(முன்னாள் அதிபர் - யா/ தும்பளை சிவப்பிரகாச ம.வி)

இத்தி மரத்தாள் வித்திட்ட இறைபணி நாயகனாய்
நாமகள் நாவிருக்கும் நற்பணி நாவலனாய்
அன்பு மழலைகளிற்கு அன்பான அப்பாவாய்
அல்லும் பகலும் அயராது உழைக்கும் அதி உயர்ச்சிறந்த அதிபருமாய்
பல்லாண்டுகளாய் பல பாலகரை புலமையில் திறமை சேர்த்த நற்குருவாய்
தன்னையே நம்பி வந்த மாணவமொட்டுக்களை
தலைசிறந்த மாமேதைகள் ஆக்கி நின்றாய்
ஊண் உறக்கமின்றி ஊருக்காய் உழைத்து நிற்க
ஊரார் மெய் சிலிர்க்க ஊட்டிவளர்த்த உங்கள்
மாணவர்கள் மனம் நோக மாற்றான் மடிக்குள் மடிந்ததேனோ?
பாத்திருக்க பத்தாண்டு போனாலும்
பார்வை விழி நோகும் வரை பார்த்திருப்போம்
வண்ண நிலா வாடி நின்றாலும் வழி மீது
விழி வைத்து காத்திருப்போம்
என்றும் உங்கள் நினைவலையுடன்

" சாந்தி " நெல்லண்டை,
பருத்தித்துறை.

அமரர் மணியம் கணபதிப்பிள்ளை
ஞாபகார்த்த நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** நண்பருக்குத் தேவையான உதவி செய்வீர்கள். சமூகத்தில் உங்களை பற்றிய மதிப்பீடு உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும்.



**இடபம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம்.



**மிதுனம்:** குடும்ப பிரச்னை பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள்பணிச்சுமைக்கு ஆளாகலாம். உடல்நலனில் அக்கறை தேவை.



**கடகம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தாய்வழி உறவினர்களிடம் இணக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். நிலுவைப் பணம் எளிதில் வசூலாகும்.



**சிங்கம்:** பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் அபரிமித வளர்ச்சி உண்டாகும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவர்.



**கன்னி:** யாருக்கும் தகுதி மீறி வாக்குறுதி அளிக்க வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். வருமானம் வரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.



**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய கால அவகாசம் தேவைப்படும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**தனுசு:** குடும்ப பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்திற்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.



**மகரம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.



**கும்பம்:** சூழ்நிலை அறிந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் திண்டாடுவர். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.



**மீனம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். விரும்பிய சுபச் செய்தி வீடு வந்து சேரும்.



# 23ஆம் புலிகேசி -2 மிக விரைவில்

இம்சை அரசன் 23ஆம் புலிகேசி திரைப்படத்தின் இரண்டாம் பாகம் பற்றிய அறிவிப்பினை இயக்குநர் சங்கர் அறிவித்துள்ளார். இதன்படி இந்தப் படத்தை தயாரிக்கும் பணிகள் இன்னும் சில வாரத்தில் முழுமையாக தொடங்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

11 ஆண்டுகளுக்கு முன்னர் சங்கரின் எஸ் பிக்சர்ஸ் சார்பில் இயக்குநர் சிம்புதேவன் இயக்கத்தில் வைகைப் புயல் வடிவேலு இரட்டை வேடத்தில் நடித்த படம் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி. இந்தப் படம் மிகப் பெரிய அளவில் வெற்றிபெற்றது. இந்த நிலையில் தனது கீச்சகப் பக்கத்தில் 23ஆம் புலிகேசி திரைப்படத்தின் இரண்டாம் பாகம் தொடர்பான அறிவிப்பை சங்கர் அண்மையில் வெளிப்படுத்தினார்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 5 | 3 | | | 7 | 6 | 9 |
| | | 3 | | 7 | | | 8 | |
| 6 | 7 | | | 8 | | | 1 | |
| 7 | | | | 3 | | | | |
| | 1 | | | | 4 | | 7 | 6 |
| | | | | | | 2 | | |
| | | 1 | 5 | | | | | |
| 5 | | 9 | | | | 1 | | |
| | | 7 | 2 | 1 | 3 | | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பிக் பாஸ்ல எல்லாரும் லூசாத்தான் சுத்துதுங்க... உண்மைல



பிக் லூ சுன்னுதான் சொல்லனும்

யானை மேலே நீங்கள் ஏறினால் சவாரி யானை உங்கள் மீது ஏறினால் ஒப்பாரி!



மழைக்கு ஒதுங்க பள்ளிக்கூடங்கள் நிறைய வந்து விட்டன... ஆனால்....



மழைதான் இப்போது [illegible]...!

பாத்த உடனே எப்படி லவ் வரும்னு கேக்குறிங்களே?




அப்போ வீட்ல பாக்குற பையன மட்டும் எப்படி பாத்த உடனே ஒத்துக்குரிங்க?



முகிலன்™ twitter

நீ படிப்பது சாதாரண செயலாக இருந்தாலும், நீ படைப்பது சாதனையாக இருக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மைத்திரி நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாதேஷ் பயணமாகவுள்ளார். இதன்போது, அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் ஷெய்க் ஹசீனா, சுகாதார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்களுடன் கலந்துரையாடவுள்ளார். இருநாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சிலவும் இந்தச் சந்திப்பின்போது, கைச்சாத்திடப்படவுள்ளன.

(த)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்தபகுதியில் இரண்டு அல்லது மூன்று அறைகளைக்கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு - 077 201 7094

### விற்பனைக்கு

மிக்சர் கடைக்குரிய கண்ணாடி, சோக்கேஸ், பிரீசர், கண்ணாடிக்கதவு பிரீசர், பிரஸ் யூஸ் தயாரிக்கும்கண்ணாடிகூடுஉள்ளன குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. 0776313251

### தேவை

வெள்ளவத்தையில் இயங்கிவரும் பிரபலமோட்டார்வாகனதிருத்துமிடம் ஒன்றிற்குவேலைபழகவிரும்புவோர் தேவை.
**தங்குமிடவசதிசெய்துகொடுக்கப்படும்**
**தொடர்பு-0777727569**

## VACANCIES

இலங்கையின் முன்னனி கல்வி நிறுவனத்தின் Jaffna வலையமைப்புடன் இனைந்து கொள்ளுங்கள்

## English Teacher

Full Time / Part time
Sent cvs within one week through email

**BRITISH COLLEGE**
23, Kachcheri nallur Rd, Jaffna.
Email. : britishcollegekandy@gmail.com

---

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 581 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 11.07.2017

வெற்றி இலக்கங்கள்
17 19 56 64 F
08 11 40 55
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.30,370,843/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 161
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 11.07.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 93,726,600/-

E 09 30 71 72
39 45 54 63

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 11.07.2017 | 2157 | நீலம் |

மேடம்
வெற்றி இலக்கங்கள்
27 43 44 49
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 000, 000/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
05 29 30 45

2017.07.14 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை
சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வேலைவாய்ப்பு

எமது அமெரிக்கன் கொம்பனியானது இறக்குமதி மற்றும் மொத்த வியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிறுவனம் வடபகுதியில் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களில் 10 புதிய கிளைகளை ஆரம்பிக்க வுள்ளது. இந்த 10 புதிய கிளைகளிற்கும் 45 பதவிவெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

- விற்பனை பிரதிநிதி (O/L)
- மேற்பார்வையாளர் (O/L)
- அலுவலகர் (A/L)
- உதவி முகாமையாளர் (A/L)
- முகாமையாளர் (A/L)

தொடர்பு - 077 298 6763, 077 062 1631

---

## நிர்வாக அலகுக் கட்டடம் மற்றும் பனைசார் பயிற்சிப் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டுவிழாவும் மாநாட்டு மண்டபத் திறப்பு விழாவும்

**காலம்**
12.07.2017 புதன்கிழமை
காலை 9.30 மணி

**இடம்**
பனை ஆராய்ச்சி நிறுவன வளாகம்
கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்

**தலைமை**
வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர்
(தலைவர், பனை அபிவிருத்திச் சபை)

**பிரதம விருந்தினர்**
கௌரவ அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்
(சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.

**சிறப்பு விருந்தினர்**
திருமதி எஸ்.வினோதினி
(பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், வடமாகாணம்)

**கௌரவ விருந்தினர்**
செல்வி ந.ரஞ்சனா
(உதவிப் பிரதேச செயலர், சாவகச்சேரி)

திரு.கே.திருக்குமார்
(பிரதிப் பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், வடமாகாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

---

# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
# வைரவர் சாந்தி
# உற்சவம் - 12.07.2017

மேற்படி வைரவர் சாந்தி உற்சவம் இன்று (12.07.2017) புதன்கிழமை பி.ப 5.30 மணிக்கு விசேட அபிசேகம் நடைபெற்று பி.ப. 6 மணியளவில் வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி தொடர்ந்து வைரவர் பெருமான் வீதி உலா வருவார்

## விசேட இசை நிகழ்ச்சி

சாவகச்சேரியை சேர்ந்த காலஞ்சென்ற நாதஸ்வர மேதை கலாநிதி பஞ்சாபிகேசன் அவர்களின் பேரப்பிள்ளைகளான
**நாதஸ்வர வித்துவான்கள் - விக்னேஸ்வரன் சித்தாத்தன்**
**விக்னேஸ்வரன் பிரபித்தன் இணைந்து வழங்கும் நாதசங்கமம்**
**அணிசேர் இசைக்கலைஞர்கள்**

| தவில் | தபேலா | ஓகன் | Octopad | சித்தார் |
|---|---|---|---|---|
| பா. உதயசங்கர் | விமல்சங்கர் | மைக்கல் | குமணன் | ராயூ |

ஒலி - பண்டத்தரிப்பு தேவன் சவுண்ட்
ஒளி - பண்டத்தரிப்பு நவா ஒளி அமைப்பினர்

வைரவர் சாந்தி உபயகாரர்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான தொண்டர் சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவாழ்வு மையம்
### முதியோர் பராமரிப்பிற்கான கற்கைநெறி
### (Certificate in Geriatric Care)



நிறைவாழ்வு மையத்தினால் நடத்தப்படவுள்ள (Center For Holistic Healing) மேற்படி கற்கைநெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் சனிக்கிழமை (15.07.2017) மு.ப. 9 மணிக்கு இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள எமது மையத்தில் இடம்பெறும்.

→ பயிற்சிக்காலம் - 06 மாதங்கள் வார இறுதி நாள்களில் மட்டும்.
→ தேவையான தகைமை - முதியோர் இல்லத்தில் பணியாற்றுபவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள்.
→ பயிற்சிக்கட்டணம் - 15, 000/= (புலமைப்பரிசில் வசதி உண்டு)

**தொடர்புக்கு - 021 321 0854, 077 917 7230**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில்
பொருளாதார அபிவிருத்தி
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. வி.தயாபரன்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி**
**உத்திராடம்மா விவேகானந்தன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
30 . 12 . 1940



ஆண்டவன் அடியில்
12 . 06 . 2017

**அமரர் விவேகானந்தன் உத்திராடம்மா**
**(செல்லம்மா)**

பண்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் பிறப்பிடமாகவும்
திகழ்ந்த எமது குடும்ப விளக்கே
உமது ஆடம்பரமில்லாத வாழ்வும் ஆலோசனைகளும்
இன்னமும் எங்கள் மனங்களில்
அகலாது நிற்கின்றதே!
நீங்கள் திடீரென எங்களை
விட்டுப்பிரிவீர்கள் என
நாங்கள் ஒரு கணமும் நினைக்கவில்லை
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும்
உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

APC முன் ஒழுங்கை,
கைதடி மேற்கு, கைதடி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்
### திருமதி புஸ்பவசந்தன் ஆன்சுதர்சனா



பிறப்பு 29.06.1984 இறப்பு 10.07.2017

வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பவசந்தன் ஆன்சுதர்சனா கடந்த (10.07.2017) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் தேவதாசன் சத்தியவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நாகேந்திரம் (கொக்குவில்) மற்றும் புஸ்பராணி (கம்பர்மலை) தம்பதியரின் அன்பு மருமகளும் புஸ்பவசந்தனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேதநாயகம் தங்கம்மா தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் கிதியோன், ஸ்ரெவ்னி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜென்சி, சரணியா, தர்ஷன், தர்மினி, ஆர்த்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும் எட்வின்சபேஷன், தினேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் யேசுராஜரஞ்சன், யேசுவரன் தவராஜா (மாவட்ட வைத்திசாலை, வல்வெட்டித்துறை), V.S.நேசகுமார் (BOC, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கிருபை நேசகுமாரியின் பெறாமகளும் பத்மாவதி, காந்திமதி, தனலாவதி, சத்தியவதி, கமலாவதி ஆகியோரின் அன்பு மருமகளும் சத்தியதாஸனின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (13.07.2017) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 923 3064** **தகவல்: குடும்பத்தினர்.**

## அரசிலிருந்து...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்றவகையில் அரச தலைவர் வழங்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்டே கூட்டு அரசில் நீடிப்பதா அல்லது வெளியேறுவதா என்ற முடிவை மேற்படி உறுப்பினர்கள் எடுக்கவுள்ளனர்.

"கூட்டு அரசுக்குள் சுதந்திரக் கட்சி எவ்வாறு செயற்படவேண்டும், அதன் கொள்கைத்திட்டம் எப்படி அமையவேண்டும், தனியார்மயமாக்கத்துக்கு முழு எதிர்ப்பையும் வெளியிடவேண்டும் என்பது உட்பட மேலும் பல விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படும். அது தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது" என்று கட்சியின் மூத்த உறுப்பினர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஓகஸ்ட் மாதத்துடன் நிறைவுக்கு வருகின்ற நிலையில் அதை 2020 வரை நீடிப்பதா அல்லது எத்தகைய முடிவை எடுப்பது என்பது குறித்து சு.கவுக்குள் கருத்தாடல் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே மைத்திரி அணியிலுள்ள உறுப்பினர்கள் சிலர் டி.பி. ஏக்கநாயக்க தலைமையில் ஒருங்கிணைந்து, முக்கிய பல நிபந்தனை களை முன்வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

அதிருப்தி நிலையில் இருக்கும் மேற்படி உறுப்பினர்களுள் சிலர் மகிந்த அணியான பொது எதிரணியுடனும் இரகசியப் பேச்சுகளை நடத்தி வருகின்றனர் என்றும், அண்மையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்தனர் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன.

அதேவேளை, மைத்திரி அணியிலுள்ள 18 சு.க. உறுப்பினர்கள் தேசிய அரசிலிருந்து விலகிச் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர் என அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்கவை மேற்கோள்காட்டி அண்மையில் தகவல் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## மதிலுடைத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் 12 பேருக்கு மட்டும் பிணை வழங்கிய நீதிவான், ஏனையவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் மயானத்தின் மதில் மீளக் கட்டப்படும் வரை பிணை வழங்கப்படாது என்று நீதிமன்று அறிவுறுத்தியது.

புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி மயானத்தின் அமைவிடம் தொடர்பில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். மற்றொரு தரப்பு அந்த மயானம் தொடர்ந்தும் அதில் இருக்க வேண்டும் என்றும் தமது பாவனைக்கு விடப்பட வேண்டும் என்று கோருகின்றனர். அது தொடர்பான முரண்பாடு களின் போது நீதிமன்ற அனுமதியுடன் அந்த மாயனத்துக்கு அமைக்கப்பட்ட மதிலின் ஒருபகுதி உடைக்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

மயானத்தின் மதிலை உடைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 45 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அச்சுவேலிப் பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் சமர்ப்பித்தனர். அந்த 45 பேரையும் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அவர்களில் அரசியல் கட்சி ஒன்றின் செயற்பாட்டாளர் உள்ளிட்ட 6 பேர் கடந்தவாரம் நீதிமன்றில் சரணடைந்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மேலும் 40 பேர் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்றுச் சரணடைந்தனர். அவர்களுக்கு பிணை வழங்குமாறு அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பம் செய்தனர். எனினும் 12 பேருக்கு மட்டும் பிணை வழங்கிய நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், ஏனைய 28 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, உடைக்கப்பட்ட மதிலை மீளக் கட்டும் பணிகளும் நேற்று ஆரம்பிக்க ப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-37)

## மரண அறிவித்தல் (பிற்போடப்பட்டுள்ளது)
### திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் கடந்த (10.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

இன்று நடைபெறவிருந்த அன்னாரது இறுதிக் கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (13.07.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.9.00 மணியளவில் கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி றோட்,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 222 8752, 077 625 8752**

## மரண அறிவித்தல்
# சின்னக்கண்டு பொன்னு



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் மெய்கண்டான் வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்கண்டு பொன்னு கடந்த (10.07.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வல்லிபுரம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னக்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மா மற்றும் அன்னம், காலஞ்சென்ற ரத்தினம் மற்றும் செல்வம், தெய்வானைப்பிள்ளை, காலஞ் சென்றவர்களான கடவுள், சின்னராசா, இராஜேஸ்வரி மற்றும் சிவஞானேஸ்வரி, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வைரப்பிள்ளை, கந்தசாமி, நடராசா (கனடா), தவமணி (சுவிஸ்), அருள்நாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான விஜயராணி, ஞானதேவி மற்றும் ரத்தினாவதி (கனடா), கணேசலிங்கம் (சுவிஸ்), சவுந்தரநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் கமலதாஸ் காமினி, சிவதாஸ் கிரித்திகா (லண்டன்), சிவதர்சினி தர்மகுலசிங்கம் (லண்டன்), கிருஷ்ணதாஸ் மைதிலி, நிலோஜினி ஜெனார்த்தனன், கஜவிந்தன், மிடில்லா, கஜதீபா (கனடா), தர்ஷபா (கனடா), ஸ்ரீராம் (கனடா), பிரியங்கா (சுவிஸ்), வாகுல் (சுவிஸ்), சிவகரன், சிவறஞ்சினி, சிவசங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைஷ்ணவி, கஜராம், சஜித்தன் (லண்டன்), கம்சிகா (லண்டன்), கவின் (லண்டன்), கிரிசாந், தசிந்தன், தர்சாந், சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2017) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை, செம்மண்வாய்க்கல் இந்து மயானத்திற்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மெய்கண்டான் வீதி,**
**இளவாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 271 4900**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

தறகுப் பன்னாட்டுப் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது இலங்கை அயலுறவு அமைச்சு.

2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வாசிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்க நியமிக்கப்பட்டார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்க, மகிந்த ராஜபக்ச அரசு பதவியில் இருந்த கடைசி மாதமே அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார்.

அங்கு பதவியேற்ற பின்னர், பதவியில் இருந்த இரண்டு ஆண்டுகளிலும் ஒருபோதும் அவர் நாடு திரும்பவில்லை என்றும் தெரியவருகிறது.

இவரது பதவிக்காலம் கடந்த ஆண்டு இறுதியுடன் முடிவுக்கு வந்தது. இதையடுத்து அவர் நாடு திரும்பி இராணுவத்தில் பணியைத் தொடர வேண்டியிருந்தது.

எனினும், வாசிங்டனில் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்காலம் முடிந்த பின்னர், பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்க நாடு திரும்பவில்லை. அவர் தலைமறைவாகி விட்டார் எனக் கருதப்படுகிறது.

பதவியில் இருந்த கடைசி நாள், தாம் நாடு திரும்பவுள்ளதாக பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்க கூறியிருக்கிறார். அவரது தொலைபேசி இலக்கம் பயன்பாட்டில் இருக்கவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்று தூதரக அதிகாரிகளுக்குத் தெரியவில்லை.

அமெரிக்காவில் உள்ள சகோதரியின் பாதுகாப்பில் பிரிகேடியர் ஜயுந்த ரத்நாயக்க ஒளிந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த இவர், நாடு திரும்புவதை தவிர்ப்பதற்காக அமெரிக்காவில் தலைமறைவாக இருக்கக் கூடும் என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

அவரை இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவராக இராணுவம் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, விடுமுறை எடுக்காமல், தப்பிச் சென்றுள்ள பிரிகேடியர் ஜயந்த ரத்நாயக்கவைக் கைது செய்வதற்கு பன்னாட்டுப் பொலிஸாரின் உதவியை இலங்கை அயலுறவு அமைச்சு கோரியுள்ளது. (த)

## ஐ.நா...

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் இன்று புதன்கிழமை வவுனியாவில் நீதிபதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஐந்து நாள்கள் பயணமாக நேற்று முன் தினம் இலங்கை வந்தடைந்த இவர், வவுனியாவில் மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ரி.எல்.ஏ.மனாப் மற்றும் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் வவுனியா மேல்நீதிமன்ற கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கையில் தங்கியிருக்கும்போது, தமிழ்த் தேடியக் கூட்டமைப்பினர், அரச உயர்மட்ட பிரதிநிதிகள், அயலுறவு, சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி, நீதி, பாதுகாப்பு, நிதி, ஊடகம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியமர்வுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளையும், அவர் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

தீவிரவாதக் குற்றங்கள் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் அல்லது தண்டனை விதிக்கப்பட்டுவர்களைச் சந்திக்க, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கும் பென் எமர்சன் செல்லவுள்ளார்.

தனது பயணத்தின் முடிவில், தனது அவதானிப்புகள் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்காக எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்துவார். (த)

## சத்திரச்...

செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரசின் 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டில், வடக்கு மாகாணத்தில் நவீன அடுக்குமாடி அங்காடித் தொகுதி அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அதனை நிறுவ முடிவு செய்யப்பட்டது.

ஏப்ரல் மாதம், இதனை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. செம்மணிப் பகுதியில் நிறுவலாம் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இடத்தின் தூரம், அந்த இடத்தில் பல மாடிகள் அமைப்பதற்குரிய தரைத்தன்மை இல்லாமை என்பன கவனத்தில் எடுக்கப்பட்டு மாற்று இடம் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் புதிய இடத்தைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் நடந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபைஉறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், அ.பரஞ்சோதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு இடங்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. இறுதியில் யாழ்ப்பாண நகரில், சத்திரச் சந்திக்கு அண்மையாகவுள்ள பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. சத்திரச் சந்திப் பகுதியில் ஆலயம் அமைந்துள்ள சூழலை அண்மித்த 1.5 ஏக்கர் நிலப் பரப்பில் நவீன அடுக்குமாடி அங்காடித் தொகுதி அமைக்கப்படவுள்ளது. (த-5-101)

## துன்னாலை...

ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் அதிகள அளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

உயிரிழந்த இளைஞரின் உடற்கூற்றுச் சோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் நடத்தப்பட்டது. இளைஞனின் நெஞ்சுப் பகுதியில் குண்டு துளைத்து இதயத்தில் இருந்து இரத்தம் வெளியேறிமையே உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. உடற்கூற்றுச் சோதனையின் பின்னர் நேற்றுக் காலை சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இறுதிக் கிரியைகள் நடைபெற்று சடலம் வேடுண்டை மயானத்தில் நீதிமன்ற உத்தரவின்படி புதைக்கப்பட்டது.

இறுதி நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். எந்த அசம்பாவித சம்பவங்களும் இன்றி இறுதிக் கிரியை நடைபெற்றது. (ந-26-173)

## ஒற்றையாட்சியை...

நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் ரவியிடம் புதிய அரசமைப்பு குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை மீட்டெடுத்த படையினரைப் பாதுகாப்பதற்காக அரசு என்றவகையில் நாம் உறுதி கொண்டுள்ளோம். இனவாதத்தைத் தூண்டிவிட்டு நாடு என்றவகையில் எம்மால் முன்னேறிச்செல்ல முடியாது. நாம் எல்லோரும் ஒரே தேசத்தினராக முன்னேறிச்செல்ல வலுவான ஆட்சி முறைமை அவசியம் என்ற தீர்மானத்துக்கு வரவேண்டும்.

பௌத்த மதத்துக்குரிய கௌரவம் பெற்றுக் கொடுக்கப்படும். ஒற்றையாட்சி முறைமை சவாலுக்குட்படுத்தப்படாது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே அரசமைப்பு உருவாகும்-என்றார். (த)

## ஹைஏஸ்...

கள் தென்மராட்சி, வரணிப் பகுதியில் மாணவியை வாகனத்தால் வீதியில் தள்ளிவிட்டுத் தப்பிச் சென்றனர்.

உயர் தரத்தில் கற்கும் மாணவி காலை பாடசாலைக்குச் செல்லும்போதே கடத்தப்பட்டார்.

"வாகனத்தில் இருந்து இறங்கிய இருவர் என்னை கட்டாயப்படுத்தி வாகனத்தில் ஏற்றினர். எனக்குத் தெரியாத பாதைகளூடாகச் சென்றனர். சாரதி உட்பட 6 பேர் இருந்தனர். அவர்கள் என்னுடன் வாக்குவாதப்பட்டனர். என்னை இறக்கி விடுமாறு போராடினேன். ஒரு மணி நேரத்தின் பின்னர் வாகனத்தில் இருந்த ஒருவருக்கு அலைபேசி அழைப்பு வந்தது. அதன்பின்னர் என்னை வாகனத்திலிருந்து இறங்குமாறு கூறினார்கள். நான் இறங்கும்போது என்னைத் தள்ளி விழுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

என்னை இறக்கிவிட்ட இடத்தில் குடியிருப்புகளைக் காணவில்லை. சிறிது தூரத்தில் கடை ஒன்று இருந்தது. அங்கு தண்ணீர் குடிப்பதற்காக மெல்ல மெல்லச் சென்றேன். அந்த வழியாக ஓட்டோவில் வந்த இரு பெண்கள் என்னிடம் விடயத்தைக் கேட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

வாகனத்தில் இருந்துவர்கள் கொச்சைத் தமிழில் என்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அவர்களை எங்கள் பிரதேசத்தில் நான் காணவில்லை. அவர்களை அடையாளம் தெரியும்." என்று பாதிக்கப்பட்ட மாணவி கூறினார்.

மாணவியைக் கீழே தள்ளி விட்டபோது விழுந்ததால் அவரது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. மாணவி மேலதிக மருத்துவ சோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கடத்தலில் ஈடுபட்டவர்கள் பிறிதொருவருக்குப் பதிலாக மாணவியைக் கடத்தியிருக்கலாம் என்று தெல்லிப்பளைப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

அதேவேளை, இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் நேற்றுக் கைது செய்யப்படவில்லை என்று கூறப்பட்டது. (ந-9-26)

## பௌத்தத்துக்கே...

டாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பௌத்த தேரர்களுக்கு மீண்டும் வாக்குறுதியளித்துள்ளார்.

அம்பாறை தெஹியத்தகண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அங்கு வந்திருந்த பௌத்த தேரர்களுக்கு இந்த வாக்குறுதியை வழங்கினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கு யோசனைகளை முன்வைப்பதற்காக அமைக்கப்பட்ட உப குழுக்கள் அதன் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன. இது தொடர்பில் நாட்டுக்கு அறிவித்த பின் மக்கள் முன்வைக்கும் கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து எல்லோரின் நிலைப்பாட்டையும் உள்ளடக்கியே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். நாம் எமது நிலைப்பாட்டை மாத்திரம் உள்ளடக்கி தான்தோன்றித்தனமாக அரசமைப்பை உருவாக்கமாட்டோம்.

இப்படித்தான் அரசமைப்பை உருவாக்குவதென்றொர் அறிக்கைகூட எம்கையில் இல்லை. ஆனால் இப்படித்தான் இந்த அரசமைப்பு உருவாக்கப்படும் என்று சிலர் கூறித் திரிகின்றனர். அவர்கள் கற்பனையில் ஏதோவெல்லாம் உளறுகின்றனர். பொய்ப் பிரசாரங்களைச் செய்து மக்களைக் குழப்புகின்றனர்.

பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்படப் போகின்றது என்று கூறி அவர்கள் பௌத்த தேரர்களைக்கூட குழப்பியுள்ளனர். பௌத்த பீடங்களைச் சந்தித்து நான் இது தொடர்பில் தெளிவான விளக்கம் ஒன்றைக் கொடுத்துள்ளேன்.

இந்த அரசமைப்பில் ஒற்றை ஆட்சி முறைமையும் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடமும் ஒருபோதும் மாற்றப்படமாட்டா என்று உறுதியளிக்கின்றேன்.

தேர்தல் முறைமை மாற்றப்படவேண்டும்;விருப்பு வாக்கு முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற மக்களின் விருப்பம் புதிய அரசமைப்பில் நிறைவேற்றப்படும். ஒருபோதும் நாட்டுக்கு விரோதமானமக்கள் விருப்பத்துக்கு முரணான அரசமைப்பு ஒன்றை நாம் உருவாக்கமாட்டோம்என்றார். (த-3)

## இலங்கைக்கு...

சுமார் 70 லட்சம் ரூபா) பெறுமதியான 700 கிலோ கிராம் கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டன. அவை இலங்கைக்கு கடத்தப்படவிருந்தவை என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது" என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் இராமேஸ்வரம் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

"இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி வழியாக இலங்கைக்கு கடல் அட்டைகள் கடத்த இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அதனையடுத்து அந்தப் பகுதிகளில் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது ராமேஸ்வரம் தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள திமு.க. உறுப்பினர் வில்லாயுதத்துக்குச் சொந்தமான தோட்டத்தில் கடல் அட்டைகள் பதப்படுத்தப்பட்டு பொதி செய்யப்படுவதாக வந்த தகவலையடுத்து சிறப்புப் பொலிஸ் குழு சம்பவ இடத்துக்குச் சென்றது. பொலிஸ் குழுவைக் கண்டதும் அந்தத் தோட்டத்தில் இருந்த பத்துக்கும் மேற்பட்டவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

தோட்டத்தில் பதப்படுத்த பயன்படுத்திய எரிவாயு சிலிண்டர், பாத்திரங்கள், உயிருடன் கூடிய சுமார் 300 கிலோ கடல் அட்டைகள் மற்றும் பதப்படுத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 400 கிலோ கடல் அடடைகளைப் பொலிஸ் குழு கைப்பறியது.

வில்லாயுதம் மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தப்பியோடியவர்களைத் தேடும் பணிகளும் இடம்பெறுகின்றன. கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளின் பன்னாட்டு மதிப்பு சுமார் 30 லட்சம் ரூபா (இந்திய மதிப்பில்) என மதிப்பிடப்பட்டுள்ளது" என்று தமிழகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 10 தினங்களில் இராமநாதபுரம் மாவட்ட கடலோரப்பகுதிகளில் சுமார் ஒரு கோடி ரூபா (இந்திய மதிப்பில்) மதிப்பிலான இரண்டாயிரம் கிலோ கடல் அட்டைகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் தமிழகப் பொலிஸார் கூறினர். (வ-21)

## தகவல்...

வேண்டியதில்லை. தகவல் அதிகாரிகள் சுயாதீனமாக முடிவெடுக்கலாம். தகவல்கள் வழங்கியதற்காகப் பழிவாங்கப்பட்டால், தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தகவலுக்கான உரிமைக் கோரிக்கைப் படிவத்தின் ஊடாகத் தகவல்கள் கேட்கப்படும்போது, திணைக்களத் தலைவர் அல்லது மேலதிகாரியிடம் அனுமதி பெற்றா தகவல் வழங்க வேண்டும் என்று, தகவல் அதிகாரி ஒருவர் தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளார்.

அதற்கு ஆணைக்குழு வழங்கிய பதிலில், தகவல் அலுவலர்கள் சுயாதீனமானவர்கள். ஆணைக்குழுவைப் போன்று அவர்கள் சுதந்திரமானவர்கள். கேட்கப்படும் தகவலை, சட்டத்திற்கு அமைவாக வழங்க முடியும். தகவல் வழங்கப்பட்டதற்காகப் பழிவாங்கப்பட்டால், ஆணைக்குழு அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று ஆணைக்குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். (த-5)

## மைத்திரி...

திரி ரணில் தலைமையிலான தேசிய அரசை அடிபணிய வைக்கப்போவதாக தேசிய தொழிற்சங்க சம்மேளனம் சூளுரைத்துள்ளது. அந்தச் சம்மேளனத்தின் தலைவர் கே.டி. லால்காந்த இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

சைட்டம் குழந்தையை தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டிருக்கும் தேசிய அரசு சாத்வீகப் போராட்டங்களை அலட்சியம்செய்து அடக்குமுறையைப் பிரயோகித்து வருகின்றது. ஜனநாயக உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டன. நாட்டின் பொருளாதாரம் அடியோடு சரிந்துபோய்விட்டது. அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்ல மக்கள் திணறிக்கொண்டிருக்கும்போது அரசியல்வாதிகள் சொகுசுக் கார்களையும், மாளிகைகளையும் கேட்டு அடம்பிடித்து வருகின்றார்கள். இந்தத் தேசிய அரசின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக மாபெரும் மக்கள் வெள்ளத்தைத் திரட்டி போராடவுள்ளோம். எதிர்வரும் 20ஆம் திகதி எங்களது தேசிய மாநாடு நடக்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து எங்களது போராட்டம் ஆரம்பமாகும். அரசு சைட்டத்தை இழுத்து மூடும்வரை அந்தப் போராட்டம் தொடரும்என்றார். (த)

## கட்டுப்பாடில்லாத...

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோர சமிக்ஞைக் கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, ஆதிகோவில் பகுதியைச் சேர்ந்த க.ராஜ்குமார் (வயது- 18) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்தபோதே விபத்து நடந்துள்ளது. அதிக வேகத்துடன் பயணித்ததால் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுவிலகியது என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவரின் உடல் பளை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


கிளிநொச்சியில் உள்ள உறவினரின் மரண வீட்டுக்குச் சென்ற சமயமே விபத்து நடந்தது என்று கூறப்படுகின்றது.

(ஐ-408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகும் எண்ணமில்லை

## இப்படிச் சொல்கிறார் மத்தியூஸ்





சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை இழந்த போதிலும் தலைமைப் பதவியில் இருந்து விலகும் எண்ணமில்லை என்று இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் தெரிவித்தார்.

சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐந்தாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்று அந்த அணி 3:2 என்ற கணக்கில் கிண்ணம் வென்றது. இந்தத் தோல்வியால் மத்தியூஸ் பதவியிலிருந்து விலகுவாரா என்பது தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் எழுந்தன. இந்த நிலையில் ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து பதவி விலகுவது தொடர்பிலான கருத்துக்களை மத்தியூஸ் வெளிப்படுத்தினார்.

"என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் இது மிகவும் மோசமான தோல்வி. இந்தப் படுதோல்வியை ஜீரணிக்க முடியவில்லை. ஆடுகளத்தை தவறாக கணித்தது என எல்லாமே எங்களுக்கு எதிராக அமைந்துவிட்டது. இருந்தாலும் எந்தச் சாக்குப்போக்கும் சொல்லக்கூடாது. சிம்பாப்வே அணியை நாங்கள் வெற்றி கொள்வதற்கான சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. சிம்பாப்வே வீரர்கள் சிறந்த கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். தற்போது வரை நான் எனது தலைமைப் பதவியில் இருந்து விலகுவது குறித்து நினைக்கவில்லை. அதற்கு இன்னும் நேரம் உள்ளது. அதைப்பற்றி யோசிக்க கொஞ்சம் நேரம் தேவை. தேர்வாளர்களுடனும் பேச வேண்டியுள்ளது. இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. நாங்கள் வெற்றிக்காக முயற்சி செய்தோம். ஆனால், பல தவறுகளைச் செய்து, அதை இழந்துவிட்டோம்" என மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# நடால் வெளியேற்றம்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் முன்னணி வீரர் ரபேல் நடால்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 4ஆம் இடத்திலுள்ள ஸ்பெய்ன் வீரரான நடால், பன்னாட்டுத் தரப்படுத்தலில் 16ஆவது இடத்தில் உள்ள லக்சம்பேர்க் வீரர் முல்லரை எதிர்கொண்டார். ஆட்டத்தின் ஆரம்பம் முல்லருக்குச் சாதகமாக அமைந்தது. அவர் முதல் இரு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். சரிவில் இருந்து மீண்ட நடால் அடுத்த இரு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். ஐந்தாவது செற்றைக் கைப்பற்றுபவரே ஆட்டத்தின் வெற்றியாளர் என்ற நிலையில் அந்த செற், இரு வீரர்களினதும் விடாப் போராட்டத்துக்கு ஏற்ப நீண்டு சென்றது. ஒருவாறாக முல்லர் 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றதை அடுத்து 2:3 என்ற செற் கணக்கில் நடால் வெளியேற்றப்பட்டார்.

முன்னதாக நடைபெற்று முடிந்த பிரான்ஸ் தொடரை நடால் கைப்பற்றியிருந்தார். இதனால் அவர் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் விம்பிள்டனில் அவர் ஏமாற்றினார். (ம)


# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி நிகழ்வும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் செல்வவிநாயகம் அகிலேஸ்வரன்



பிறப்பு
13.08.1962

இறப்பு
15.04.2017



திதி :- சங்கடஹர சதுர்த்தி

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது அப்பாவே!
உங்கள் பதுமையான பேச்சும் பதுமை நடையும்
நொடியினிலே காணாது தவிக்கின்றோம்
உங்கள் வாய்மொழி நின்றாலும் மூடிய விழி மலர்ந்திட நின்றாலும்
எங்கள் மூச்சில் கலந்திருப்பீர்கள் அப்பா!
என்றும் எங்கள் பேச்சில் நிறைந்திருப்பீர்கள் அப்பா!
எங்களை விட்டு எங்கே விலகியுள்ளீர் அப்பா!
வாழ்க்கையில் மீண்டும் குழந்தையாக
எங்களிடமே வருவீர்கள் தானே அப்பா?
இன்றுடன் தொண்ணூறு நாள்கள் முடிந்தாலும் அதுமட்டும் அல்ல மீண்டும்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 15.04.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்வவிநாயகம் அகிலேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டி நாளை (13.07.2017) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் மறைவுச் செய்தி அறிந்து உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஆறுதல் கூறி யோருக்கும், பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திகிரி, புலோலி வடகிழக்கு,
புலோலி.

குடும்பத்தினர்.
077 484 5598


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டுக்குழிக்கு தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 12
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100மீற்றர் ஓட்டத்தில் சுண்டுக்குழிக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. 18 வயதுப்பிரிவு பெண்கள் பிரிவில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மேரி தர்சிகா 13:70 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.
கிளிநொச்சி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜி.பி.பவித்திரா 13:90 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும், முருங்கன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜி.எம்.ஜெறோமிக்கா 14:40 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

**உதயதாரகையின் கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவனஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

**அன்ரனிஸின் கால்பந்தாட்டம்**

இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் யோன் கில்லறி ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநெச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புகுளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநெச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)



# காளியம்பாள் அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் 98ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட தாச்சித் தொடரில் தாவடி காளியம்பாள் அணி சம்பியனானது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அம்பாள் அணி சம்பியனானது.
(ம-23)

# சங்கானை சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணி மோதியது. இதில் சங்கானை பிரதேச செயலக அணி 25:17, 25:22 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி சம்பியனானது.
(ம-422-108)



*வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரராக மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். கலைவேந்தன் குரூஸ் தெரிவு செய்யப்பட்டார். (ம-422)*



*வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் பி.பவித்ரா தெரிவு செய்யப்பட்டார். (ம-422)*

# பயிற்சியாளரானார் ரவி சாஸ்திரி



இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். 2019ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத் தொடர் வரை அவர் அணியில் நீடிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த அனில் கும்ளே, இந்திய அணித்தலைவர் கோக்லியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து புதிய தலைமைப் பயிற்சியாளரைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தள்ளப்பட்டது. பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. சேவாக், ரவி சாஸ்திரி போன்ற இந்திய அணியின் முன்னாள் வீரர்களும், சில பன்னாட்டுப் பயிற்சியாளர்களும் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் ரவி சாஸ்திரி பொருத்தமானவராக அடையாளம் காணப்பட்டு இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டார். எதிர்வரும் 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் வரை அவரே இந்திய அணியைப் பயிற்றுவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# இலங்கை – தென்னாபிரிக்கா இன்று எதிர்த்துப் பலப்பரீட்சை

பெண்களுக்கான உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டமொன்றில் இலங்கை அணி தென்னாபிரிக்காவை எதிர்த்து மோதவுள்ளது.
இங்கிலாந்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. ஓர் ஆட்டத்தில் இலங்கையை எதிர்த்து தென்னாபிரிக்கா மோதவுள்ளது. ஏனைய இரு ஆட்டங்களில் ஒன்றில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து இந்தியாவும், மற்றையதில் இங்கிலாந்தை எதிர்த்து நியூசிலாந்தும் மோதவுள்ளன. இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.
(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெடரர் மிரட்டலாட்டம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிற்சர்லாந்தின் வீரர் பெடரர் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் றோயர் பெடரரை எதிர்த்து ஜேர்மனிய வீரர் செரேவ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 7:6, 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னேற்றம் கண்டார் பெடரர்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான ஆஸ்திரேலியத் தொடரில் பெடரர் சம்பியனாகியிருந்தார். எனினும் அடுத்தடுத்த குறுகிய தொடரில் அவர் பெரிதளவில் சாதிக்கவில்லை. இதனால் தற்போது நடைபெற்றுவரும் விம்பிள்டன் பகிரங்கத் தொடரில் பெடரர் மீது எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இலங்கை கிரிக்கெட் எங்கு செல்கிறது? கேள்வி எழுப்பினார் குமார் சங்கக்கார



சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை இலங்கை அணி இழந்ததை அடுத்து, இலங்கை கிரிக்கெட் எதை நோக்கிச் செல்கிறது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார. சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை 3:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. இலங்கை அணி சிம்பாப்வேக்கு எதிராக இலங்கையில் வைத்து தொடரை இழந்த சந்தர்ப்பமாக இது பதிவானது. இதனால் இலங்கை அணியின் மீதும் மத்தியூஸின் தலைமைத்துவம் மீதும் பல விமர்சனங்கள் வைக்கப்பட்டன. சங்காவும் தனது கருத்துக்களை தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

"இலங்கை கிரிக்கட் எந்த திசை நோக்கி பயணிக்கின்றது. தோல்விக்கு பின்னர் கிரிக்கட் நிர்வாகம், வீரர்கள், ரசிகர்கள், அணியின் அதிகாரிகளது உணர்வுகள் எப்படி இருக்கும் என நன்கு தெரியும். இலங்கை அணிக்கு தற்போது உதவி தேவைப்படுகிறது. அரசியல் போன்ற தேவையற்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டாம்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை அணி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பங்களாதேஷுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றவும் பெரும் சிரமப்பட்டது. டெஸ்ட் ஆட்டத்திலும் இலங்கை அணி தோல்வியடைந்தமை குறிப்பிடத் தக்கது.

(ம)

**WIN Repair**

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/Cகளும் வீடுகளுக்கு வந்து சிறந்தமுறையில் திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648 942

**வேலைவாய்ப்பு (Vacancy)**

குமார் printers
அச்சகத்துக்கு அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. புத்தகம் கட்டுநர். (புக் பைன்டிங்) அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. (பெண்கள்) பழகுபவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 3920 797
மானிப்பாய் வீதி, பழம் றோட், ஆறுகால்மடம் சந்தி.

உங்கள் முதற்தர ஆங்கிலப்பயிற்சி மையம் SAAMSON
பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கிலப்பாடநெறி school plus
உங்கள் குழந்தைக்கு 13 வயதாகிவிட்டதா? அப்படியானால் ஷாம்சனின் விசேட ஆங்கிலப் பாடநெறியில் இணைத்து ஆங்கில பாடத்தில் A தர சித்திபெறுவதையும், சிறுவயதிலேயே சரளமாக ஆங்கிலம் பேசுவதையும் இன்றே உறுதிசெய்யுங்கள்.
மேற்படி பயிற்சிநெறியில் தரம் 8, 9, 10, 11 மாணவர்கள் மட்டுமே இணைக்கப்படுவர்
SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்!
3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 15.07.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00
SAAMSON 403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில் அருகில்) யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

TVS
சிறியதானாலும் SUPER சிங்கன்
TVS XL SUPER HEAVY DUTY
அதிக பாரம், அதிக இலாபம்.



இப்போது ரூபா 129,900/-

இந்திக - 0774 636 345 - கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டம்
ரங்கநாத - 0777 283 095 - காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டம்
ஹர்ஷ - 0773 497 641 - கம்பஹா | கேகாலை | கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டம்
ஜனக - 0771 507 552 - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டம்
ரவீந்திர - 0777 215 746 - அநுராதபுரம் | பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டம்
ஜீவன் - 0772 057 660 - பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டம்
நீல்காந்த் - 0773 748 155 - அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டம்
றொஹான் - 0777 782 739 - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம்
கனேஷ் - 0777 419 411 - திருகோணமலை மாவட்டம்
றினோஷான் - 0773 358 305 - மன்னார் மற்றும் வவுனியா மாவட்டம்
துரித அழைப்பு 0114 600 500

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு வகுப்புக்கள்
France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...
இல. 40, பலாலி வீதி, (அரியதுளம்) 0779 789 456 021 221 7781
இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
IELTS Life Skills A1,B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61.கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயபூபதி நாகராசா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபூபதி நாகராசா 08.07.2017 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - மனோன்மணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், நாகராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், தர்மரட்ணம் மற்றும் சீவரட்ணம், கமலபூபதி, இராசபூபதி, செல்வபூபதி, பாலரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணி, பூலோகராசா, மகேஸ்வரி, சாந்தறூபி, மாலினி, இராதாகிருஷ்ணன், இரவீந்திரகுமார், கமலேந்திரன், ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயமோகன், ஜெயரூபி, சுகந்தினி, ஜெயப்பிரியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபேசன், சுபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்சன், ஜினோசன், கிருசயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்லாகம். தகவல்: குடும்பத்தினர்.

077 038 2966

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org